விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 வைகாசி 21 செவ்வாய்க்கிழமை (04.06.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 167

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## மனித உரிமை விவகாரம் பேச
# நியூசிலாந்து அமைச்சர் வருகை!




நியூசிலாந்து வெளிவிவகார அமைச்சர் மறே மக்கோலி இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இன்று இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார். கொழும்புக்கு விஜயம் செய்யவுள்ள இவர், வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆகியோரைச் சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தவுள்ளார். (19ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் தம்பதியர் கடத்தல்
### 9 பேர் கைது



பிரிட்டிஷ் குடியுரிமை பெற்ற இலங்கைத தமிழ் வர்த்தகரையும் அவரது மனைவியையும் சென்னை விமான நிலையத்திலிருந்து கடத்திச்சென்ற குற்றச்சாட்டில் இலங்கைத் தமிழ் (20ஆம் பக்கம் பார்க்க)

## போர் வீரர்களுக்கான வீட்டுத் திட்டம் திருமுறிகண்டியில் விரைவில் திறப்பு!

முல்லைத்தீவு – ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட திருமுறிகண்டி பகுதியில் ரணவிரு ஹம்பான (போர் வீரர களுக்கான வீட்டுத்திட்டம்) என்ற பெயரில் சுமார் 4 ஆயிரம் சிங்கள குடும்பங்களை குடியேற்றுவதற்கான வீட்டுத்திட்டப் பணிகள் நிறைவடைந்திருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

யுத்தத்தின் பின்னர் திருமுறிகண்டி, சாந்தபுரம் போன்ற கிராமங்களை ஆக்கிரமித்திருந்த படையினர் இரணைமடுக் குளத்தினை அடிப்படையாகக் கொண்டு குறித்த பிரதேசத்தில் சிங்கள குடியேற்றத்தை உருவாக்கக் கடுமையான முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர்.

இந்நிலையில் அந்த முயற்சிகள் தமிழ் மக்களின் தொடர் போராட்டங்களால் முறியடிக்கப்பட்டது.

இந்நிலையில் ஏ-9 வீதிக்கு இடது புறமுள்ள அம்பகாமம் பிரதேசத்திற்கு இடைப்பட்ட காட்டுப் பகுதியில் இந்த முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி சுமார் 4 ஆயிரம் சிங்கள குடும்பங்களை (19ஆம் பக்கம் பார்க்க)

## பாரதிய ஜனதாக் கட்சியுடன் ஐவர் குழு இலங்கை வருகை
### நாளை யாழ்ப்பாணத்திற்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கு ஐந்து நாள் பயணமாக இன்று கொழும்புக்கு வருகை தரும் இந்தியாவின் முன்னாள் மத்திய அமைச்சரும் பாரதிய ஜனதாக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவிசங்கர் பிரசாத் உள்ளிட்ட 5 பேர் கொண்ட குழுவினர் நாளை புதன்கிழமை யாழ்ப்பாணத்திற்கும் விஜயம் செய்யவுள்ளனர்.

இந்தக் குழுவில் இந்திய நாடாளுமன்ற உறுப்பினரான சுரேஷ் பிரபு, மூத்த ஊடகவியலாளரான ஸ்வபன் தாஸ்குப்தா, மனித உரிமை ஆர்வலர் மோனிக் அரோரோ, இந்திய வெளிவிவகார அமைச்சின் ஓய்வு பெற்ற அதிகாரி விவேக் கட்ஜ" உள்ளிட்டவர்கள் வருகை தரவுள்ளனர்.

இலங்கையின் பண்டாரநாயக்க சர்வதேச கழகத்தின் அழைப்பின் பேரில் வருகை தரும் இந்தக் குழுவினர் சுவாமி விவேகானந்தரின் 150ஆவது ஆண்டை முன்னிட்டு வெளியிடப்படும் முத்திரை வெளியீட்டு விழாவிலும் கலந்து கொள்ளவுள்ளனர்.

அத்தோடு (19ஆம் பக்கம் பார்க்க)

## சொந்த ஊரில் பொங்கலிட்ட கேப்பாபிலவு மக்கள்!

முல்லைத்தீவு மாவட்டத்தில் இராணுவ தேவைக்காகக் கையகப்படுத்தப்பட்டுள்ள கேப்பாப்பிலவு பிரதேச மக்களை அங்குள்ள ஆலயம் ஒன்றிற்கு, ஒரு தடவை சென்று வழிபடுவதற்கு இராணுவம் ஞாயிறன்று அனுமதி வழங்கியிருந்தது.

இதனையடுத்து, தற்போது கேப்பாபிலவு மாதிரி கிராமம் என்றழைக்கப்படுகின்ற வேறிடத்தில் குடியமர்த்தப்பட்டுள்ள சுமார் 300 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் பத்து உழவு இயந்திரங்கள் உள்ளிட்ட வாகனங்களில் அங்கு சென்று வழிபட்டுவிட்டுத் திரும்பியிருக்கின்றார்கள்.

கேப்பாப்பிலவு மாதிரி கிராமத்தில் கிறிஸ்தவ ஆலயம் அமைக்கப்பட்டுள்ள நிலையில், அங்குள்ள இந்துக்கள் தாங்கள் வழிபடுவதற்கு ஆலயம் ஒன்று தேவை என்பதை உணர்ந்து இராணுவத்தினர் ஆலயம் ஒன்றை அமைத்து அதில் வைப்பதற்கென பிள்ளையார் சிலையொன்றை வழங்கியிருப்பதாக அந்தப் பகுதியின் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் இராசையா பரமேஸ்வரன் தெரிவித்தார்.

இவ்வாறு வழங்கப்பட்ட பிள்ளையார் சிலையைத் தாங்கள் பூர்வீகமாக வழிபட்டு வந்த கேப்பாப்பிலவு (19ஆம் பக்கம் பார்க்க)

### வடக்கு மாகாண சபைத் தேர்தல்
## அரசின் அறிவிப்பின் பின்னரே ஐ.தே.க நிலைப்பாடு வெளியாகும்

வடக்கு மாகாண சபைத் தேர்தல் குறித்து அரசு உறுதியான நிலைப்பாட்டை வெளியிட்டதன் பின்னரே அது குறித்து ஐக்கிய தேசியக் கட்சி தனது நிலைப்பாட்டை தெரிவிக்கும் என ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜந்த கருணாதிலக தெரிவித்தார்.

ராஜகிரியவில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கத்தில் உள்ளவர்கள் சிலர் வடக்குத் தேர்தலை இரத்துச் செய்யுமாறும் 13ஆவது திருத்தத்தை இல்லாதொழிக்குமாறும் கருத்து வெளியிடுகின்றனர். மிருகவதையை தடைசெய்யுமாறு தனிநபர் பிரேரணைகளை கொண்டுவந்து அதனை தடுத்து நிறுத்துவதைப் (19ஆம் பக்கம் பார்க்க

## சீனாவில் தீ 119 பேர் பலி

சீனாவின் வடகிழக்கே கோழி இறைச்சி தொழிற்சாலை ஒன்றில் ஏற்பட்ட தீயில் சிக்கி குறைந்தது 119 பேர் பலியாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தொழிற்சாலையில் தீ ஏற்பட்டதையடுத்து அந்த தொழிற்சாலையிலிருந்து அவசரமாக வெளியேறுவதற்கு வழியில்லாமையினாலேயே இவர்கள் பலியாகியுள்ளதாக அந் நாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன. அத்துடன் நூற்றுக்கணக்கானோர் எரிகாயங்களுக்கு உள்ளாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மிஷாஸி என்ற தொழிற்சாலை நகரத்தில் உள்ள இத்தொழிற்சாலையில் தீ ஏற்படுவதற்கு அம்மோனியா (19ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு. இந்து ஆலயங்கள் உடைப்பு இந்துக் குருமார் ஒன்றியம் கண்டனம்
### ஜனாதிபதிக்கும் மகஜர்



(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பில் கடந்த முதலாம் திகதி இரவு நான்கு இந்து ஆலயங்கள் சேதமாக்கப்பட்ட செயலை சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

இதுதொடர்பில் சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியத்தின் தலைவர் சிவஸ்ரீ சபா வாசுதேவக் குருக்கள் விடுத்த கண்டனச் செய்தியில்,

இந்து ஆலயங்கள் சேதப்படுத்தப்படுகின்ற துன்பகரமான செயல் சமயம் கடந்து கண்டிக்கப்பட வேண்டும் என்றார்.

இதேவேளை, இந்து ஆலயங்கள் சேதமாக்கப்படும செயலை உடனடியாக தடுத்து நிறுத்தக் கோரி இந்துக் குருமார் ஒன்றியத்தால் ஜனாதிபதிக்கு மகஜர் அனுப்பி வைக்கப்படவுள்ளது. (20ஆம் பக்கம் பார்க்க)

## வெலிக்கடையிலிருந்து கைதிகள் வேறிடத்திற்கு

வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளை வேறு சிறைச்சாலைகளுக்கு மாற்றும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஆகஸ்ட் மாதத்திற்குள் இரண்டாயிரத்து 500 கைதிகளை வெலிக்கடை சிறைச்சாலையில் இருந்து வேறு இடங்களுக்கு மாற்றுவதற்கு புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு திட்டமிட்டுள்ளது.

கொழும்பிலிருந்து சிறைக் கைதிகளை வெளியேற்றும் திட்டத்தின் கீழ் இந்த நடவடிக்கை (19ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தப்பியது தங்கச்சங்கிலி பறிபோனது கைப்பை !

## இராமநாதன் ஒழுங்கையில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்து மகளிர் கல்லூரி ஆசிரியை ஒருவரின் தங்கச்சங்கிலியை அறுக்க முற்பட்டவர்கள் தங்கள் முயற்சி தோல்வியடையவே ஆசிரியையின் கைப்பையை அபகரித்துச் சென்ற சம்பவம் ஒன்று சிவகுரு நாதபீடத்தை அண்மித்த இராமநாதன் ஒழுங்கையில் இடம்பெற்றுள்ளது.

நேற்று பிற்பகல் 2.45 மணியளவில் பாடசாலையிலிருந்து வீடு நோக்கி திரும்பிச் கொண்டிருந்த நிலையிலே மேற்படி ஆசிரியையிடம் திருட்டு முயற்சி மேற்கொள்ளப் பட்டுள்ளது.

பிரஸ்தப ஆசிரியை குமாரசாமி வீதி வழியாக யாழ். பல்கலை கழகத்திற்கு அண்மையாகவுள்ள தமது வீடு நோக்கி துவிச்சக்கரவண்டியில் திரும்பிக் கொண்டிருந்த வேளையில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் ஆசிரியையின் தங்கச் சங்கிலியை அறுக்க முற்பட்டுள்ளனர்.

எனினும் ஆசிரியையின் தற்காப்பு முயற்சியால் திருடர்களின் முயற்சி பயனற்று போகவே துவிச்சக்கர வண்டி கூடையிலிருந்த கைப்பையை அபகரித்து கொண்டு மோட்டார் சைக்கிளில் அவர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

திருடர்களால் அபகரிக்கப்பட்ட கைப் பையில் ஆசிரிய சேவைக்கான அடையாள அட்டை , தேசிய அடையாள அட்டை , சிறு தொகைப்பணம் என்பனவும் இருந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (எ-5)

# ஏ.வி. ஆனந்தன் காலமானார்



(யாழ்ப்பாணம்)

சிற்பக் கலைஞர் கலாபூஷணம் ஏ.வி. ஆனந்தன் நேற்றுக் காலமானார். அவருக்கு வயது 67.

சிற்பம், நாடகம் ஆகியவற்றில் உலகளாவிய ரீதியில் தடம் பதித்துக் கொண்ட ஏ.வி. ஆனந்தன், சுனாமி நினைவுகளை தனியொரு மரமொன்றில் வடிவமைத்து பெரும் சாதனை படைத்தவர் .

யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்றத்தின் ஆரம்ப கால உறுப்பினரான ஆனந்தன் நேற்று மாரடைப்பால் காலமானார். (ந)

# மின் கட்டண குறைப்பு ஆராய்கிறது அரசு

மின்சாரக் கட்டணத்தைக் குறைப்பது தொடர்பாக மின்சக்தி அமைச்சு ஆராய்ந்து வருகிறது.

இது தொடர்பான யோசனையை இந்த வருட இறுதியில் அரசாங்கத்திடம் சமர்ப்பிக்க உத்தேசித்துள்ளதாக அமைச்சின் செயலாளர் எம்.சி.பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

மின்சாரக்கட்டண அதிகரிப்பால் மக்கள் எதிர்கொள்ளும் சிரமங்களை கருத்திற்கொண்டு இந்த யோசனை முன்வைக்கப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்பார்த்ததை விட கூடுதலான மழை வீழ்ச்சி கிடைத்துள்ளதாகவும் புதிதாக இரண்டு மின் உற்பத்தி நிலையங்கள் இயங்கவுள்ளதாகவும் எதிர்காலத்தில் மின்சார உற்பத்தி அதிகரிக்கும் எனவும் மின் சக்தி எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

நீரேந்து பகுதிகளில் கணிசமானளவு மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதால் நீர் மின் உற்பத்தியிலும் முன்னேற்றம் ஏற்படும் என அமைச்சின் செயலாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்நிலையில் மின் கட்டணத்தை குறைப்பது தொடர்பில் ஆராய்ந்து வருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-11)

# விஜயவீரவின் மகளுக்கு விளக்கமறியல் நீடிப்பு

மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் தலைவர் ரோஹன விஜயவீரவின் மகளை எதிர்வரும் 10-ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு வத்தளை நீதவான் நீதிமன்ற நீதவான் லங்கா ஜயரத்ன உத்தரவிட்டுள்ளார்.

தனது தாய் மற்றும் சகோதரனை தாக்கியதாக பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டையடுத்தே இவர் மே மாதம் 20-ம் திகதி கைது செய்யப்பட்டார்.

மறைந்த ரோஹன விஜயவீரவின் மனைவி செய்த முறைப்பாட்டையடுத்தே அவரது மகள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட அவரை வத்தளை நீதவான் நீதிமன்றத்தில் அன்றைய தினமே ஆஜர்படுத்திய போது அவரை நேற்று வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (எ-11)

# மாணவர்களுக்கு இராணுவ பயிற்சியா ? தேசிய மாணவர் படையணி மறுப்பு

(யாழ்ப்பாணம்)

பாடசாலை மாணவர்களுக்கு இராணுவப் பயிற்சி? என வலம்புரிப் பத்திரிகையில் வெளியான செய்தி தவறானது என தேசிய மாணவர் படையணி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் 20-வது படைப்பிரிவின் கட்டளை அதிகாரி மேஜர் ஜீ.ஆர்.கமகெதர, உதவிக் கட்டளை அதிகாரி கப்டன் எஸ்.மல்லிகாரட்ண ஆகியோர் கையொப்பமிட்டு அனுப்பியுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தங்களது 01.06.2013 அன்று சனிக்கிழமை வெளிவந்த வலம்புரிச் செய்தியில் 'பாடசாலை மாணவர்களுக்கு இராணுவப் பயிற்சி?' எனும் தலைப்பிட்ட செய்தி தொடர்பாகக் காணப்படும் தவறுகளைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

யாழ்ப்பாணத்திலுள்ள பாடசாலை மாணவர்களுக்கு இராணுவத்தினர் ஆயுதப் பயிற்சி வழங்குவது பலருக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது என்ற செய்தியில், மாணவர்களுக்கான அணிவகுப்பு மரியாதைக்கே ஆயுதம் வழங்கப்பட்டதே தவிர வேறெந்த நோக்கமும் இல்லை.

முடிபடைந்துள்ள யுத்தமானது மீண்டும் வலியுறுத்தப்படும் நிலைபோல 'கடந்த 30 வருடங்களுக்கு முன்னர் தமிழீழ விடுதலைப் புலிகளால் நிறுத்தி வைக்கப்பட்ட' என்ற செய்தி தேவையற்ற பிரசாரமாக நாம் கருதுகின்றோம்.

எமது அமைப்பானது இலங்கைக் கல்வியமைச்சும், பாதுகாப்பு அமைச்சும் இணை செயற்பாடாக வர்த்தமானி மூலம் உள்வாங்கப்பட்ட நிலையில் 'கடேற்' (Cadet)அமைப்பின் ஊடாக செயற்படுத்தப்படுகிறது.

அதில் மாணவர்களுக்கு ஆயுதப் பயிற்சி வழங்கப்படும் என கடேற் பயிற்சியாளர் தெரிவித்ததாக கூறப்பட்ட செய்தியில் உண்மை இல்லை.

மேற்படி தவறான செய்திகள் எம்மை மிகவும் கவலையடையச் செய்கிறது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஏ)

# சேது சமுத்திரத் திட்டத்தை வலியுறுத்திப் போராட்டம்

(கொழும்பு)

சேது சமுத்திரத்திட்டம் நிறைவேற்றப் படவேண்டுமென வலியுறுத்தி மாநிலம் தழுவிய அளவில் போராட்டம் நடைபெறும் என்று திமுக தலைவர் மு.கருணாநிதி நேற்றிரவு அறிவித்துள்ளார்.

கருணாநிதியின் 90-வது பிறந்தநாள் நேற்று திங்கட்கிழமை(03.06.2013) நடந்தது.

அவரது பிறந்த நாளைக் கொண்டாடும் வகையில் நடத்தப்பட்ட பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்ட கருணாநிதி சேது சமுத்திரத் திட்டம் நலம் பயக்கும், தமிழகம் செழிக்கும். அதைப் பல்வேறு காரணங்களைச் சொல்லி கிடப்பில் போட்டிருக்கின்றனர் என்று கூறினார். அது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. அத்திட்டம் அமல்படுத்தபடும் என மத்திய மாநில அரசுகள் அறிவிக்காவிடில் தோழமைக் கட்சிகளையும் இணைத்துக்கொண்டு திமுக பெரும் போராட்டத்தில் இறங்கும் என்று அவர் எச்சரித்தார்.

கருணாநிதிக்கு அரசியல் தலைவர்கள் பலரும் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

திமுக கட்சித் தொண்டர்களும் பல இடங்களிலும் சிறப்புக் கொண்டாட்டங்களை நடத்தியிருந்தனர். (எ-11)

# கையெழுத்து வேட்டை தொடங்கியது

வட மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் மகஜர் ஒன்றில் கையெழுத்து பெறும் மாபெரும் நடவடிக்கையொன்று தெற்கில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

களனி தர்மாயதன நிலையத்தில் நேற்று திங்கட்கிழமை ஆரம்பித்த இந்த கையெழுத்து பெறும் நடவடிக்கையில் தேசப்பற்றுள்ள பிக்குகள் முன்னணியின் தலைவர் பெங்கமுவே நாலக தேரர் முதல் கையெழுத்திட்டார்.

அதனைத் தொடர்ந்து மகாசங்கத் தேரர்கள், தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் அமைச்சர் விமல் வீரவன்ச, பிரதியமைச்சர் வீரகுமார திசாநாயக்க உள்ளிட்ட பலரும் மேற்படி மகஜரில் கைச்சாத்திட்டனர்.

இந்த கையெழுத்து பெறும் நடவடிக்கையானது நாட்டுக்காகச் செய்யும் மாபெரும் சேவை என்றும் நாடு பூராகவும் சென்று வட மாகாணசபைத் தேர்தலுக்கு எதிராக கையெழுத்து பெற்று அதனை ஜனாதிபதியிடம் கையளிப்பதே தங்களது நோக்கம் என்றும் தேசப்பற்றுள்ள பிக்குகள் முன்னணியின் தலைவர் கூறினார். (எ-11)


பிள்ளையார் இன்

25% கழிவு

இன்றுமுதல் அதி விசேட 25% விலைக்கழிவுடன் தரமான சைவ உணவுகள் எமது உணவகத்தில் நிறைவான சேவையுடன் காலை. மாலையில் வழங்கப்படும்.

இன்றைய விசேட உணவு :-

பூரி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ.120/-

சப்பாத்தி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ100/-

(சி-3499) தொடர்புகளுக்கு : இல. 31. மானிப்பாய் வீதி. யாழ்ப்பாணம். 021 222 2829

தொடர்ந்தும் உங்கள் சேவையில்....

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்

- கடிதங்கள்
- அன்பளிப்பு பொருட்கள்
- உடுபுடவைகள்
- CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து ,

Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்

303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.


T.P. No :-021 222 5392

WESTERN UNION MONEY TRANSFER

(சி-3500)


# மரண அறிவித்தல்

## கலாபூஷணம் லயன் ஏ.வி. ஆனந்தன்



துர்க்காபுரம் மல்லாகம் சிற்பச் செல்வன் கலாபூஷணம் லயன் ஏ.வி. ஆனந்தன் அவர்கள் 03.06.2013 அன்று காலமகிவிட்டார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மல்லாகம்

தொ.பேசி:- 077 6082335

தகவல்: குடும்பத்தினர்.

(சி-3922)


வலம்புரி

விளம்பர தொடர்புகளுக்கு

தொ.பே. : 021 321 0815

021 567 1540



செல்லா சினிமா யாழ்ப்பாணம்




நாகம்ஸ் சினிமா சுன்னாகம்

யாழ்.மண்ணில் முதல் தடவையாக வெண்திரைக்கு வெளியிலான காட்சிகளைக் கொண்ட முப்பரிமாண (3D) திரைப்படம்




காட்சிகள்

10.45, 2.45, 6.45

இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்ட எம்மால் வழங்கப்படும் கண்ணாடிகளை பாவிப்பதன் மூலமே இத்திரைப்படத்தை கண்டுகளிக்க முடியும்.

(சி-3483)

சுன்னாகத்தில் உங்கள் நளின்....

எமது அனைத்து சேவைகளும் உள்ளடங்கலாக

116G K.K.S வீதி, சுண்ணாகம். எனும் முகவரியில்.

வருகின்ற 9ம் திகதி முதல் சேவை மையத்துடன் கூடிய காட்சியறை.

Nalin City Show Room

OUR SERVICES:-

- LAPTOPS SALES & REPAIR
- BRANDED/ASSEMBLED PCS
- PRINTERS SALES & REPAIR
- TONERS & CARTRIDGES SALES
- OTHER COMPUTER ACCESSORIES SALES & REPAIR
- CCTV CAMERA SYSTEM INSTALLATION & MAINTENANCE
- NETWORKINNG & MAINTENANCE
- INTERCOM INSTALLATION & MAINTENANCE



(சி-3504)

NALIN INFORMATION TECHNOLOGIES (PVT).LTD

195/2,Palaly road, Parameswara Junction,Palaly Road,Jaffna.

TP:0212221121/1166 HOTLINE-0777667975

Nalin City Show Room

116 G, K.K.S Road, Chunnakam.

TP:0212242222


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## களிப்பு- மகிழ்ச்சி- ஆனந்தம்

“எனக்கு வாழ்க்கையே வெறுத்துப் போய் விட்டது சேர்” என்று கூறிக் கொண்டு என்னிடம் ஒருவர் வந்தார். என்னிடம் சிறிது நேரம் பேசி விட்டு அதன்பின் அப்படி கூறியிருந்தால், அதிலே அர்த்தம் இருந்திருக்கும்.

என்னிடம் வருவதற்கு முன்னரே வாழ்க்கை வெறுத்து விட்டது என்று கூறி விட்டாரே.

“என்ன சேர் விடயம்?” என்று விசாரித்தேன்.

“எங்கள் வீட்டிலே தினமும் மூன்று வேளையும் ஒரே மாதிரி சாப்பாடு. வித்தியாசமே இல்லை... இப்படியாக மூன்று மாதங்கள் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறேன். அதைவிட பட்டினி கிடந்து இறந்து விடலாம் என்று நினைக்கிறேன்” என்றார்.

ஒரு பெரியவர் (ஏஜினீஷ்) கூறிய தத்துவத்தைக் கூற நபர் இல்லாமல் தவித்துக் கொண்டிருந்தேன். இப்போது ஒருவர் கிடைத்து விட்டார். விடுவேனா? சொல்ல ஆரம்பித்தேன்.

நாம் அனுபவிக்கும் உணர்வுகளிலே மூன்று விதம் உள்ளது. அதாவது களிப்பு, மகிழ்வு,ஆனந்தம்.

“களிப்பு” என்பது உடம்பைப் பொறுத்தது.

“மகிழ்வு” என்பது மனதைப் பொறுத்தது.

“ஆனந்தம்” என்பது ஆன்மாவைப் பொறுத்தது.

இப்படி இந்த மூன்று வகையான சுவைப்புக்களின் தன்மையும் வேறு வேறாக உள்ளது.

முதலிலே “களிப்பு” எடுத்துக் கொண்டால், நமது புலன்களுக்குக் களிப்பைத் தரக்கூடிய பொருட்களுக்கு சில விசேட குணம் உள்ளது.

விரைவிலே சலிப்பை ஏற்படுத்தும் உணவு, உடை இவையெல்லாம் களிப்பை தரக்கூடிய பொருட்களாகும். புலன்களுக்கு களிப்பைத் தரக்கூடிய இது மாதிரி பொருட்கள் எல்லாம் முதல் தடவை நமக்குக் கொடுக்கும் களிப்பை இரண்டாவது தடவையும் கொடுக்காது. மூன்றாவது தடவை இன்னும் குறையும். கடைசியிலே வெறுப்பாகவே மாறி விடும்.

நாம் உணவு சாப்பிடுகிறோம் என்று வைத்துக் கொள்வோம். அதில் இட்லியை எடுத்துக் கொண்டால், ஒவ்வொன்றாக இட்லியைத் தொடர்ந்து சாப்பிடுகிறோம் என்று வைத்துக்கொள்வோம். முதல் இட்லி தரக்கூடிய சுவையை முப்பதாவது இட்லி சாப்பிடும் போது தருமா?

முதல் தடவையாக புதிய சட்டை அணியும் சந்தோசம், அச் சட்டையை நாம் பத்தாவது தடவையாக அணியும் போது வருமா... இதுதான் “களிப்பு”- அதாவது விரைவாகச் சலிப்பை தரக்கூடியது.

ஆனால், “மகிழ்வு” என்பது அப்படியல்ல... ஒருவர் அனுபவிப்பதால் இன்னொருவருக்கு குறைந்து போகாது.

காலையிலே சூரிய உதயத்தை பார்த்து சந்தோஷப்படுகிறீர்கள்- அதையே இன்னொருவர் பார்த்து சந்தோஷப்பட்டால் குறைவு ஏற்படாது.

மூன்றாவது சுகம் தரக்கூடியது “ஆனந்தம்”

அது எப்படி?...

இது நம்மில் இருந்து சுரக்கிறது. மனம் சலனங்களில் இருந்து விடுபடும்போது, இந்த ஆனந்தம் பிறக்கிறது. இது நிலையான சுகம். களிப்பிலிருந்தும் மகிழ்வுக்கும் மகிழ்விலே இருந்து ஆனந்தத்திற்கும் செல்வது தான் மனிதன் நடத்த வேண்டிய முக்கியமான பயணம்.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முத்தமிழ் விழா நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முத்தமிழ் மன்றம் நடத்தும் முத்தமிழ் விழாவின் முதலாம் நாள் நிகழ்வுகள் நாளை மறுதினம் வியாழக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் நடைபெறவுள்ளன.

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் பிரதி அதிபர் டீ. கருணலிங்கம் தலைமையில் நடைபெறும் நாடக விழாவின் இனிய விருந்தினர்களாக கலாநிதி குழந்தை ம.சண்முகலிங்கம், யாழ்.பல்கலைக்கழக கல்வியியற்றுறையின் சிரேஷ்ட விரிவுரையாளரும் சட்டத்துறைத் தலைவருமான கலாநிதி த.கலாமணி, யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி அ.அமிர்தலிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

அன்றையதினம் காவேரி இல்லம் வழங்கும் உதிர்ந்த உதயம் துளிர்விட என்ற நாடக மும் ராதா இல்லம் வழங்கும் எதற்கும் ஒரு காலமுண்டு என்னும் நாடகமும் அருணா இல்லம் வழங்கும் இனி ஒரு விதி செய்வோம் எனும் நாடகமும் சுவர்ணா இல்லம் வழங்கும் அன்பைத் தேடும் இதயங்கள் என்னும் நாடகமும் அரங்கேற்றப்படவுள்ளதுடன் விசேட ஆற்றுகையாக காத்தவரா யன், சிந்து நடைக் கூத்தும் அரங்கேற்றப்படவுள்ளன. (அ-5)

# புலமைப்பரிசில் பரீட்சைக்கு வயது வேறுபாடின்றி தோற்ற அனுமதி

## பரீட்சை ஆணையாளர் நாயகம்

அரச பாடசாலை மாணவர்களுக்கு பரீட்சைத் திணைக்களத்தால் நடத்தப்படும் ஐந்தாம் தர புலமைப்பரீசில் பரீட்சைக்கு ஐந்தாம் தரத்தில் கல்வி கற்கும் சகல மாணவர்களும் வயது வித்தியாசமின்றி தோற்ற அனுமதிக்கப்படுவர் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யூ.எம்.எம் ஜே. புஸ்பகுமார அறிவித்துள்ளார்.

இந்நடைமுறை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள ஐந்தாம் தர புலமைப் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களிலிருந்து பின்பற்றப்படுமெனவும் இதற்கமைவாக திருத்தப்பட்ட பரீட்சை பிராமணக் குறிப்பு சகல பாடசாலைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்புதிய பிராமணக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

ஐந்தாம் தர புலமைப்பரில் பரீட்சையின் அடிப்படையில் உதவிப் பணம் வழங்குவதற்கென பதினொரு வயதுக்குக் குறைந்த பத்து வயதுக்கு மேற்பட்ட மாணவர்கள் மாத்திரம் தகைமை பெறுவர். பரீட்சைக்கு தோற்றி 70 புள்ளிகளை பெறும் சகல மாணவர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும். எனினும் சித்தி என்ற பதம் பயன்படுத்தப்படமாட்டாது.

சில பாடசாலைகளில் மேற்படி பரீட்சைக்கு திறமையான மாணவர்களை மாத்திரம் தோற்ற வைத்து சித்தி வீதத்தை காட்டி பிரபலப்படுத்தப்படும் நடவடிக்கைகளைத் தடுக்கும் நோக்கிலும் சகல மாணவர்களையும் பரீட்சைக்குத் தோற்ற வைக்கும் நோக்கிலும் புதிய பிராமண விதிகள் அமுல்படுத்தப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 60 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 75 | 70 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 140 | 80 | 120 | 100 |
| தக்காளி | 120 | 80 | 120 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 40 | 60 | 60 |
| கோவா | 160 | 100 | 80 | 120 |
| கரட் | 160 | 100 | 120 | 160 |
| பூசணி | 50 | 40 | 40 | 40 |
| புடோல் | 50 | 60 | 60 | 60 |
| வாழைக்காய் | 30 | 30 | 60 | 40 |
| சின்ன வெங்காயம் | 260 | 200-220 | 120-180 | 160-200 |
| பெரிய வெங்காயம் | 70 | 70 | 80 | 80 |
| பாகற்காய் | 100 | 100 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 60 | 80 | 60 | 80 |
| கருணைக் கிழங்கு | 100 | 70 | -- | 100 |
| பயற்றங்காய் | 40 | 50 | 60 | 40 |
| லீக்ஸ் | 140 | 150 | 160 | 140 |
| பீற்றூட் | 100 | 70 | 120 | 120 |
| கறிமிளகாய் | 100 | 120 | 120 | 160 |
| முருங்கைக்காய் | 300 | 250 | 400 | 420 |
| போஞ்சி | 160 | 140 | 120 | 160 |
| கத்தரிதம்புள்ள | 30 | 60 | 40 | -- |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 30 | 30 |
| தேசிக்காய் | 160 | 100 | 120 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 40 | 40 | 30-40 |
| இராசவள்ளி | 100 | 100 | 120 | 120 |

# இராசி பலன்

04.06.2013
(வைகாசி 21, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 5.54 மணிக்கு
ஏகாதசி பிற்பகல் 4.37 மணிவரை
ரேவதி பிற்பகல் 1.05 மணிவரை
இராகுகாலம் 2.52-4.22 மணிவரை
சுபநேரம் 10.22-11.52 மணிவரை
ஏகாதசி விரதம், சித்தாமிர்தம்

**மேடம்**

நல்லவர்கள் தொடர்பால் நலம் காணும் நாள், திட்டமிட்ட காரியங்களில் சில மாற்றங்கள் செய்யும் சூழ்நிலை உருவாகும், சிலர் மீது காரணம் இல்லாமல் கோபம் ஏற்படலாம்.

**இடபம்**

குல தெய்வ வழிபாட்டில் அக்கறை செலுத்துவீர்கள், பிரியமான சிலருக்கு சில செலவுகள் ஏற்படலாம், சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், உஷ்ண சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம்.

**மிதுனம்**

பெரிய மனிதர்களின் தொடர்புகள் அதிகரிக்கும், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், சுப தகவல்கள் வந்து சேரும் நாள், பண வரவுகள் திருப்திகரமாக அமையும்.

**கடகம்**

பம்பரமாக சுழன்று பணிபுரிவீர்கள், நண்பர்கள் மத்தியில் பாராட்டும் புகழும் கூடும், எண்ணங்கள் எளிதில் ஈடேறும், கண்ணியம் மிக்க ஒருவரின் சந்திப்பு இடம்பெறலாம்.

**சிங்கம்**

சாமர்த்தியமாக பேசி காரியங்களை சாதித்துக் கொள்வீர்கள், எதிர்ப்புக்கள் அகன்று வியாபார விருத்தி ஏற்படும், எதிர்பாராத பயணங்கள் தித்திக்க வைக்கும்.

**கன்னி**

மேலதிகாரிகளை விமர்சிப்பதை தவிர்ப்பது நல்லது, ஒரு வகையில் வந்த வரவுகள் மற்றொரு வகையில் செலவாகலாம், மனதில் இனம் புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும்.

**துலாம்**

நண்பர்கள் மூலம் நன்மைகள் நடைபெறும் நாள், வருமானம் திருப்தி தரும், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும்.

**விருச்சிகம்**

எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், ஆரோக்கியம் சீராகும், வருமானம் திருப்தி தரும் நாள், பக்கத்தில் இருப்பவர்கள் உங்களுக்கு உதவி செய்ய முன்வருவர்.

**தனுசு**

மைத்துனர்கள் வழியில் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், பூத்திசாதுரியமாக செயற்பட்டு பொருள் வரவைப் பெருக்கிக் கொள்வீர்கள், கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம்.

**மகரம்**

இயல்பான வாழ்க்கையில் இனிமைகள் சேரும் நாள், வரவேண்டிய பண வரவுகள் வந்து சேரலாம், உறவினர் ஒருவர் உங்களுக்கு நல்ல யோசனைகளைச் சொல்ல முன்வரலாம்.

**கும்பம்**

வேலையில் சிறு மன உளைச்சல்கள் ஏற்படலாம், மூத்த சகோதரர்கள் உங்களின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர், எதற்காகவும் வீண் பிடிவாதத்தை தவிர்ப்பது நல்லது.

**மீனம்**

வருங்கால நலன் கருதி சேமிக்க முற்படுவீர்கள், பொதுநல ஈடுபாட்டில் அக்கறை காட்டுவீர்கள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் மேலோங்கும் நாள்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடை செய்யப்பட்ட உபகரணங்களை பயன்படுத்தி மீன்பிடிக்க வேண்டாம்

## நீரியல் வள பணிப்பாளர்

(யாழ்ப்பாணம்)


யாழ்.குடாக்கடலில் சட்டவிரோதமான முறையில் தடை செய்யப்பட்ட மீன்பிடித் தொழில் நடைபெறுவதாகவும் அவற்றைத் தடுப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் யாழ்.மாவட்ட நீரியல் வளத் திணைக்களப் பணிப்பாளர் எஸ்.கணேசமூர்த்தி தெரிவித்துள்ளார்.

சட்டவிரோதமான முறையில் தடை செய்யப்பட்ட தங்கூசி வலையைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடுவது, வெடி பொருட்களைப் பயன்படுத்தி மீன் பிடியில் ஈடுபடுவது தொடர்பில் தமக்கு பல முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் அவற்றைத் தடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

விரைவில் தடை செய்யப்பட்ட மீன் பிடி முறையைக் கைவிட்டு மாற்றுத் தொழிலைச் செய்யுமாறும் மீனவர்களிடம் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தவறும் பட்சத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் தடை செய்யப்பட்ட மீன்பிடி முறையை முழுமையாக ஒழிக்குமாறு கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சிடமிருந்து தொடர் கடிதங்கள் வந்திருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)




நன்றி: அததெரண

## சுவாமி விவேகானந்தரின் பிறந்தநாள் விழா

சுவாமி விவேகானந்தரின் 150 ஆவது பிறந்தநாள் விழா நிகழ்வுகள் இரமகிருஷ்ண மிஷன் நலன்புரி நிலையத்தினரின் ஏற்பாட்டில் நாளை புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு உரும்பிராய் சந்திரோதயக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

கல்லூரி அதிபர் ஞா.அன்ரன் பிரேமதாஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.போதனா வைத்தியசாலையின் குழந்தை வைத்திய நிபுணர் சோ.க.அருள்மொழி, சிறப்பு விருந்தினர்களாக பிராந்திய பல் வைத்திய அதிகாரி ச.பாலகுமார், வைத்தியர் திருமதி சி.தேவஞானன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

விசேட உரையினை மாணவர்களுக்கு சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்எனும் கரும் பொருளில் சி.சிவமோகன் ஆற்றவுள்ளார்.

அத்துடன் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கப்படவுள்ளன. தொடர்ந்து பற்சுகாதார விழிப்புணர்வு கருத்தரங்கும் பல் வைத்திய பரிசோதனைகளும் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.(அ)

## உண்டியலில் பணம் சேகரிப்பு

போதை அற்ற மனிதர்கள் வாழ்வின் எழுச்சியில் பூவுலகை விழிப்படைய செய்வார்கள் என்னும் கருப் பொருளின் திட்டத்தின் கீழ் கரவெட்டி பிரதேச செயலகத்தை சேர்ந்த சமுர்த்தி உத்தியோகத்தர்களால் கிராமங்களுக்கு சென்று உண்டியலில் பணம் சேகரிக்கப்பட்டு வருகிறது. இச் செயற்பாடு கடந்த சனிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டதுடன் தொடர்ந்து இரு வாரங்கள் நடைபெறவுமுள்ளது.

இவ்வாறு சமுர்த்தி உத்தியோகத்தர்களால் சேகரிக்கப்படும் நிதி வறுமைக் கோட்டின் கீழ் உள்ள வறிய மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(அ-3-60)

## நாடோடி சட்டத்தின் கீழ் ஒருவர் கைதானார்

நாடோடி சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட நபர் ஒருவரை பருத்தித்துறை நீதவான் நீதிமன்றம் எச்சரித்து விடுவித்துள்ளது.

காரணம் இல்லாது தேவையற்ற முறையில் மதகின் மேல் அமர்ந்திருந்து பொழுதை வீணடித்துக் கொண்டிருந்த கரவெட்டி பகுதியைச் சேர்ந்த ஒருவரை நாடோடி சட்டத்தின் கீழ் நெல்லியடி பொலிஸார் கைது செய்து பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

வழக்கை விசாரித்த பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் அவரை குற்றவாளி எனக் கண்டு எச்சரிக்கை செய்து விடுவித்துள்ளார்.(அ-3-60)

# இடையூறு விளைவித்தவருக்கு இரண்டு மாத கடூழிய சிறை

(கரணவாய்)

இரண்டாவது தடவையாக மது போதையில் பொதுமக்களுக்கு இடையூறு விளைவித்த நபர் ஒருவருக்கு இரண்டு மாத கடூழிய சிறைத் தண்டனை வழங்கி பருத்தித்துறை நீதவான் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

கரவெட்டி பகுதியை சேர்ந்த நபர் ஒருவர் மது போதையில் பொதுமக்களுக்கு இடையூறு விளைவித்த குற்றசாட்டின் பேரில் நெல்லியடி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு கடந்த வெள்ளிக்கிழமை பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளி எனக் கண்டு 2 மாத கடூழிய சிறைத்தண்டனைவழங்கித்தீர்ப்பளித்தார்.(அ-3-60)

## தேசிய இளைஞர் சேவை மன்ற தொழிற்பயிற்சி

(துனங்கிளப்பு)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ்.மாவட்ட தொழிற் பயிற்சி எதிர்வரும் 10 ஆம் திகதி காலை 9 மணிக்கு மாவட்ட பயிற்சி நிலையம் அமைந்துள்ள கைதடி நுணாவில் அறவழி கட்டடத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதில் தையல், அழகுக்கலை, கணனி வன்பொருள், கணனி மென்பொருள் ஆகிய வகுப்புக்கள் இடம் பெறவுள்ளன.

இப்பயிற்சி நெறிக்கு பதிவுகளை மேற்கொண்ட மற்றும் பதிவுகளை மேற்கொள்ளாத இளைஞர் யுவதிகளும் அன்றைய தினம் கலந்து கொண்டு பயிற்சி நெறியை ஆரம்பிக்க முடியும் என தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் யாழ்.மாவட்ட உதவிப் பணிப்பாளர் த.ஈஸ்வரராஜா தெரிவித்துள்ளார்.

இப் பயிற்சி நெறியானது ஆறு மாதங்கள் நடைபெறுவதுடன் பயிற்சி நிறைவில் அரச சான்றிதழ் வழங்கப்படும்.

பயிற்சி நிறைவில் சுயதொழில் மேற்கொள்வதற்கு சுயதொழில் ஊக்குவிப்பு கடனும் வழங்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு 077 2247902 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.(அ-3-37)

# பரபரப்பான உதைபந்தாட்டத்தில் வதிரி பொம்மஸ் அணி சம்பியன்

(கரவெட்டி)

பரபரப்பான இறுதி உதைபந்தாட்டத்தில் வதிரி டயமன்ஸ் அணியை 2:1 என்ற கோல்க் கணக்கில் தோற்கடித்து வதிரி பொம்மஸ் அணி சம்பியனாகியது.

அல்வாய் வட நக்கீரன் விளையாட்டு கழகம் நடத்திய அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்ட போட்டியின் இறுதி ஆட்டம் பெருந்திரளான உதைபந்தாட்ட ரசிகர்கள் மத்தியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நக்கீரன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் நவிண்டில் கலைமதி அணியை 1:0 என்ற கோல்க் கணக்கில் தோற்கடித்து வதிரி டயமன்ஸ் அணியும் இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் அல்வாய் மனோகரா அணியை 4:0 என்ற கோல்க் கணக்கில் தோற்கடித்து வதிரி பொம்மஸ் அணியும் இறுதி ஆட்டத்திற்கு தெரிவாகியுள்ளன.

இதில் இறுதி ஆட்டத்தில் வதிரி டயமன்ஸ் அணியை எதிர்த்துவதிரி பொம்மஸ் அணி மோதியது.

ஆட்டத்தின் 4 ஆவது நிமிடத்தில் டயமன்ஸ் அணியின் முன்கள வீரர் பிறேம்குமார் தனது அணிக்காக முதலாவது கோல் ஒன்றைப் பெற்றுக் கொடுத்தார்.

இடைவேளையின் போது 1:0 என்ற கோல்க்கணக்கில் வதிரி டயமன்ஸ் அணி முன்னணியில் இருந்தது. பிற்பாதி ஆட்டத்தின் 10 ஆவது நிமிடத்தில் வதிரி பொம்மஸ் அணிக்கு கிடைத்த தண்ட உதையை சரியாக பயன்படுத்திய வதிரி பொம்மஸ் அணி வீரர் கோபிநாத் தனது அணிக்கு கோல் ஒன்றை பெற்றுக் கொடுத்தார்.

பிற்பாதி ஆட்டத்தின் 15 ஆவது நிமிடத்தில் வதிரி பொம்மஸ் அணியின் மற்றுமொரு வீரர் வைகுந்தன் சிறப்பான கோல் ஒன்றை பெற்றுக் கொடுத்து தனது அணியின் வெற்றிக்கு வழி வகுத்தார்.

இறுதிவரை டயமன்ஸ் அணி பல வழிகளிலும் கோல்களை போட முயற்சித்தும் பயனளிக்கவில்லை.

இத்தொடரின் ஆட்ட நாயகனான வதிரி பொம்மஸ் அணியின் கோபிநாத், தொடர்நாயகனாக அதே அணியின் சாரங்கன், சிறந்த கோல் காப்பாளராக டயமன்ஸ் அணியின் மதன்ராஜ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (அ-3-24)









யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நேற்றைய தினம் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட உதைபந்தாட்ட பயிற்சி முகாமின்போது... (படங்கள்:-உ.சாளீன்)




## 32 வான்களும் திருத்தப்படும்

(தும்பளை)

வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாச கூட்டம் நேற்று முன்தினம் வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க சமாச மண்டபத்தில் சமாச தலைவர் அருள்தாஸ் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் வடமராட்சி கடற்பிரதேசத்தில் காணப்படும் படகை நிறுத்துவதற்கான 32 வான்களையும் திருத்தி தருவதாக கூறிய ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் உறுப்பினர் ம.தெய்வேந்திரத்திற்கு கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாச பொருளாளர் எஸ்.சசிக்குமார் நன்றி தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். (அ-3-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கம் 4 வருடங்களாக சாதனை புரிந்து வருகின்றது

## அமைச்சர் றிசாத் கூறுகிறார்

இலங்கை அரசாங்கம் கடந்த 4 வருடங்களாக செய்து வருகின்ற அபிவிருத்திகளின் பயன்களை நாம் பெறப்போகின்றோமா? அல்லது அர சாங்கத்தை வீழ்த்தி பழைய யுகத்திற்குச் செல்லப்போகின்றோமா என்பதை அனைவ ரும் சிந்திக்கவேண்டும் என வர்த்தக மற்றும் கைத்தொழில் முதலீட்டு அமைச்சர் றிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்,

வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கான நியமனம் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து கூறுகையில்,

30 வருடங்களாகப் போராடிய வரலாறு ஒன்று எமக்குள்ளது. அதனால் நாம் பெற்றுக் கொண்ட பயன் தான் என்ன? இந்த 4 வருடங்களாக நாம் பெற்றுக்கொண்டுள்ளவை என்ன? என நாம் ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு கடமைப்பட்டுள் ளோம். போருக்குப் பின்னரான 4 வருடங்கங்களாக நாம் பெற்றுக் கொண்டுள்ள பயன்கள் என்ன?

அதுமட்டுமன்றி அழிக்கப்பட்ட புகையிரதப் பாதைகள் அனைத்தும் கடன் பெற்று புனரமைக்கப்படுகின்றன. கட்டடங்களும் புனரமைக்கப்படுகின்றன.

அவ்வாறே குளங்களும் பாடசாலைக் கட்டடங்களும் புனரமைக்கப்படுகின்றன.



இந்நிலையில் நாம் 4 வருடங்களுக்குள் இந்த அரசாங்கம் செய்துள்ள பெரும் சாதனைகளைத் தொடர்ந்து பெறப்போகின்றோமா? அல்லது இதை நிறுத்தி அரசாங்கத்தை வீழ்த்துவதன்மூலம் மீண்டும் பழைய யுகத்திற்குச் சென்று துயர் நிறைந்த அகதி வாழ்வையும் எமது உறவுகளை எல்லாம் பறிகொடுத்த துன்ப வாழ்வையும் நோக்கிப் பயணிக்கப் போகின்றோமா? என்பது தொடர்பில் சிந்திக்க வேண்டும்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மறக்க முடியாத தலைவராக இன்று உள்ளார். அவருடைய ஆட்சியிலேயேதான் சமாதானத்தைக் கண்டோம். ஆயிரக்கணக்கான பட்டதாரிகளுக்கு நியமனங்கள் வழங்கப்படுவதை யும் கண்டுள்ளோம்.

அதேபோல் சமுர்த்தி வாழ்வாதார திட்டத்தின் கீழ் நெடுங்கேணி, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், யாழ்ப்பாணத்தின் ஓர் பகுதி போன்ற பிரதேசங்களில் நியமனங்கள் வழங்கப்படுவதைக் காண்கின்றோம்.

மேலும் போராட்டத்தின் ஆரம்ப காலங்களில் ஆயுதம் ஏந்தியிருந்த டக்ளஸ் தேவானந்தா போன்றவர்கள் 1987ஆம் ஆண்டில் இந்திய சமாதான உடன்படிக்கையின்போது வடக்கும் கிழக்கும் இணைக்கப்பட்டு சகலமும் நிறைந்த மாகாண சபையாக கொடுக்கப்பட்டபோது ஆயுதத்தை விடுத்து ஜனநாயகத்திற்கு வந்துள்ளார்கள்.

இன்னும் நாம் துன்பப்படவேண்டுமா? என பேசுகின்றவர்கள் எந்த ஓர் தீர்வையும் முன் வைக்காது, யதார்த்த ரீதியாக பேசாது, எமது மக்களுக்குள் பிரிவினையை ஏற்படுத்தும் விதமான செயற்பாட்டை முன்னெடுத்து வருகின்றனர். அவை தங்களுடைய இருப்பையும், தங்களுடைய நாடாளுமன்ற கதிரைகளையும் தக்க வைத்துக்கொள்வதற்காக மேற்கொள் ளும் தந்திரோபாய நடவடிக்கைகளாகும்.

எனவே, வீர வசனங்களைப் பேசி, அப்பாவி இளைஞர், யுவதிகளை பலிக்கடாவாக்குகின்ற செயற்பாடுகளுக்கு நாம் துணை போகக்கூடாது. இது தொடர்பில் நாம் தூரநோக்கோடு சிந்திக்கவேண்டும் என்றார்.(அ-2-250)

## 60 இலட்சம் ரூபா பணத்தை ஆற்றில் தவறவிட்ட ஊழியர்

ஆஸ்திரிய நாட்டு வங்கி ஊழியர் ஒருவர் வங்கியில் செலுத்தக் கொண்டு சென்ற 60 இலட்சம் ரூபா பணத்தை ஆற்றில் தவற விட்டுள்ள சம்பவம் அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஆஸ்திரியா நாட்டிலுள்ள பிரபல வங்கியில் பணியாற்றி வரும் ஊழியர் ஒருவர் அருகில் உள்ள மற்றொரு வங்கிக்கு பணத்தை வைப்பிலிட கொண்டு சென்றுள்ளார்.

எதிர்பாராத விதமாக ஆற்றங்கரையின் அருகில் அவரின் கார் பழுதடைந்து நின்றுவிட்டது.காரைப் பழுது பார்ப்பதற்காக பணப் பொதி களை அவர் கீழே இறக்கி வைத்துள்ளார். மலைப்பாங்கான இடமாக இருந்தமையால் பணப் பொதிகள் மலைச் சரிவில் ஓடி ஆற் றில் விழுந்துள்ளன.

கார் திருத்த வேலையில் தீவிரமாக இருந்த ஊழியர் தாமதமாகவே இதனைக் கவனித்துள்ளார். உடனடியாக தீயணைப்புப் படையினருக்கும் பொலிஸாருக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டு அவர்களும் தேடுதல் வேட்டையில் குதித்தனர்.

ஆனால், தீவிர தேடுதலுக்குப் பின்னரும் வெறும் 2 இலட்சம் ரூபாயை மட்டுமே அவர்களால் மீட்க முடிந்தது. மீதிப் பணம் முழுவதும் ஆற்றின் வேகத்தில் அடித்துச் செல்லப்பட்டு விட்டது. இப்பண பொதிகள் கிடைத்தால் உடனடியாக தம்மிடம் ஒப்படைக்கும் படி பொலிஸார் பொதுமக்களுக்கு உத்தரவிட்டுள்ளனர்.

இச்சம்பவம் கவனக்குறைவாக இருந்த வங்கி ஊழியரின் முட்டாள் தனத்தையே எடுத்துக் காட்டுகிறது என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-2)

## வெலிக்கடை சிறையிலிருந்து கைதிகள் வேறு சிறைகளுக்கு மாற்றம்

(கொழும்பு)

வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளை வேறு சிறைச்சாலைகளுக்கு மாற்றும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஓகஸ்ட் மாத்திற் குள் இரண்டாயிரத்து 500 கைதிகளை வெலிக்கடை சிறைச்சாலையில் இருந்து வேறு இடங்களுக்கு மாற்றுவதற்கு புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு திட்டமிட்டுள்ளது.

கொழும்பிலிருந்து சிறைக் கைதிகளை வெளியேற்றும் திட்டத்தின் கீழ் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக அமைச்சர் சந்திரசிறி கஜதீர கூறியுள்ளார்.

இதன்படி முதற்கட்டமாக இடவசதியுள்ள சிறைச் சாலைகளுக்கு கைதிகள் படிப்படியாக அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

களுத்துறை,காலி, வட்டரெக்க ஆகிய சிறைச்சாலைகளுக்கு தற்போது வெலிக்கடையில் இருந்து கைதிகள் மாற்றப்பட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

வெலிக்கடை சிறைச்சாலையிலுள்ள அனைத்துப் பெண் கைதிகளையும் கண்டி போகம்பறை சிறைச்சாலைக்கு மாற்றத் தீர்மானித்துள்ளதாகவும் அமைச்சர் மேலும் கூறியுள்ளார். (அ-2)


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1980 இந்து (விஸ்வகுலம்)<br>நட்சத்திரம்: பரணி 3<br>உயரம்: 5' 8" கி.பா: 16.75<br>தகைமை/தொழில்: **Civil Engineer** சிங்கப்பூர் Citizen<br>தொ.இ:B1908 | பிறப்பு: 1987 இந்து(V)<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 4<br>தகைமை/தொழில்:**BSc** விரிவுரையாளர்கணனி கல்விநிலையம்<br>தொ.இ:G1936 |
| பிறப்பு: 1976 இந்து(V)<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 2<br>கி.பா: 13.5<br>தகைமை/தொழில்:**A/LUK Citizen**<br>தொ.இ:B1910 | பிறப்பு: 1987 இந்து(V)<br>நட்சத்திரம்: திருவாதிரை 2<br>உயரம்: 5'2"<br>கி.பா :26.5 1ல் செவ்<br>தகைமை/தொழில்:**A/L**நூலகத்துறை<br>தொ.இ:G1937 |
| பிறப்பு: 1978 **Non RC**<br>நட்சத்திரம்: அனுசம்<br>உயரம்: 5' 6" கி.பா: 30<br>தகைமை/தொழில்: **Bcom, CIMA**உள்ளக கணக்காய்வாளரர்<br>தொ.இ:B1911 | பிறப்பு: 1986 இந்து(V)<br>நட்சத்திரம்: உத்தரம் 1<br>உயரம்: 5' 5"<br>கி.பா :38.25<br>தகைமை/தொழில்: **DoctorNorway citizen**<br>தொ.இ:G1938 |
| பிறப்பு: 1973 இந்து(V)<br>நட்சத்திரம்: ரோகினி 1<br>உயரம்: 5'10"<br>கி.பா : 17<br>தகைமை/தொழில்:**BSc B.Tech (Engineering)Engineer**<br>தொ.இ:B1912 | பிறப்பு: 1985 இந்து(குருகுலம்)<br>நட்சத்திரம்: ரேவதி 3<br>உயரம்: 5' கி.பா: 65 7இல்சூ,செவ்<br>தகைமை/தொழில்: **College** ஆசிரியை<br>தொ.இ:G1939 |

சகல தொடர்புகளுக்கும்:-

கல்யாண மாலை

(சர்வதேச இலவச திருமண சேவை)

இல. 144, பிறவுண் வீதி,

யாழ்ப்பாணம்

தொடர்பு:- 021 720 1005

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 30வருடகால யுத்த சூழலில் இவ்வாறான கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெறவில்லை

## யோகேஸ்வரன் எம்.பி.சுட்டிக்காட்டு

களுவாஞ்சிக்குடி ஸ்ரீசெல்லக் கதிர்காமர் ஆலயத்தில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவம், விக்கிரகம் மற்றும் ஆலய சொத்துக்கள் சேதமாக்கப்பட்டமை மற்றும் மாங்காடு பிள்ளையார் ஆலயத்தின் விக்கிரக திருட்டு மற்றும் கிரான்குளம் ஐயனார் ஆலய உண்டியல் திருட்டு சம்பவங்கள் தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவை தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சீ.யோகேஸ்வரன் தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ளார்.

களுவாஞ்சிக்குடி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள குருக்கள் மடம் ஸ்ரீலஸ்ரீ செல்லக் கதிர்காமர் ஆலயத்தில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவம் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த ஒருசில வருடங்களாக மட்டக்களப்பு மாவட்டத்தில் இந்து ஆலயங்களில் தங்க நகைகள், ஆலய விக்கிரகங்கள், ஆலய பொருட்கள் என்பன களவாடப்படும் நிலைமை அதிகரித்துக் கொண்டுவருகின்றது.

இந் நிலையில் கடந்த சனிக்கிழமை நள்ளிரவு குருக்கள்மடம் ஸ்ரீலஸ்ரீ செல்லக் கதிர்காமர் ஆலயத்தில் திருடர் குழுவினரால் ஆலய மூல விக்கிரகங்கள், இதர கருங்கல் விக்கிரகங்கள் அதாவது மூல விக்கிரகமான முருகன், வள்ளியம்மை, தெய்வயானை மற்றும் இதர விக்கிரகங்களான வைரவர், சண்டேஸ்வரர், மயில்வாகன பீடம், பலி பீடம், கொடித்தம்பப் பிள்ளையார், ஒன்பது நவக்கிரகம், மாரியம்மன் உட்பட பல விக்கிரகங்கள் அகற்றப்பட்டு, அதன் அடியில் பதிக்கப்பட்ட தங்க இயந்திரத்தகடுகள் களவாடப்பட்டுள்ளன.

கடந்த 30 வருடகால யுத்த சூழலில் இவ்வாறான கொள்ளைச் சம்பவங்கள் எவையும் இடம்பெறவில்லை. ஆனால், தற்போது 2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவுற்றதாக அரசாங்கம் அறிவித்த பின்னரே இவ்வாறான கொள்ளைச் சம்பவங்களை இடம்பெற்று வருவதைக் காணக்கூடியதாகவுள்ளது.

ஆலயங்களில் நடைபெற்ற கொள்ளைச் சம்பவம் தொடர்பாக ஆலய தர்மகர்த்தா சபையினரால் பொலிஸில் முறைப்பாடும் செய்யப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த காலத்தில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பாக பொலிஸார் இதுவரை களவாடப்பட்ட பொருட்களையோ அன்றேல் திருடர்களையோ இதுவரை கைது செய்யவில்லை.

உண்மையில் குருக்கள் மடம் ஸ்ரீலஸ்ரீ செல்லக்கதிர்காமர் ஆலயத்தில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவத்தில் தங்க இயந்திர தகடுகள் திருடப்பட்டமை, மாங்காடு பிள்ளையார் ஆலயத்தின் விக்கிரக திருட்டு மற்றும் கிரான்குளம் ஐயனார் ஆலய உண்டியல் திருட்டு சம்பவங்கள் அனைத்தும் கவலையை தருகின்றன.

ஆலயங்களின் தங்க நகைகளைப் பாதுகாக்க வேண்டிய சூழலில் நாங்கள் தற்போது உள்ளோம். இவ் விடயமாக மட்டக்களப்பு மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபரிடம் சம்பாஷித்து விசாரணைகளை மேற்கொள்வதற்காக விசேட குழு ஒன்றை நியமித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டுக்கொண்டேன்.

இச் சம்பவத்தை தான் மீண்டும் மீண்டும் கண்டிப்பதாக அவர் தெரிவித்தார்.(அ)

# சிங்கப்பூரில் விபச்சாரம் நடத்திய நபர் கைது

இலங்கை யுவதிகளை தொழிலுக்கு அழைத்துச் செல்வதாகக் கூறி பலாத்காரமாக விபச்சாரத்தில் ஈடுபடுத்தி வந்த இலங்கை நபர் ஒருவரை சிங்கப்பூர் பொலிஸார் கைது செய்துள்ளதாக தூதரக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவர் சிங்கப்பூரில் விபச்சாரம் நடத்தி வந்தவர்களில் முக்கியமான நபரெனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். இவர் சமீபத்தில் ஐந்து யுவதிகளை அழைத்துச் சென்று பலாத்காரமாக விபச்சாரத்தில் ஈடுபடுத்தி வந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த நபரால் பலாத்காரமாக தடுத்து வைக்கப்பட்டிருந்த யுவதிகள் இவரது பிடியிலிருந்து தப்பிச் சென்று சிங்கப்பூர் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளனர். பொலிஸார் குறித்த நபரைக் கைது செய்யமுயன்ற போது தலைமறைவாகியுள்ளார்.

சில தினங்களுக்கு முன்னர் இவர் சிங்கப்பூரிலிருந்து இலங்கைவர முயற்சித்த போது சிங்கப்பூர் விமான நிலையத்தில் வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (2)

# கஞ்சாவுடன் இருவர் கைது

கஞ்சா வைத்திருந்த இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மன்னார்-மடு பிரதான வீதியில் கஞ்சாவுடன் சென்ற இருவரை நேற்றைய தினம் அதிகாலை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மன்னார் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலை அடுத்து சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் கஞ்சாவுடன் இருந்த இந்த இருவரையும் கைது செய்துள்ளதாக மன்னார் மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸார் தெரிவித்தனர்.

ஒரு இலட்சத்து 20 ஆயிரம் ரூபா பெறுமதியான ஒரு கிலோகிராம் எடை கொண்ட கஞ்சாவை சந்தேக நபர்களிடமிருந்து கைப்பற்றியுள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

மேலும், இந்தச் சந்தேக நபர்களிடமிருந்து 2 மோட்டார் சைக்கிள்கள், 3 கையடக்கத் தொலைபேசிகள், 38 ஆயிரம் ரூபா பணம் ஆகியவற்றை கைப்பற்றியுள்ளதாக பொலிஸார் கூறினர்.

இந்தச் சந்தேக நபர்கள் இருவரும் மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் என விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது.

இந்த சந்தேக நபர்களிடம் தொடர்ந்து விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-2)

# பூதவுடலை எடுத்துச் செல்ல வாகனம் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

இறந்தவர்களின் உடலை எந்தவிதமான செலவுமின்றி அவர்களின் வீட்டுக்கு கொண்டு சென்று கையளிக்கும் நோக்குடன் றொறண்டோ- மனிதாபிமானத்தின் குரல் அமைப்பினரால் சுமார்18 இலட்சம் ரூபா பெறுமதியான வாகனம் ஒன்று கிளிநொச்சி மாவட்டத்திற்குட்பட்ட கரைச்சி பிரதேச சபைக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.



முல்லைத்தீவு,கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் சுகவீனம் காரணமாக யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழக்கும் சந்தர்ப்பத்தில் அவர்களின் உடல்களை உறவினர்கள் எந்தவிதச் செலவுமின்றி வீடுகளுக்கு கொண்டு செல்வதற்கு இந்த வாகனம் பயன்படுத்தப்படவுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனின் வேண்டுகோளுக்கு அமைவாகவே, இந்த வாகனத்தை றொறண்டோ மனிதா பிமானத்தின் குரல் அமைப்பு அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

இந்த வாகனத்தை கரைச்சி பிரதேச சபையிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கும் நிகழ்வு கடந்த முதலாம் திகதி கரைச்சி பிரதேச சபைக்கு முன்பாக நடைபெற்றுள்ளது.

இந்த நிகழ்வில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, சிவஞானம் சிறீதரன், எம்.ஏ.சுமந்திரன், பொன் செல்வராஜா, அரியநேத்திரன், யோகேஸ்வரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (அ-6)

## மின்சக்தி அமைச்சர்கள் மாநாடு ரஷ்யாவில்

ரஷ்ய குடியரசின் வல்திவோஸ்டொக் நகரில் நடைபெறும் 2013 ஆசிய பசுபிக் மின்சக்தி அமைச்சர்கள் மாநாட்டின் உப தலைவியாக அமைச்சர் பவித்ரா வன்னியார்ராச்சி நியமிக்கப்பட்டுள்ளார்.

இம் மாநாட்டின் தலைவராக ரஷ்ய மின்சக்தி அமைச்சர் அலெக்சாண்டர்நொவெஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மற்றும் ஆசிய பசுபிக் பொருளாதார சமூக ஆணைக்குழு ஆகியவற்றின் அனுசரணையுடன் நடைபெறும் இம் மாநாடு, மின்சக்தி தொடர்பான பல்வேறு விடயங்கள் குறித்து ஆராயும் ஒரு முக்கிய மாநாடாகும். (அ-2)

## வெளிநாட்டு நாணய கடன்களை குறைக்கும் முயற்சியில் மத்திய வங்கி

(கொழும்பு)

நடுத்தர கால கடன் முகாமைத்துவ திட்டத்தின் கீழ் இலங்கை தனது வெளிநாட்டு நாணய கடன்கள் மற்றும் குறுகிய கால உள்நாட்டு கடன்களை குறைப்பதற்கு எண்ணியுள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.


கடந்த ஆண்டு கடன்கள் காரணமாக மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இலங்கை குறித்த இலக்கை அடைய முடிய வில்லை என்று குறிப்பிடப்பட் டுள்ளது.

மத்திய வங்கியின் 2012 ஆம் ஆண்டுக்கான பொதுக் கடன் முகாமைத்துவம் 43 சதவீதமாக இருந்தது. அந்த தொகையை எதிர்வரும் 2016 ஆம் ஆண்டு 30 சதவீதமாக குறைப்பதே தமது நோக் கம் என்று மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப் ரால் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு தொடக்கம் எதிர்வரும் 2016 ஆம் ஆண்டு வரையான மொத்த உள்நாட்டு கடனை 20 சதவீதமாக குறைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அத் தொகையை 25 சதவீதம் அல்லது 813.3 பில்லியன் ரூபாய்களாக குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ-2)

## முதலாவது ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு:
1996.03.14



உதிர்வு:
2012.05.17

**செல்வி**
**கஜேந்திரன்**
**வைஷ்ணவி**
(கஸ்தூரி)

நீராகி ஓராண்டுகள் ஓடிவிட்டதம்மா
பாலாறுதான் வற்றிப் போனதம்மா
தேனாக நின்று எம்முன் மகிழ
வானோங்கும் முழுநிலவே.... வாட்டுதம்மா
நீர் இல்லாப் பொழுது....
ஒளிர்ந்த சூரியனே ஒப்பற்ற எம்மகளே...
இலையென்று நாமாகி ஏக்கமுற
எமைவிட்டு வான் நிலவு இழந்தாயம்மா...
வண்ணமுகம் மறைந்தாயம்மா
போதுமென்று ஆகுதம்மா...
பொலிவிழந்த வாழ்வெமக்கு
ஆதி சிவன் மடியினிலே அமைதியுடன் நீ உறங்க
உன் ஆத்மா சாந்திக்காக..

2013.06.05 அன்று எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்தில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**குடும்பத்தினர்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதுரன்
படங்கள் : எஸ்.ஆர்.கரன்





# மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம்

## ஐயம் தெளிய வைத்த மோகன்ராம்



**விநாயகனை வேண்டி நிற்போம் விரைவில் குடமுழுக்கு காண்பதற்கு...**





சைவத் தமிழ் வரலாற்றில் ஆலயங்கள் கொண்டுள்ள வகிபாகம் காத்திரமானது. தென்னிந்திய இந்து ஆலயங்களின் வரலாறுகளை நோக்கும்போது அங்கு சிற்பக் கலையும் கட்டடக்கலையும் கொண்டுள்ள முக்கியத்துவமும் ஆலயங்களை நிர்மாணிப்பதில் தமிழ் மன்னர்கள் காட்டிய பேரார்வமும் வெளிப்படும்.

இன்றுவரை வியந்து போற்றுகின்ற அளவில் இந்து ஆலயங்களில் காணப்படும் வேலைப்பாடுகள், சிற்பக்கலை, கட்டடக் கலை என்ற எல்லைகளுக்கப்பால் பக்திவயத்தின் பெருந்திறப் பிரவாகத்தைக் காட்டிநிற்கும்.

இவ்வாறாக, தமிழர் வாழ்வியலில் ஆலயங்கள் கொண்டுள்ள முக்கியத்துவமே, இந்து மதத்திற்குத் தனியான தலைமைப் பீடங்கள் இல்லை என்ற குறை அளப்புகளின் மத்தியிலும் இந்துசமயம் நிலைபேறு கொண்டுள்ளதெனலாம். இத்தகைய ஆலயச் சிறப்புக்களை சிவபூமி என்ற ஈழத்திரு நாடும் விட்டுக்கொடுத்ததில்லை.

நல்லூர் என்றவுடன் கந்தப்பெருமானின் நினைப்பும் நயினாதீவு என்றவுடன் நாகபூஷணித்தாயின் வழிபாடும் ஈஸ்வரங்கள் என்றதும் சிவப்பரம்பொருளின் ஈர்ப்பும் எழுகைபெறும்.

இதேபோல் மானிப்பாய் என்றதும் மருதடி விநாயகன் கண்முன் தோன்றும் பக்தி நிலை அளப்பரியது.

இத்தகைய உயர்நிலைச்சிறப்பு மருதடி விநாயகனுக்கு ஏற்பட்டமைக்கு அவனின் எல்லையற்ற அருளாட்சியே காரணம் எனலாம்.

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம் என்றதும், அந்த ஆலயத்திற்கு இருக்கக்கூடிய எங்கள் மனப்பதிவு ஏனைய ஆலயங்களை விட வித்தியாசமானது.

கட்டடக்கலை, சிற்பக்கலை என்பவற்றின் வடிவமைப்பும் ஆலயக் கட்டமைப்பும் ஈர்ப்புடையனவாக இருக்கும் என்ற பக்தர்களின் மனப்பதிவை நிறைவேற்ற முனைந்த ஆலய தர்மகர்த்தா சபை, 25கோடி ரூபா செலவில் ஆலயப் புனரமைப்பிற்குத் திட்டமிட்டது.

2003ஆம் ஆண்டில் தீர்மானிக்கப்பட்ட இப்புனரமைப்புப்பணி 2004ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது.

ஆலயப் புனரமைப்புப் பணிகளுக்கு முன்னதாக பாலஸ்தாபனம் இடம்பெற்று மகாகும்பாபிஷேகம் நடைபெறும் வரை, மகோற்சவங்கள் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் எதுவும் ஆகமங்களில் இல்லையாதலால் கடந்த 9 ஆண்டுகளாக மானிப்பாய் மருதடியானுக்குப் பெருந்திருவிழா இல்லையென்ற குறை பக்தர்களை வாட்டவே செய்கிறது.

ஒருபுறத்தில் மருதடியானின் ஆலயத்தைச் சிற்பவேலைப்பாடுகளுடன் புதுப்பொலிவுற வைக்கும் தர்மகர்த்தா சபையின் விருப்பு.

மறுபுறத்தில் ஒவ்வொரு புத்தாண்டிலும் மருதடியான் தேரேறும் காட்சியைக் கண்டு களிப்புறும் பக்தர்களின் மனக்குறை என்ற இருநிலைப்பக்தி வெளிப்பாட்டில், பரவலான விமர்சனங்களும் ஆலயக் கட்டுமானங்களில் குறைபாடுகள் இருப்பதான சலசலப்புகளும் ஏற்படவே செய்தன.

மிகப்பெரிய தொகையிலான புனரமைப்புப் பணி, நாட்டில் நீண்டு நீடித்த அசாதாரண சூழ்நிலை, பணவீக்கத்தின் தாக்கம் என்பவற்றின் காரணமாக திட்டமிடல், உரிய காலத்தில் இலக்கை அடைய முடியாமல் போக, வழிபடுவோர்கள் சங்கங்களும் இடையிடையே ஆலயப் புனரமைப்புப் பணி தொடர்பில் விமர்சனம் செய்தன.

இவற்றுக்கெல்லாம் ஒரு தீர்வைக்காணும் வகையில் தமிழகத்தின் கும்பகோணத்தைச் சேர்ந்த; ஆலய அமைப்பு விதிகளிலும் சிற்ப அமைப்புகளிலும் புகழ்பெற்ற அலங்காரச் சக்கரவர்த்தி ஜே.ஆர்.மோகன்ராம பட்டாச்சாரியார் இங்கு வருகை தந்திருந்தார்.

மஸ்கன் நிறுவனத்தின் உரிமையாளர் சத்தியமூர்த்தி அவர்கள் மோகன்ராம பட்டாச்சாரியாரை ஆலயத்திற்கு அழைத்து வந்திருந்தார்.

ஆலய அமைப்பு, கட்டுமானங்கள், சிற்ப வேலைகள் என்பவற்றைப் பார்வையிட்ட மோகன்ராம பட்டாச்சாரியாரிடம் ஆலயப் புனரமைப்புப் பணி தொடர்பில் சில வினாக்களை எழுப்பினோம்.

**கேள்வி:** விநாயகரின் கர்ப்பக்கிரக விமானம் சதுர வடிவில் அமைவது ஏற்புடையதா?

**பதில்:** ஆலய அமைப்பு என்பது ஆகமங்களின் அடிப்படையில் இடம்பெறுவதாகும். அவ்வகையில் சதுர வடிவில் விமானம் அமைவதை ஆகமங்கள் புறந்தள்ளவில்லை. விநாயகருக்குரிய விமானம் சதுர வடிவில் அமைய முடியும் என்பதற்கு திருச்சியிலுள்ள உச்சிப்பிள்ளையார் ஆலயத்தின் விமானம் சான்றாகும்.

**கேள்வி:** ஆலயங்களில் அமைக்கப்படும் கோமுகி ரிஷப முகத்துடன் அமைக்கப் படலாமா?

**பதில்:** சாஸ்திரங்கள் என்பன இடம், பொருள், ஏவல் என்பவற்றுக்கு அமைவாக மாற்றமடையக் கூடியவை. ஆலயங்களில் அமைக்கப்படுகின்ற அனைத்து சிற்பக்கலைகளும் தனித்து சாஸ்திரங்கள் என்பவற்றோடு மட்டும் நின்றுவிடாமல் அலங்காரம், ஈர்ப்பு என்பவற்றின் அடிப்படையிலும் செதுக்கப்படுகின்றன.

அவ்வகையில் ரிஷப முக வடிவில் கோமுகி அமைக்கப்படுவதில் எந்த சாஸ்திர மீறலும் இல்லை. ஆலய அமைப்புகளில் ஏற்படுகின்ற சில வழுக்களை நீக்கும்பொருட்டே வாஸ்து சாந்தி இடம்பெறுகின்றது.

**கேள்வி:** சிவன் - பார்வதியை அர்த்த மண்டபத்தில் (மகாமண்டப வாயிலின் இருபுறமும்) அமைப்பதற்கு ஆகம விதியில் இடம் உண்டா?

**பதில்:** தம்பதிகளுக்கு இடையில் யாரும் போகக்கூடாது என்று தர்மசாஸ்திரங்கள் கூறுகின்றன.

எனவே, சிவசக்தியைப் பிரிக்கக்கூடாது. மகா மண்டப வாயிலின் இருபுறமும் சிவன் பார்வதியைப் பிரித்து வைக்கும்போது இருவருக்கும் இடையில் மனிதர்கள் போகின்ற சந்தர்ப்பமும் உண்டு.எனவே, சிவன் சக்தியைப் பிரிக்காமல் ஒன்றாக வைப்பதே உத்தமம்.

**கேள்வி:** தேர்முட்டியின் படி ஆலயத்தை நோக்கியவாறு இருக்கவேண்டும் என்ற கருத்தின் உண்மைத்தன்மை பற்றி உங்கள் கருத்து யாது?

**பதில்:** மானிப்பாய் மருதடி விநாயகர் மேற்குத் திசையைப் பார்த்தவாறு உள்ளார். திசை என்பது எங்களுக்கு மட்டுமே. இறைவனுக்கு எல்லாத்திசையும் ஒன்றுதான்.

தேர்முட்டிக்கான படி என்பது இடவசதிக்கேற்றவாறு நாம் அமைத்துக்கொள்ள வேண்டும். பெரும்பாலான ஆலயங்களில் இப்படித்தான் உள்ளதென்பதற்காக அதுவே சாஸ்திரமாகிவிடாது.

எதிலும் ஒரு பொதுவிதி தேவை என்பது உண்மையாயினும் அதற்காக அதுவே எல்லாமுமாகிவிட்டால் பலவிடயங்களைச் செய்யமுடியாமல் போகும். மருதடியில் அமைக்கப்பட்டுள்ள தேர்முட்டிப் படி இந்த இடத்திற்குப் பொருத்தமும் நல்ல அமைப்புமாகும்.

**கேள்வி:** நவக்கிரகங்களின் பீட அமைப்பு தேரின் அமைப்பாக இருப்பது முறையானதா?


**பதில்:** அலங்கார பீடங்களை பக்திக்கு ஏற்றாற்போல அமைக்கலாம். கிரகமாற்றம் என்பது கலைச்சக்கரத்துடன் தொடர்புடையது.

சூரிய பகவான் இரதத்தில் இருந்து குதிரைகளை ஓட்டுவதாகவே சிருஷ்டிக்கப்படுகின்றார். இது காலச்சுழற்சியைக் காட்டுவதாகும்.

எனவே, சூரிய பகவானைச் சுற்றியிருக்கின்ற ஏனைய கிரகங்கள் உள்ளிட்ட நவக்கிரகங்களும் இரதத்தில் இருப்பதாகப் பீடம் அமைப்பதால் எந்தத் தவறும் இல்லை.

இவ்வாறாக மோகன்ராம பட்டாச்சரியார் பதில் அளித்தபோது அவரிடம் இருந்த அறிவு ஞானத்தின் செறிவையும் எங்களால் உணரமுடிந்தது.


லண்டனில் உள்ள (கைகேற்) உயர் குன்றவாசலில் அமைந்துள்ள முருகன் ஆலயத்திற்கு ஐந்தரை அடி உயரத்திலான முருகன், வள்ளி, தெய்வானை விக்கிரகங்களைச் செய்து கொடுத்து லண்டனில் முதன் முதலாக முருகன் விக்கிரகங்களை அனுப்பியவர் என்ற பெருமைக்குரிய மோகன்ராம பட்டாச்சாரியார் மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தைப் பார்வையிட்டு அங்கு நிலவிய ஐயங்களை நீக்கியமை காலம் அறிந்த செயல் என்று கருதுவதோடு ஐயம் தெளிவித்த கையோடு ஐங்கரனின் மகா கும்பாபிஷேகம் விரைவில் நடந்தேறும் என்ற நம்பிக்கையும் கிடைத்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு-கிழக்கு இணைந்த அரசியல் தீர்வுக்கு எவருடனும் பேச்சுவார்த்தை நடத்த தயார்

## இரா.சம்பந்தன் தெரிவிப்பு



தமிழர் தாயகமான வடக்கு-கிழக்கு இணைந்து சர்வதேச மத்தியஸ்தத்துடனான நிரந்தர தீர்வையே எதிர்பார்த்து நாம் பயணிக்கின்றோம். இதற்காக எவருடனும் பேச்சுவார்த்தை நடத்த தயாராகவுள்ளோம். ஆனால், உப்புச்சப்பற்ற தீர்வை நாம் ஒரு போதும் ஏற்கமாட்டோம். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் கிளிநொச்சியில் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக்கட்சியான இலங்கை தமிழரசுக் கட்சி செயற்குழு கூட்டம் கிளிநொச்சியில் இடம்பெற்ற போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபை மண்டபத்தில் ஆரம்பமான கூட்டத்தில் தலைமை உரையாற்றிய அவர், இந்நாட்டில் சுமார் 60 வருடங்களுக்கு மேலாக தமிழர் உரிமைக்காக நாம் போராடிக் கொண்டிருக்கிறோம். இலங்கை அரசு மீது எமக்கு நம்பிக்கை இன்மையால்தான் சர்வதேச மத்தியஸ்தத்துடனான நிரந்தர தீர்வை எதிர்பார்த்து நாம் பயணிக்கின்றோம். இந்த நிரந்தர தீர்வு தமிழர் தாயகமான வடக்கு-கிழக்கு இணைந்ததாக இருக்கவேண்டும்.

> “இலங்கை அரசு மீது எமக்கு நம்பிக்கை இல்லாமையாலேயே சர்வதேச மத்தியஸ்தத்துடனான நிரந்தர தீர்வை எதிர்பார்த்துப் பயணிக்கின்றோம்.
> -சம்பந்தன்

இதற்காக நாம் எவருடனும் பேச்சுவார்த்தை நடத்த தயாராகவுள்ளோம். ஆனால், உப்புச்சப்பற்ற தீர்வை நாம் ஒருபோதும் ஏற்கமாட்டோம். இவை எம்மை மீண்டும் அடிமைகளாக்கும்.

மாறிமாறி ஆட்சிக்கு வந்த அரசுகள் மாவட்டத்திற்குள்ளேயே தமிழருக்கான தீர்வை முன்வைக்க முயன்றன. இதனால்தான் நாம் தற்போது மிக அவதானத்துடன் செயற்படுகின்றோம்.

தமிழ் மக்களை நாம் ஒரு போதும் கைவிடமாட்டோம். நாம் அனைவரும் ஒற்றுமையுடன் செயற்படவேண்டும். இந்த ஒற்றுமை தமிழ் மக்களுக்கிடையிலும், தமிழ்க் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுக்கிடையிலும் இடம் பெறவேண்டும். தற்போது என்றுமில்லாதவாறு இலங்கை அரசு மீது சர்வதேசத்தின் அழுத்தம் அதிகரித்துள்ளது.

அதேவேளை வடக்கு-கிழக்கில் இராணுவத்தின் ஆக்கிரமிப்பினால் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை சர்வதேச சமூகமும் நன்றாக அறிந்து கொண்டுள்ளது. எனவே, சர்வதேச சமூகத்தின் பிடியிலிருந்து இலங்கை அரசு ஒரு போதும் தப்பமுடியாது.

தமிழருக்கான நிரந்தரத் தீர்வை சர்வதேச மத்தியஸ்தத்துடன் என்றோ ஒரு நாள் இலங்கை அரசு வழங்கியே தீரவேண்டும். அந்த நாள் வெகு தொலைவில் இல்லை.

நாடாளுமன்ற தெரிவிக்குழுவில் எமக்கு நம்பிக்கையில்லை. இதேவேளை, இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண்பதற்காக தான் நியமித்த நாடாளுமன்ற தெரிவிக்குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்கேற்க வேண்டும் என்றும், இலங்கை அரசு தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றது. ஆனால், அதில் எமக்கு நம்பிக்கையில்லை.

ஏனெனில் வன்னியில் இறுதி யுத்தம் முடிவடைந்த பின்னர் அரசு எம்முடன் பல சுற்றுப் பேச்சுக்களை நடத்தி, இறுதியில் தீர்வு எதனையும் முன்வைக்காது குழப்பியடித்தது.

இதனையடுத்துத் தான், நாடாளுமன்ற தெரிவிக்குழுவை அரசு அமைத்தது. ஆனால், இந்தக் குழுவில் அரச தரப்பில் 19 பேருக்கும், எதிர்த்தரப்பில் 12 பேருக்கும் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் அரச தரப்பில் உள்ள எவரும் தமிழருக்கான தீர்வை முன்வைப்பதில் இதயசுத்தியுடன் செயற்படுவார்கள் என்ற நம்பிக்கை எமக்கு இல்லை.

எனவேதான் அரசு நியமித்த நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் நாம் பங்கேற்கவில்லை என்று தெரிவித்தார். (2)

## வாக்காளராக பதிவு செய்யுங்கள்

(கொழும்பு)

வாக்காளர் பெயர் பட்டியலில் பதிவு செய்து கொள்வது தொடர்பில் விசேட கவனம் செலுத்துமாறு தேர்தல் தொடர்பான அதிகாரிகள், அரசியல் கட்சிகள் மற்றும் பொதுமக்களிடம் தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பவ்ரல் கோரிக்கை விடுத்துள்ளது.

வாக்காளர் பதிவு விண்ணப்பப் படிவங்களை பொதுமக்கள் மிக விரைவாக பூர்த்தி செய்து, தமது பிரிவு கிராம சேவகர்களிடம் ஒப்படைக்குமாறு குறித்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது.(அ-2)

## ஜூன் மாத உற்சவங்கள்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தின் இம்மாதத்திற்கான பிரதான உற்சவங்கள் பற்றிய விபரங்கள் ஆலய நிர்வாகத்தினரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய எதிர்வரும் 12 ஆம் திகதி புதன்கிழமை சேக்கிழார் குருபூசை, 15 ஆம் திகதி சனிக்கிழமை ஆனி மாத சங்கிராந்தி தீர்த்தம், 20 ஆம் திகதி வியாழக்கிழமை சிவத்தமிழ்ச் செல்வி அம்மா குருபூசை, 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆனி மாத பூரணைத் திருவிழா என்பன நடைபெறவுள்ளன. (அ)

## வெலிக்கடை சிறைச்சாலையில் மோசடி; பெண் அதிகாரிகள் மீது நடவடிக்கை

(கொழும்பு)

சிறைச்சாலைகளில் ஆண் உத்தியோகத்தர்கள் மட்டுமின்றி பெண் உத்தியோகத்தர்களும் பாரதூரமான மோசடிகளில் ஈடுபட்டு வருகிறார்கள் என புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலை சீர்திருத்த அமைச்சர் சந்திரசிறி கஜதீர கண்டனம் தெரிவித்துள்ளார்.

ஆண்,பெண் சிறை உத்தியோகத்தர்கள் தங்கள் சமூகப் பொறுப்புக்களை மறந்து போதைவஸ்து, சிகரெட், மதுபானம் போன்ற தடை செய்யப்பட்டுள்ள பொருட்களைப் பணத்திற்காக சிறைச்சாலைக்குள் கடத்திச் சென்று கைதிகளிடம் பாதுகாப்பாக ஒப்படைக்கிறார்கள். அத்துடன் இவர்கள் கையடக்கத் தொலைபேசிகளையும் இவ்விதம் சிறைச்சாலைகளுக்கு கடத்திச் செல்கிறார்கள்.

இவ்விதம் குற்றம் இழைக்கும் ஆண் மற்றும் பெண் சிறை உத்தியோகத்தர்களுக்கு எதிராக உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

வெலிக்கடை சிறைச்சாலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்ட சோதனையின்போது 52 கையடக்கத் தொலைபேசிகள் சிறைக் கைத்திகளின் அறைகளில் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டன.

அத்துடன் சிறைச்சாலையின் அறைகளிலும் கழிவறைகளிலும் மறைத்து வைக்கப்படிருந்த போதைப் பொருட்களும் அன்றைய தினம் கண்டெடுக்கப்பட்டன.

இத்தகைய மோசடிகளைத் தடுப்பதற்காக தாம் புதிதாக 73 பெண் புலன் விசாரணை உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கி, அவர்களை சகல சிறைச்சாலைகளிலும் நியமிக்க இருப்பதாகவும் அவர் மேலும் கூறினார். (2)

## கண் பரிசோதனையும் கண்ணாடி வழங்கலும்

சர்வதேச லயன்ஸ் கழகத்தின் மாவட்டம் 306-B1 இன் அனுசரணையுடன் இன்றும் நாளையும் ஆரம்ப பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக கண் பரிசோதனையின் பின்னர் கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளன.

இதற்கமைய, இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியிலும், நாளை புதன்கிழமை முற்பகல் 9 மணிக்கு மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையிலும், பிற்பகல் 3 மணிக்கு யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையிலும் கண் சிகிச்சை நிபுணர்களால் பரிசோதனை இடம்பெற்று, கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளன.

இந் நிகழ்விற்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்ட பாடசாலையிலிருந்து மாணவர்கள், அதிபர்களுடன் குறித்த நேரத்திற்கு வருகைதருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (அ)

## குழப்பம் ஏற்படுத்திய மாணவர் குறித்து ஒழுக்காற்று விசாரணை

பல்கலைக்கழக மாணவர்கள், தமது மனித உரிமைகளைக் கோருவதைப்போல் ஏனைய தரப்பினது உரிமைகளையும் பாதுகாக்க முன்வரவேண்டும் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கோரிக்கைவிடுத்துள்ளது.

கடந்த சனிக்கிழமை சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவர்கள் பதுளை-பலாங்கொடை வீதியில் பம்பகின்ன முச்சந்தியில் அமர்ந்து தமது உரிமைகளுக்கான போராட்டத்தை மேற்கொண்டதை மறக்க முடியாது என அவ் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் அவ் ஆணைக்குழு மேலும் தெரிவிக்கையில்,

இப்போராட்டம் காரணமாக பொது மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்தனர். இதேவேளை, ஆர்ப்பாட்டத்தின் போது குழப்பத்தை ஏற்படுத்திய மாணவர்கள் தொடர்பில் ஒழுக்காற்று விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக பல்கலைக்கழக நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இது குறித்த விசாரணை குழுவொன்றை இன்றையதினம் நியமிக்கவுள்ளதாக சப்ரகமுவ பல்கலைக் கழகத்தின் உபவேந்தர் மஹிந்த ரூபசிங்க தெரிவித்துள்ளார்.

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் மாணவ சங்கத்தை மீண்டும் ஸ்தாபிக்கவும் அப் பல்கலைக்கழகத்தில் வகுப்பு தடை விதிக்கப்பட்ட 5 மாணவர்களுக்கு பரீட்சை உரிமையை வழங்கக் கோரியும், கடந்த 28 ஆம் திகதி நான்கு மாணவர்கள் உண்ணாவிரதத்தை ஆரம்பித்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)



பருத்தித்துறை கிழக்கு தும்பளை புனிதமரியாள் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இவ்விளையாட்டு விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட பருத்தித்துறை பங்குத்தந்தை அருட்பணி ஜே.ஜோன்பவுலின் அடிகளார் உரையாற்றுவதையும், முன்பள்ளி சிறார்களின் உடற்பயிற்சி நிகழ்வையும், விழாவில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட வடமராட்சி வலய முன்பள்ளி கல்வி உதவிப் பணிப்பாளர் எஸ்.தில்லைநாதன் வெற்றிபெற்ற சிறுவன் ஒருவனுக்கு பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எட்டெருமைப் பாளி



ஆன்மீகம் 24


அன்னை சித்தர்
இராஜ்குமார் குருஜி

31 ஆம் திகதியின் தொடர்ச்சி...

நடிகர் சிவாஜிகணேசன் பெண் வேடம் போட்டதுபோல் 30 வயது மதிக்கத்தக்க செக்கச்செவேலென,, பட்டுப்புடவை, நகை ஆபரணங் களுடன் தாய் சக்தி வர அவர் முன்னும் பின்னும் நிறைய ரிஷிகள் வரவழியில் பாறையில் அவர்கள் செல்லும் பாதையில் அடியேன் உறங்க! அந்த அம்மா யார் அது வழியில் உறங்குகிறார்கள் என்று கேட்க, இவர் சித்தரின் பிள்ளை ராஜ்குமார் என்று கூற, அவர்கள் சற்றுத் தள்ளி குளத்தருகே சென்று என்ன செய்தார்கள் என்று பயந்து கண்களை மூட 1/2 மணி நேரத்திற் குள் அங்கிருந்து அனைவரும் புறப்பட்டுச் சென்றுவிட்டனர். இந்த மாயாஜால காட்சியை கண்டும் காணாமல் திகைத்தேன். தெய்வ ரகசியத்தைக் கூறுவது மிகத் தவறு. சொல்ல வேண்டியவர்களுக்கு சொல்லித்தானே ஆக வேண்டும்.

நீண்ட பயணத்திற்குப் பிறகு இரவு வந்தது! ஒரு இடத்தை தேர்ந்தெடுத்து அங்கு தங்கினோம். சற்றுத் தள்ளி தனியாக அமர்ந்திருந்த சித்தர் பெருமானை எங்கிருந்தோ திடீர் என்று வந்த ஒரு வண்டு அவரை ஒரு சுற்று, சுற்றிவிட்டு சென்றுவிட்டது.

சித்தர் சலனமின்றி அமர்ந்து இருந்தார்! அவ்வளவு பெரிய அதிசய வண்டை நான் என் வாழ்நாளில் கண்டதில்லை! ஆனால், அதைத் தொடர்ந்து அடுத்து நடந்த காட்சி மேலும் அற்புதமாக இருந்தது. எங்கிருந்தோ திடீர் என்று வந்து சித்தர் பெருமான் முன்பு அமர்ந்தது ஒரு இனம்புரியாத பெரிய பறவை! அப்போதும் சலனமின்றி அதை நோக்கிய சித்தர் பெருமான் அவர்கள், இதோ பாம்பாட்டிச்சித்தர் வந்தி



ருக்கிறார். தரிசனம் செய்து கொள் ளுங்கள் என்று கூறியவுடன் எல்லோரும் அந்தப் பறவையை பக்தியுடன் வணங்கினோம். அந்தப் பறவையை பார்த்த போது என் கண்களுக்கு ஒரு பெரிய தவசி ஜடாமுடியுடன் யோக தண்டம், கமண்டலத்துடன் காட்சி யளிப்பதுபோல் தோன்றியது. சற்று நேரத்தில் பறவை உருவில் வந்த பாம் பாட்டிச் சித்தர் பெருமான் பறந்து மறைந்தார்.

பச்சை மலைமேலே சென்று விட்டால் அது ஒரு தனி உலகமாகவே தெரியும். ஆங்காங்கே சின்னஞ்சிறு மலைக் கிராமங்கள், தொலைவி லிருந்து பார்த்தால் சித்திரம் தீட்டியது போல் தோன்றும். அவ்வப்போது மலை வாசிகள் நடமாட்டம்! எங்கு திரும்பினும் பசுமை! பச்சை மலை எனும் பெயருக்குப் பொருத்தமாக காட்சி யளித்தது! இந்த மலைக் காடுகளில் இரவில் தங்குவது என்பது மிக வும் ஆபத்தானது. ஆயினும் சித்தர்பெரு மான் அருளால் நாங் கள் எவ்வித ஆபத்துக் கும் ஆளாகாமல் தங்கி இருந்தோம்.


அன்று இரவு எனக்கு சரியாகத் தூக்கம் வரவில்லை. என் மனம் சித்தரைப் பற்றி சிந்திக்க துவங்கி யிருந்தது. இப்படி ஏறாத மலையேறி மூலிகைகளைத்தேடி கொடிய மிருகங்களும் கொடிய பாம்புகளும் செங்குத்தான பாறைகளும் கொண்ட திக்கு திசை தெரியாத அடர்ந்த காட் டில் தேடிய மூலிகைகளைப் பறித்துச் சென்று மருந்தாக்கி காசு சம்பாதிக் காமல் அவர்களாகத் தருவதை அன்னதானம் செய்து மகிழ்கிறாரே, எல்லாம் அறிந்த சித்தர், நிச்சயம் இதை புண்ணியம் தேடி செய்யமாட் டார்! ஆகையால் அன்னதானம் எவ்வளவு மகத்தானதாக இருக்க வேண்டும் என்று நினைத்து அன்னதா னம் செய்யும் கடமையை அவர் எனக் களித்துள்ளதையும் எண்ணினேன்! அவர்பெருமை அந்த மலையைவிட உயரமாக என்னுள் விஸ்வரூபம் எடுத்துநின்றது.

தொடரும்

# ஈழப்போராட்டத்தின் முடிவு!

## ஒரு ஆய்வுப் பார்வை

**வளர்ச்சியென்பதும் வீழ்ச்சியென்பதும் ஆயுதப்போராட்டத்தின் அமைப்புசார் கருவிசார் வளர்ச்சியோ வீழ்ச்சியோ அல்ல அது, அரசியல்சார் இயலுமையின் வளர்ச்சி, வீழ்ச்சி என்பதாகும்.**



ஒரு தேசவிடுதலைப் போராட்டத் தில் முன்னெடுக்கப்படும் போரின் வெற்றி, போராட்டத்தின் வெற்றி யாகி விடுவதில்லை. போரின் தோல்வியும் போராட்டத்தின் தோல்வி யாகி விடுவதில்லை.

கடந்த நூற்றாண்டின் இறுதியில் பயஃபிறா விடுதலைப்போராட்டம் போரில் வெற்றிபெற்றது போராட்டத் தில் தோற்றுப் போனது. ஆனால், கிழக்குத் தீமோர் போரில் தோற்றுப் போனது போராட்டத்தில் வெற்றி பெற்றது.

போர் என்பது பேரம் பேசும் சக்தியை உருவாக்குவதற்கான மார்க்கம், வலுவான பேரம்பேசும் சக்தி இல்லாதவிடத்து போர் அதற் கான ஓர் ஊடகமாகின்றது. பேரம் அனைத்துலக மற்றும் உள்நாட்டு அரசியல் புறநிலைகளால் தீர்மானிக் கப்படக்கூடியது வெறும் போரினால் அல்ல.

ஆயுதப் போராட் டத்தின் இலட்சியம் அரசியல் இலக்குத் தான். மிதவாத அரசி யலால் தீர்க்க முடி யாத அரசியல் பிணக் குகள் அரசியல் வன் முறை வடிவாக மாறு கின்றன. எழுந்த வாரியான இந்த வன்முறை வடிவம் முதிர்ந்து ஒழுங்கு பெற்று ஆயுதப் போராட்டமாக பண்பு மாற்றம்கொள் கின்றது.

அரசியல் பிணக்கினால் உருவாகும் எல்லா ஆயுதப்போரினதும் இறுதி இலட்சியம் அரசியல் வெற்றியே. ஆயின் ஆயுதப்போர் அரசியலுக்கு உட்பட்டதும் அரசியல் அறிவினால் வழிநடத்தப்பட வேண்டியதும் அதன் விளைவுகள் அரசியல் அளவீடு களினால் அளக்கப்பட வேண்டியது மாகும்.

ஒரு மக்கள் சமூகத்தின் வன்முறை எப்போது அரசியல் கோட்பாட்டினால் வழி நடத்தப்படுகின்றதோ அப்போது அது ஆயுதப்போராட்டமாக பண்பு மாற்றம் பெறுகின்றது எனலாம்.

தேசவிடுதலைகோரி முன்னெடுக் கப்படும் ஒரு ஆயுதப்போராட்டம் அதன் உள்நாட்டு அரசியலுடன் மட்டும் சம்ம[illegible] அதன் தாக்க விளைவுகள் பிராந்திய அனைத்துலக அரசியலைப் பாதிக்க வல்லது. அதேபோல அனைத்துலக அரசியலில் ஏற்படும் மாற்றங்கள் போராட்டத்தை பாதிக்கவல்லது. ஆயின் அது அனைத்துலக அரசியல் அதன் ஒழுங்கு என்பற்றோடு பின்னிப் பிணைகின்றது.

இங்கு தேசிய விடுதலைப் போராட் டத்தில் அதன் முன்னேற்றம் பின்ன டைவு வெற்றி அல்லது தோல்வி அனைத்துலக அரசியலுக்குட்படுகின் றது. உலக அரசியல் உறவுகளின் நுண்மையான அறிவுகொண்டு ஒரு விடுதலைப்போராட்டம் வழி நடத்தப் படவும் அளவீடு செய்யபடவும் வேண்டியதாகும்.

ஒரு விடுதலைப்போராட்டத்தின் வளர்ச்சியில் உள்நாட்டுக் காரணிகள் தாக்கத்தைச் செலுத்தலாம். ஆனால், ஒரு தேசிய விடுதலைப் போராட்டம் வெற்றிபெற்று புதிய நாடு உருவா குவதென்பது அனைத்துலக அரசியல் காரணிகளால் நிர்ணயிக்கப்படுவதா கும்.

ஆயுதப்போராட்ட அமைப்பொன்று தான் முன்னெடுக்கின்றபோரில் ஒவ்வொரு வெற்றியும் அதன் முழு மையான அரசியல் இலட்சியத்தில் பகுதி ரீதியான அரசியல் வெற்றி யைப்பெறவேண்டும். போரில் பெறும் ஒவ்வொரு வெற்றியும் அதற்குரிய அரசியல் நல்விளைவைப் பெற வில்லையெனின் போரில் பெறப் பட்ட வெற்றி போராட்டத்தின் வெற் றியாகவோ முன்னேற்றமாகவோ ஆகிவிடாது.

அரசியல் நல்வினையை அடைய முடியாது எந்தச் சமரினதும் மகத்து வமான வெற்றிக்கும் போராட்ட அர்த்தத்தில் எந்தப் பெறுமானமும் கிடையாது ஆக. வளர்ச்சியென்ப தும் வீழ்ச்சியென்பதும் ஆயுதப் போராட்டத்தின் அமைப்புசார் கருவிசார் வளர்ச்சியோ வீழ்ச்சியோ அல்ல அது, அரசியல்சார் இயலுமை யின் வளர்ச்சி வீழ்ச்சி என்பதாகும்.


தமிழீழ விடுதலைக்கான ஆயுதப் போராட்டம் கடந்த நூற்றாண்டின் இறுதியில் நிகழ்ந்த உலக முக்கியத்து வம் மிக்க போராட்டமாகும். வல்லமை, ஒழுங்கு தொழிற்திறன் கொண்ட உலகின் முக்கியத்துவம் மிக்க ஆயுதப்போராட்ட அமைப்பாக விடுதலைப்புலிகள் இயக்கம் இருந் தது.

இப்போது அதன் முப்பது ஆண்டு கால முதிர் இயலுமை முறியடிக் கப்பட்டிருக்கின்றது. இது தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல விடுதலைக் காக போராடும் சமூகங்களுக்கும் எதிர்நிலையாளர்களுக்கும் கூட முக்கிய ஆய்வுப் பொருளாகி யிருக்கின்றது.

குணா- புதினப்பலகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# சிறுவர் அரங்கம்

475

## விலையுயர்ந்த ஆஸ்தி



வெகு நாட்களுக்கு முன்னால் அமராவதி பட்டணத்தை வீரசேனன் என்றொரு மன்னன் ஆண்டு வந்தான். அவன் தன்னிடம் ஊழியம் புரியும் அதிகாரிகளை சற்றும் நம்புவதே இல்லை. ஏனெனில், அவர்கள எல்லோரும் எப்போதும் அவனை இந்திரனென்றும், சந்திர னென்றும் புகழ்ந்து முகஸ்துதி செய்து வந்தனர். இதனால் வீரசேனன் அவ்வப்போது மாறு வேடம் பூண்டு, நாட்டின் பல பகுதிகளுக்கு சென்று, உண்மை நிலையை நேரில் தெரிந்து கொண்டு வருவான்.

ஒரு நாள் அவன் மாறுவே டத்தில் ஒரு காட்டின் வழியாகச் சென்று கொண்டிருக்கையில், யாரோ ஒருவன் புல்லாங்குழல் ஊதிக்கொண்டிருப்பதைக் கண் டான். அவன் ஆடு, மாடுகளை மேய்க்கும் பதினாறு வயது வாலிபன். கந்தலான ஆடைகளை

**அம்புலிமாமா கதைகள்**

அணிந்திருந்தாலும் அவன் பார்ப்ப தற்கு அழகாகவேஇருந்தான்.

அவன் பெயர் முருகன். அவன் அரசன் கேட்ட கேள்விகளுக்கு எல்லாம் சற்றும் தயங்காமல் பதில் அளித்தான். அவனுக்குச் சூதுவாது ஒன்றும் தெரியாது. வெள்ளை மனது. அவனது பேச்சில் கள்ளம் கபடமற்ற தன்மையும், நேர்மையும் நன்கு புலப்பட்டது. அவனிடம் அரசன் "முருகா, நீ என்னோடு வந்து விடு. உனக்கு நல்ல சாப்பாடு போட்டு, நல்ல ஆடைகளையும் கொடுத்து வேலையும் கொடுக் கிறேன்" எனக் கூறினான். முருக னும் அதற்குச் சம்மதித்தான்.

முருகனும், வீரசேனனும் அமரா வதிப் பட்டணத்திற்கு வந்து சேர்ந்தனர். மன்னன், முருகனைத் தன்னுடன் அழைத்துக்கொண்டு அரன்மனைக்குள் சென்றபோ துதான், அந்த வாலிபனுக்கு தன்னுடன் பேசியது அந்தநாட்டு மன்னனென்றும் தெரிந்தது. அரச னுக்குத் தன்மீது அபிமானம் ஏற்பட்டதற்காக அவன் பெருமிதம் கொண்டான். முருகனுடைய கந்த லான ஆடைகளுக்குப் பதிலாக மிக நேர்த்தியான ஆடைகளையும், நவரத் தினங்களையும் பதித்த தலைப் பாகையையும் அவனுக்கு கொடுத்



தனர். அவனுக்கு எழுதப்படிக்க கற்றுக் கொடுத்து, அரச தர்பார் விவகாரங் களையும் விளக்கிச்சொன்னார்கள். கொஞ்சநாட்களுக்கு பிறகு, அரசன் அவனைத் தன் பொக்கிஷதாரனாக நியமித்துக் கொண்டான். அவ்வளவு நம்பிக்கை மன்னனுக்கு முருகனின் மீது ஏற்பட்டு விட்டது.

கொஞ்ச நாட்களுக்குப் பிறகு, வீரசேனன் மன்னன் இறந்துவிடவே அவனுடைய மகன் கனகசேனன் அரசனானான். அந்நாட்டு அரசாங்க அதிகாரிகளில் பலருக்கு முருகனைக் கண்டாலே மிகுந்த வெறுப்பும், பொறாமையும் இருந்தது. அதற்குக் காரணம் அவர்களையெல்லாம் விடுத்து வீரசேனன், முருகனை நம்பி பொக்கி ஷத்தைக் கண்காணிக்கும் பொறுப்பை அவனிடம் விட்டதே.

அந்த அதிகாரிக்கெல்லாம் ஒன்று சேர்ந்து, புதிய அரசனான கனக சேனனிடம் போய் "மன்னா, இந்த முருகன் பொக்கிஷத்தை கொள்ளைய டித்துக்கொண்டே போகிறான். நீங்கள் மிகுந்த எச்சரிக்கையாகவே இருக்க வேண்டும்" எனக் கூறினார்கள்.

அது கேட்டவுடனே மன்னன் அவர்களிடமே முருகன் இப்படிச் செய்வதைக் கண்டுபிடிக்க நீங்களே ஒரு வழி கூறுங்கள்" என்றான்.


அதற்கு அவர்கள் "உங்கள் தாத் தாவிடம் ரத்தினங்கள் பதித்த உறை யோடு கூடிய ஒரு வாள் இருந்தது. அதை இப்போது கொண்டு வந்து காட்டச் சொல்லுங்கள்" என்றனர். அரசனும், முருகனைக் கூப்பிட்டு அந்தக் கத்தியைக் கொண்டு வரும்படி கூறினான். முருகனோ ஐயா, உங்களது தந்தையார் அதிலிருந்த ரத்தினங்களை எடுத்து, ஆபரணங்களைச் செய்து விட்டார்" என்றான். அதுமட்டுமல்ல அந்த நகைகள் என்னவென என்ப தையும் கூறினான். முருகன் கூறியது உண்மையென்பது எல்லோருக்கும் தெரிந்து விட்டது.

அதன்பிறகு, அரசன் தன்னிடம் முருகனைப் பற்றி குறை கூறிய வர்களிடம் "இவன் குற்றமற்ற வனென்பது தெரிந்துபோய்விட்டது. இப்போது என்ன சொல்கிறீர்கள்" எனக்கேட்டான். அதற்கு அவர்கள் மன்னா, இப்போது பொக்கிஷத் திலுள்ள எல்லாப் பொருள்களின் ஜாபிதா ஒன்றைத் தயாரிக்கச் சொல் லுங்கள் அதையும் பழையஜாபி தாவையம் ஒத்திட்டுப் ப்ார்த்தால் உண்மை தெரியும்" என்றனர்.

அரசனும் அவர்கள் சொன்ன விதமே கட்டளையிட, முருகனும் புதிய ஜாபிதாவைத் தயாரித்துக் கொடுத்தான். அதன்படி பார்த்தால் பொக்கிஷத்திலிருந்து எப்பொருளும் களவாடப்பட்டதாகத் தெரியவில்லை. ஜாபிதாப்படி பொக்கிஷத்தில் எல்லா பொருள்களும் இருக்கின்றனவா



எனச் சரிபார்க்க அரசன் தன் குடும் பத்தோடு பொக்கிஷ அறைக்கு சென்றான். அதைக்கண்டதுமே அரசனுக்கு அளவிலா ஆனந்தம்



ஏறபட்டது. ஏனெனில், எல்லா பொருள்களும் ஒழுங்காக உரிய இடத்தில் வைக்கப்பட்டிருந்தன.

வெகுசீக்கிரத்திலேயே தணிக்கையும் முடிந்தது.

அரசனும், மற்றவர்களும் அந்த அறையை விட்டு வெளிக்கிளம்பும் போது, ஒரு அதிகாரி ஓரிடத்தைச் சுட்டிக்காட்டி "அதோ பாருங்கள், ஒரு சிறிய இரும்புக் கதவு இருக் கிறது. அதைத் திறந்தால் அதனுள் என்ன இருக்கிறதென்று தெரியும்" என்றான். அரசனும், முருகனிடம் "அதில் என்ன இருக்கிறது? அதை ஏன் இந்த ஜாபிதாவில் சேர்க்க வில்லை? "எனக் கேட்டான்.

அதற்கு முருகன் "அரசே, என்னை மன்னியுங்கள். ஆனால், அதனுள் இருப்பது என் பொருள். அது எனக்கு மிகவும் விலை உயர்ந்தது. எனது உயிரினும் அரியது. எனவே, அதை இந்த ஜாபிதாவில் சேர்க்க வில்லை" என்றான். அதைக் கேட்ட மன்னன்,முருகன் மீது சந்தேகப் பட்டவாறே "உம். அந்தக் கதவைத் திறக்க, அதனுள் ஒரு பழைய கம்பளியும், இரு பழைய செருப் புகளும், ஒரு புல்லாங்குழலும் இருந்தன. அதைக்கண்ட அரசன் திகைத்துப்போய் " முருகா, இதுதான் உனக்கு விலையுயர்ந்த பொருள்களா? எனக்கேட்டான். முருகனும் "ஆமாம். இது தான் என் சொத்து. இங்கு நான் வேலைக்கு எடுத்துக்கொள்ளப் படுகையில் அணிந்திருந்த ஆடை களும், பொருள்களும் இவை. இங்கிருந்த இவ்வளவு நாட்களாக நான் சுகமென்பதையே அறிய மாட்டேன். இந்தப் பொருள்கள் என்னிடம் இருந்தவரைதான் நான் சுகவாழ்வு வாழ்ந்தேன் " என்றான்.

அதைக்கேட்ட மன்னனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. "என்ன சொல்கிறாய் முருகா? " என்றான்.

"மன்னிக்க வேண்டும் மகாராஜா! ஆடம்பரமான உடைகளோ, பணமோ் நவரத்தினங்களோ ஒருவனுக்கு உண்மையான ஆஸ்தி இல்லை. அவன் மனம் நிம்மதியாக இருக்க செய்யும் பொருள்களே விலையு யர்ந்த ஆஸ்தி" என்றான்.

அரசன் அது கேட்டு ஆச்சரியமும், ஆனந்தமும் கொண்டான். அது மட்டுமல்ல, முருகனிடம் மட்டற்ற மரியாதையும், கௌரவமும் அவ னுக்கு ஏற்றபட்டது. அவன் முருக னைத் தன் தந்தையினும் மிக, மிக கௌரவமாக நடத்தி வரலானான். அவன் மீது வீணாக அவதூறு சொன்னவர்களை உடனே வேலை யினின்றும் நீக்கியும்விட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாழடைந்த வீடொன்றில் ஆயுதங்கள் மீட்பு

திருக்கோவில் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட தம்பிலுவில்-2 மேற்கு கிராமசேவகர் பிரிவில் அமைந்துள்ள பாழடைந்த வீடொன்றில் இருந்து ஒரு தொகுதி ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தம்பிலுவில் கலைமகள் பாடசாலைக்கு முன்பாகவுள்ள பிரதான வீதியில் மிக நீண்ட காலமாக குடியிருப்பாளர் இல்லாத வீடு ஒன்றில் இருந்து இந்த ஆயுதங்கள் திருக்கோவில் பொலிஸாரால் நேற்று முன்தினம் மீட்கப்பட்டன.

வீட்டின் காணியினுள் நீர்க் குழாய் ஒன்றைப் பொருத்துவதற்காக குழியொன்றை வெட்டிய போது குறித்த ஆயுதங்களுடன் சந்தேகத்துக்கிடமான முறையில் உரப்பொதி ஒன்று காணப்படுவதாக பொலிஸாருக்கு பிரதேசவாசிகளால் அறிவிக்கப்பட்டது.

இதன்படி, அங்கு சென்ற பொலிஸார் நிலத்தில் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் இருந்த ஆயுதங்களை மீட்டதாக திருக்கோவில் பிரதி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

இவ்வாறு மீட்கப்பட்ட ஆயுதங்களில் ரி 56 ரக துப்பாக்கி இரண்டு, கிரனேட் லோஞ்சர் ஒன்று, துப்பாக்கி ரவைகள் அறுபது மற்றும் துப்பாக்கி ரவைக் கூடுகள் இரண்டு என்பன அடங்குகின்றன. (2)

# ஆளில்லா உளவு விமானம் தயாரிக்கப்பட்டுள்ளது

இலங்கையின்முதன்முறையாக ஆளில்லா உளவு விமானமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தினரால் குறித்த விமானம் தயாரிக்கப்பட்டுள்ளது.

பொறியியல் பீடத்தைச் சேர்ந்த நான்கு மாணவர்களும் பல்கலைக்கழக பேராசிரியர் சுதத் ரோஹனவும் இணைந்து இந்த ஆளில்லா உளவு விமானத்தை தயாரித்துள்ளனர்.

200 மீற்றர் உயரத்தில் பறந்து 12 நிமிட நேரத்திற்கு உளவுப் பணியில் ஈடுபட்டு தகவல்களை வழங்கக் கூடிய வகையில் இந்த விமானம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த விமானத்திற்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெற்றுக் கொள்ளப்படவுள்ளது.

அனுமதி கிடைத்தவுடன் அனுசரணையாளர்களின் உதவியுடன் விமானத்தை மேலும் மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது. (2)

# சவுதிக்கான இலங்கைத் தூதுவர் பதவி ஏற்பு-அரப்டைம்ஸ் தகவல்

சவுதி அரேபியாவுக்கான புதிய இலங்கை தூதுவர் வடிவேல் கிருஷ்ணமூர்த்தி,அங்குள்ள இலங்கை தூதரகத்தில் தமது பதவிய்ய ஏற்றுக் கொண்டுள்ளதாக அரப்டைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. வடிவேல் கிருஷ்ணமூர்த்தி இதற்கு முன்னர் சென்னையில் இலங்கை உதவி உயர்ஸ்தானிகராக பணியாற்றி வந்தார்.

இலங்கை பணிப்பெண் ரிசானா நபீக்கின் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து மீளழைக்கப்படிருந்த இலங்கைக்கான சவுதிஅரேபியாவின் தூதுவர் அசீஸ் அப்துல் ரஹ்மானும் மீண்டும் கொழும்பில் உள்ள சவுதி தூதரகத்துக்கு திரும்பியுள்ளார்.

இலங்கையில் இருந்து வெளிநாடுகளுக்கு சென்று பணியாற்றும் 1.5 மில்லியன் இலங்கையர்களில் ஐந்து இலட்சம் பேர் சவுதி அரேபியாவில் பணியாற்றுகின்றனர். இந்த நிலையில் சவுதிக்கும் இலங்கைக்கும் இடையிலான இராஜதந்திர உறவு, முக்கியத்துவம் வாய்ந்ததாக கணிக்கப் படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ-4)

# புலம்பெயர் விடுதலைப்புலி ஆதரவாளர்களை தெளிவுபடுத்த வேலைத்திட்டம்

## மனித.ஆணை.நாயகம் மகாநாமஹேவா தெரிவிப்பு

வெளிநாடுகளில் வாழும் புலம்பெயர் தமிழீழ விடுதலைப்புலி ஆதரவாளர்களைத் தெளிவுபடுத்தும் வகையில் விசேட வேலைத்திட்டம் ஒன்றை செயற்படுத்தவுள்ளதாக இலங்கை மனிதவுரிமைகள் ஆணையாளர் நாயகம் பிரதீப் மகாநாமஹேவா தகவல் வெளியிட்டுள்ளார்.

இதன் பொருட்டு,சர்வதேச நாடுகளில் வாழும் இலங்கை சார்ந்த புலம்பெயர்ந்தவர்களைப் பயன்படுத்திக் கொள்ள தாம் எதிர்பார்த்துள்ளதாகவும் குறிப்பிட்டதோடு, குறிப்பாக , இலங்கையின் மனிதவுரிமைகள் தொடர்பில் புலம் பெயர்ந்தவர்களிடையே சென்றடையும் முறையற்ற அபிப்பிராயங்களை சரிபடுத்துவதே இவ் வேலைத்திட்டத்தின் பிரதான நோக்கம் என்றும் தெரிவித்துள்ளார்.

புலம்பெயர் தமிழீழ விடுதலைப்புலி ஆதரவாளர்களை இலக்கு வைத்து வேலைத் திட்டங்களை முன்னெடுக்க முடியும் என்று தெரிவித்த ஆணையாளர், அவர்களிடம் சென்று வலியுறுத்தக் கூடியதான சில புலம் பெயர்ந்த அமைப்பினர் தமக்கு ஒத்துழைப்பு வழங்கிவருவதாகவும் குறிப்பிட்டார்.

இதன்மூலம் மத்தியஸ்தம் வகிக்கும் புலம் பெயர்ந்தவர்களையும் எமது பக்கம் திசைதிருப்பிக் கொள்ள முடியும்.பாலஸ்தீனம், ஈராக், இஸ்ரேல் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளின் புலம் பெயர்ந்தவர்கள் , தமக்கு மிகவும் நெருக்கமான முறையில் ஆதரவை வழங்குவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

அவர்களுடன் நெருக்கமான உறவுகளை பேணும் போது, மேலை நாடுகளில் உள்ள புலம்பெயர்ந்தவர்களுடன் தொடர்பு கொண்டு இலங்கையின் நிலைமை தொடர்பில் தெளிவுபடுத்த முடியும் என்று இலங்கை மனிதவுரிமைகள் ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டார். (2)




# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- ❖ கி.மு. 780 - முதலாவது சூரிய கிரகணம் சீனாவில் பதியப்பட்டது.
- ❖ 1039 - மூன்றாம் ஹென்றி புனித ரோமப் பேரரசன் ஆனான்.
- ❖ 1584 - சேர் வால்ட்டர் ரேலி முதலாவது ஆங்கிலக் குடியேற்றத்தை வட கரோலினாவின் ரோனோக் தீவில் அமைத்தார்.
- ❖ 1707 - யாழ்ப்பாணத்தில் தேசவழமைச் சட்டம் ஒல்லாந்தரினால் அமுல் படுத்தப்பட்டது.
- ❖ 1794 - பிரித்தானியப் படைகள் ஹெயிட்டியில் போட்-ஓ-பிரின்ஸ் துறைமுகத்தைக் கைப்பற்றின.
- ❖ 1878 - ஓட்டோமான் பேரரசு சைபிரசை ஐக்கிய இராச்சியத்துக்கு கொடுத்தது.
- ❖ 1917 - முதலாவது புலிட்சர் பரிசுகள் வழங்கப்பட்டன.
- ❖ 1928 - சீனக் குடியரசின் அரசுத் தலைவர் சாங்சுவோலின்ஜப்பானியக் கையாள் ஒருவனினால் படுகொலை செய்யப்பட்டார்.
- ❖ 1939 - 963 யூத அகதிகளை ஏற்றிச் சென்ற கப்பல் ஐக்கிய அமெரிக்காவினால் திருப்பி அனுப்பப்பட்டது. இந்த அகதிகளில் பெரும்பாலானோர் பின்னர் ஜேர்மனியின் நாசி வதை முகாமில் சிறைவைக்கப்பட்டுக் கொல்லப்பட்டனர்.
- ❖ 1940 - இரண்டாம் உலகப் போர்: பிரான்சின் டன்கேர்க் என்ற இடத்தில் இருந்த 3 இலட்சம் பிரித்தானியப் படைகள் முற்றாக விலக்கிக் கொள்ளப்பட்டன.
- ❖ 1943-ஆர்ஜெண்டீனாவில் நிகழ்ந்த இராணுவப் புரட்சியில் ரமோன் கஸ்டீல்லோ பதவியிழந்தார்.
- ❖ 1944 - இரண்டாம் உலகப் போர்: ரோம் நகரம் நேச அணிகளிடம் வீழ்ந்தது.
- ❖ 1970 - தொங்கா ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து விடுதலை அடைந்தது.
- ❖ 1973-ஏடிஎம் இயந்திரத்துக்கான காப்புரிமத்தை டொன் வெட்சல், டொம் பார்ன்ஸ், ஜோர்ஜ் சாஸ்டெயின் ஆகியோர் பெற்றனர்.
- ❖ 1979 - கானாவில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியில் ஜெனரல் ஆச்சியாம் பொங் பதவியிறக்கப்பட்டு ஜெரி ரோலிங்க்ஸ் ஆட்சிப்பொறுப்பை ஏற்றார்.
- ❖ 1987 - பூமாலை நடவடிக்கை: இலங்கையின் ஆளுகைக்குட்பட்ட வான்பரப்பில் அத்துமீறி உள்நுழைந்த இந்திய வான்படை விமானங்கள் யாழ். குடாநாட்டின் மீது உணவுப் பொதிகளை வீசியது.
- ❖ 1989 - சீனாவில் தியனன்மென் சதுக்கத்தில் இடம்பெற்ற மாணவர் போராட்டம் இராணுவத்தினரால் நசுக்கப்பட்டது. அதில் மாணவர்களும் பொதுமக்களும் உயிரிழந்தனர்.
- ❖ 1989-போலந்தில் இடம்பெற்ற பொதுத் தேர்தலில் சொலிடாரிட்டி இயக்கத்தின் வெற்றி கிழக்கு ஐரோப்பாவில் கம்யூனிசத்துக்கு எதிரான புரட்சியைக் கிளறியது.
- ❖ 1989 - ரஷ்யாவில் இரண்டு தொடரூந்துகள் இயற்கை வாயுக் குழாய் ஒன்றைக் கடக்கையில் இடம்பெற்ற விபத்தில் 575 பேர் பலியாகினர்.
- ❖ 2001 - அரச மாளிகையில் ஜூன் 1 இல் இடம்பெற்ற படுகொலைகளை அடுத்து கயானேந்திரா நேபாளத்தின் மன்னராக முடி சூடினார்.

பிறப்புகள்

- ❖ 1910-கிறிஸ்தோபர் கொக்கரல், ஆங்கிலேயக் கண்டுபிடிப்பாளர் (இ. 1999)
- ❖ 1946 - எஸ். பி. பாலசுப்ரமணியம், இந்தியத் திரைப்பட இசைப் பாடகர்
- ❖ 1959 - அனில் அம்பானி, இந்தியத் தொழில் அதிபர்
- ❖ 1887 - பெ. வரதராஜிலு நாயுடு, இந்திய அரசியல்வாதி (இ. 1957)

இறப்புகள்

- ❖ 1925 - வ. வே. சு. ஐயர், இந்திய விடுதலைப் போராட்ட வீரர் (பி.1881)
- ❖ 2001- ரி.பேந்திரா , நேபாள மன்னர் (பி. 1971)

## வ.வே. சுப்பிரமணியம்



வ.வே. சுப்பிரமணிய ஐயர் 1881 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதி பிறந்தார். இவர் இந்திய விடுதலைக்காக முதன்மைப் பங்காற்றியவரும் சிறந்த இலக்கியவாதியும் மொழி பெயர்ப்பாளரும் ஆவார்.

தமிழகத்திலுள்ள திருச்சிராப்பள்ளியைச் சேர்ந்த இவர் தமிழ் இலக்கிய பங்களிப்புகளுக்காக தமிழ் சிறுகதையின் தந்தை என்றும் அழைக்கப்படுகிறார். வ.வே. சுப்பிரமணியம் திருச்சி செயிண்ட் ஜோசப் கல்லூரியில் கல்வி பயின்றார். பன்னிரண்டாம் வயதில் தகுதித் தேர்வு எழுதி மாநிலத்தில் ஐந்தாவதாகத் தேறினார். சென்னை சென்று சட்டத்தரணி பரீட்சையில் முதல் பிரிவில் தேறி சென்னை மாநகர் ஜில்லா நீதிமன்றில் முதல் வகுப்பு (ப்ளீடராகச்) சேர்ந்து சட்டத்தரணியாக தொழில் புரிந்தார்.

கிரேக்கம், இலத்தீன், பிரெஞ்சு, ஆங்கிலம், சமஸ்கிருதம், தமிழ் மொழிகளில் ஆழ்ந்த புலமை பெற்றார். வழக்கறிஞர் பட்டம் பெற்றதும் பத்தொன்பதாம் வயதில் திருச்சி திரும்பி வழக்கறிஞர் தொழில் நடத்தி வந்தார்.

வ.வே.சுக்கு மகாத்மா காந்தியை சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. அதிதீவிரவாதியான வ.வே. சு. தன் கைத் துப்பாக்கியைக் காந்தியிடம் ஒப்படைத்து விட்டு அஹிம்சாவாதியாக மாறினார். முதல் உலகப் போர் முடிந்ததும் வ.வே. சு. பிரிட்டிஷ், இந்தியா வர அனுமதிக்கப்பட்டார். 14 ஆண்டுகள் தான் பிறந்து வளர்ந்த வீட்டிற்கு வரமுடியாமல் ஏனைய மனிதர்களுக்காக போராட்டத்தில் தன் வாழ்வை அர்ப்பணித்த வ.வே.சு. 1920 இல் பொதுமன்னிப்புப் பெற்று திருச்சிராப்பள்ளியிலுள்ள வரகனேரி இல்லம் வந்தார்.

1922 இல் சேரன் மாதேவியில் தமிழ்க் குருகுலம் என்ற கல்வி நிலையத்தையும் அதை நிர்வகிக்க பரத்வாஜ் ஆசிரமத்தையும் அமைத்தார். 1924 இல் பாலபாரதி என்ற இதழைத் தொடங்கி தொழிற் கல்வியும் அறிவுக் கல்வியும் மாணவர்களுக்கு அளித்தார். தமிழ் குருகுலத்தில் அனைத்து மாணவர்களுக்கும் ஒரே மாதிரியான முறையில் நன்னெறிகளும் அறிவியலும் கலை இலக்கியங்களும் உடல்வலிவுப் பயிற்சிகளும் போதிக்கப்பட்டன. தம் குருகுல மாணவர்களுடன் 1925 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 3 ஆம் திகதி அம்பா சமுத்திரம் அருவியைக் காட்டுவதற்கு மகள் சுபத்திராவுடன் மகன் கிருஷ்ணமூர்த்தியையும் அழைத்துக் கொண்டு சுற்றுலா சென்றார். சுற்றுலாவைக்கூட மாணவர்களை வீரர்களாக உருவாக்கும் ஒரு வாய்ப்பாகக் கருதிய வ.வே.சு. அருவியை பயமின்றி தாண்டுமாறு மாணாக்கருக்குப் பணித்தார். தன் பெண் குழந்தைக்கும் அருவியைத் தாண்ட அனுமதித்தார். சிறு பெண்ணான சுபத்திரை அம்முயற்சியில் தவறி அருவியில் விழுந்தார். அவரைக் காப்பாற்ற குதித்த வ.வே.சுவும் அவ்வருவியிலேயே 1925 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 4 ஆம் திகதி அமரத்துவம் எய்தினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் அமைப்பு திருத்தங்களால் பயன் விளையுமா?

அரசியலமைப்பைத் திருத்துவதற்காக மூன்று குழுக்கள் தற்போது முயற்சி செய்து வருகின்றன. அல்லது உண்மையிலேயே திருத்துவார்களோ இல்லையோ, திருத்துவதற்கான திட்டங்களை முன்வைத்திருக்கிறார்கள்.

முதலாவதாக, மாதுலுவாவே சோபித்த தேரர் மற்றும் அரசியலமைப்புத்துறை சட்டத்தரணி ஜே.சீ வெலிஅமுன ஆகியோர், ஒரு திட்டத்தை சமர்ப்பித்தனர். பின்னர் ஜாதிக ஹெல உறுமயவும் அதனை அடுத்து ஐக்கிய தேசியக் கட்சியும் வெவ்வேறு திட்டங்களை சமர்ப்பித்துள்ளனர்.

சோபித்த தேரரின் தலைமையிலான குழுவினர் சமர்ப்பித்துள்ள திட்டத்தில் நிறைவேற்று ஜனாதிபதி முறையை இரத்துச் செய்வது என்ற விடயத்திற்கே முதலிடம் கொடுக்கப்பட்டுள்ளது.

இனப்பிரச்சினையை தீர்ப்பது என்ற விடயத்திற்கு அதில் எந்தளவு முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது என்பது தெளிவாகவில்லை. ஆனால், அந்தக் குழுவில் உள்ள சோபித்த தேரரை தவிர்ந்த ஏனையோர்களைப் பார்க்கும்போது, அவர்கள் அதிகாரப் பரவலாக்கலை அரசியலமைப்பிலிருந்து நீக்கிவிடுவார்கள் என்று கருதமுடியாது.

சோபித்த தேரர் ஒரு காலத்தில் அதாவது, 1990 களில் சிங்கள தேசிய வாதத்தின் தலைவர்களில் ஒருவராக இருந்தார். முன்னாள் அமைச்சரும் சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவருமான காலஞ்சென்ற எம். எச். எம் அஷ்ரப்பினால் அக்காலத்தில் கொண்டு வரப்படவிருந்த கல்வியில் சம வாய்ப்புச் சட்டம் மற்றும் ஹலால் சட்டம் ஆகியவற்றை கடுமையாக எதிர்த்தவர்களில் அவரும் ஒருவர். அதிகாரப் பரவலாக்கல் திட்டத்தையும் அவர் எதிர்த்தார்.

இலங்கையில், இனப்பிரச்சினை என்று ஒன்று, இல்லை என்று வாதாடியவர்களில் அவரும் முன்னணியில் இருந்தார். ஆனால், அதன் பின்னர் நீண்டகாலமாக அவர், அரசியல் ரீதியாக முடங்கிப்போயிருந்தார். சமூக விடயங்களிலும் அவரைப் பற்றிய செய்திகள் ஊடகங்களில் காணப்படவேயில்லை.

ஆனால், அண்மைக்காலமாக அவர், ஜனநாயகத்திற்காக குரல் கொடுக்க முன்வந்திருந்திருப்பதை அவதானிக்க முடியிகிறது. அதில் ஒரு அங்கமாகவே அவர், சட்டத்தரணி வெலி அமுன போன்றவர்களுடன் இணைந்து நிறைவேற்று ஜனாதிபதி முறையை இரத்துச் செய்வதை முதன்மையாகக் கொண்ட அரசியலமைப்பு நகலொன்றை தயாரிப்பதில் தமது பங்களிப்பை வழங்கியிருக்கிறார்.

அவரது அண்மைக்கால நடவடிக்கைகளில் இனவாதத்தைக் காணக் கூடியதாக இல்லை. ஹலால் உணவு வகைகளைப் பற்றி தவறான கருத்துக்களை பரப்பிக்கொண்டு உணவு வகைகளை ஹலால், ஹராம் என்று வகைப்படுத்தவதை அவர் அக்காலத்தில் மிக மோசமாக எதிர்த்தார். ஆனால், அண்மைக்காலத்தில் பொது பல சேனா, ஹெல உறுமய, சிஹல ராவய மற்றும் ராவணா சக்தி போன்ற குழுக்கள், ஹலால் முத்திரைக்கு எதிராகப் பெரும் போராட்டம் நடத்தினாலும் அவர் அவ் அமைப்புகளுக்கு ஆதரவாக ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

எனவே, அவர்களது அரசியலமைப்பு நகலில், சிறுபான்மை மக்கள் பாதிக்கப்படக் கூடிய எதுவும் இல்லை என்று நம்ப வேண்டியுள்ளது. ஆனால், எந்தவொரு அரசியல் கட்சியும் அதனை இன்னமும் ஏற்றுக்கொள்ளவில்லை. அவ்வரசியலமைப்பு நகலை சட்டமாக்குவது எவ்வாறு என்பது கேள்விக் குறியாகவே இருக்கிறது.

ஹெல உறுமய கட்சி முழுமையான அரசியலமைப்பு நகலொன்றையே சமர்ப்பிக்கவில்லை. மாறாக அக்கட்சி, அரசியலமைப்புத் திருத்த நகலொன்றையே சமர்ப்பித்துள்ளது. **அதன்மூலம் அக்கட்சி, அதிகாரப் பரவலாக்கல் முறையை முற்றாக ஒழிக்க வேண்டும் என்றே பிரேரித்துள்ளது.**

எனவே, அக்கட்சியினர் அதிகாரப் பரவலாக்கலுக்கு சட்ட அடிப்படையாக தற்போது அமுலில் உள்ள அரசியல்மைப்பின் 13-வது திருத்தத்தை ரத்துச் செய்வதை நோக்கமாகக் கொண்ட அரசியலமைப்புத் திருத்த நகலொன்றையே முன்வைத்துள்ளனர். அதனை அண்மைக்காலமாக சில முக்கியஸ்தர்களின் பின்புல ஆதரவுடன் நாட்டில் வளர்ந்துவரும் இன வெறியின் ஒரு கட்டமாகவே கருத வேண்டியுள்ளது.

ஐக்கியதேசியக் கட்சி முன்வைத்திருக்கும் அரசியலமைப்பு நகலில் அதிகாரப்பரவலாக்கலைப் பற்றி குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அதைப்பற்றிய தெளிவான திட்டமொன்று முன்வைக்கப்படவில்லை. அந்நகலில் அதிகாரப் பரவலாக்கலைப் பற்றி குறிப்பிடப்பட்டிருக்கும் பகுதி, தெளிவானதோர் திட்டத்தை முன்வைப்பதை விட, அவ்விடயத்தில் அரசாங்கத்தை அசௌகரியத்திற்குள்ளாக்குவதையே நோக்கமாகக் கொண்டுள்ளது போல்தான் தெரிகிறது.

அதிகாரப்பரவலாக்கல் என்ற தலைப்பின் கீழ் ஐக்கியதேசியக் கட்சி இரண்டு முக்கிய விடயங்களைக் குறிப்பிட்டுள்ளது. முதலாவதாக, ஒற்றை ஆட்சியின் கீழ் அதிகாரப் பரவலாக்கலை நடைமுறைப்படுத்த வேண்டும் எனக் கூறுகிறது.

இரண்டாவதாக, 2009 ஆம் ஆண்டு மே மாதம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் ஐ.நா.செயலாளர் நாயகமும் கொழும்பில் வைத்துக் கையெழுத்திட்டு வெளியிட்ட கூட்டறிக்கையின் பிரகாரமும், ஐ.நா. மனித உரிமைப் பேரவையினால் இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்ட இரண்டு பிரேரணைகளின் பிரகாரமும், கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் சிபார்சுகளின் பிரகாரமும், போர் முடிந்து ஓரிரு நாட்களில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையின் பிரகாரமும் அதிகாரப் பரவலாக்கலை மேற்கொள்ள வேண்டும் என்று ஐ.தே. கூறுகிறது.

இவ்வனைத்து சந்தர்ப்பங்களிலும் தற்போதைய அரசாங்கம் அதிகாரப் பரவலாக்கலை ஏற்றுக் கொண்டுள்ளது. ஆனால், அவற்றில் திஸ்ஸ வித்தாரண அறிக்கை தவிர்ந்த, ஏனைய சந்தர்ப்பங்ளில் குறிப்பிட்ட அதிகாரப் பரவலாக்கல் கட்டமைப்பொன்று சுட்டிக்காட்டப்படவில்லை. வெறுமனே அதிகாரப்பரவலாக்கல் முறையைப் பலப்படுத்த வேண்டும் என்று மட்டுமே அவற்றில் குறிப்பிடப்பட்டு இருந்தது.


எனவே, இவற்றை வலியுறுத்துவதன் மூலம் நீங்கள் கூறியபடி அதிகாரப் பரவலாக்கலை அமுலாக்குங்கள் என்று அரசாங்கத்தை அசௌகரியத்திற்குள்ளாக்க முடியுமேயல்லாமல் அதன் மூலம் ஐ.தே.கட்சி அதிகாரப் பரவலாக்கல் விடயத்தில் ஏதாவது புதிய திட்டத்தை முன்வைத்ததாக ஏற்றுக்கொள்ள முடியாது.

அதைவிட ஐ.தே.கட்சியின் அரசியலமைப்பு நகலில் உள்ள பிரச்சினை என்னவென்றால், ஒற்றை ஆட்சியின் கீழ் அதிகாரப் பரவலாக்கலை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கூறுவதேயாகும். ஒற்றை ஆட்சி என்பது சட்டமியற்றும் ஒரு நிறுவனத்தை (நாடாளுமன்றத்தை) வைத்திருக்கும் ஆட்சிமுறை என்றும் அதிகாரப் பரவலாக்கல் என்பது ஒன்றுக்கு மேற்பட்ட சட்டமியற்றும் நிறுவனங்களை (நாடாளுமன்றத்தையும் பிராந்திய சபைகளையும் ) வைத்திருக்கும் ஆட்சிமுறை என்றும் சர்வதேச நீதிமன்றத்தின் முன்னாள் உப தலைவர் பேராசிரியர் கிறிஸ்டோபர் வீரமந்திரி கூறுகிறார். இதன் அடிப்படையிலேயே பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் மற்றும் கலாநிதி நீலன் திருச்செல்வம் ஆகியோரால் வரையப்பட்டு 1955 ஆம் ஆண்டு ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கவின் அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்ட தீர்வுத் திட்டத்தில் இலங்கையானது, பிராந்தியங்களின் ஒன்றியமாக விவரிக்கப் பட்டது.

எனவே, ஒற்றையாட்சியின் கீழ் அதிகாரப் பரவலாக்கலை மேற்கொள்வோம் என்று கூறுவது சட்டமியற்றும் ஒரு நிறுவனம் வைத்திருக்கும் ஆட்சி அமைப்பின் கீழ் சட்டமியற்றும் பல நிறுவனங்களை வைத்திருப்போம் என்று கூறுவதற்குச் சமமாகும்.

உண்மையில் இலங்கையில் ஏற்கனவே அதிகாரப் பரவலாக்கல் அமுலில் உள்ளது. மாகாண சபைகள் சில விடயங்கள் தொடர்பில் சட்டங்களை இயற்றுகின்றன. ஆனால், இலங்கை இன்னமும் ஒற்றையாட்சியுள்ள நாடாகவே தற்போதைய அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஏனெனில் 1987 ஆம் ஆண்டு 13வது அரசியலமைப்பத் திருத்தத்தின் கீழ் அதிகாரப் பரவலாக்கலை அமுலாக்கியபோது ஒற்றையாட்சி என்ற சொல்லை அகற்றிவிட்டால் சிங்கள மக்கள் மேலும் ஆத்திரமடைவர் என அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தன அச்சப்பட்டார். எனவே, ஒற்றையாட்சி என்ற பதத்துடனேயே அவர் மாகாண சபைகளுக்கு ஓரளவுக்கேனும் அதிகாரங்களை பரவலாக்கினார். ஐ.தே கட்சிக்கு இன்னமும் அந்த அச்சம் இருக்கிறது. எல்லாவற்றையும் விட சுதந்திரத்தை அடுத்து, கடந்த 65 ஆண்டுகளில் இலங்கை மக்கள் பெற்ற அனுபவத்தின்படி அவர்களிடம் உள்ள சந்தேகம் என்னவென்றால், ஒரு அரசியற்கட்சி உலகிலேயே மிகச்சிறந்த அரசியலமைப்புச் சட்டத்தை முன்வைத்தாலும் பதவிக்கு வந்ததன் பின்னர் அக்கட்சி அதனை அமுலாக்கும் என்பதற்கு என்ன உத்தரவாதம் இருக்கிறது என்பதேயாகும்.



எம்.எஸ் எம், ஐயூப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிகார பகிர்விற்கு எதிராக கட்சிகள் அரசை விட்டு விலக வேண்டும்

### ஐ.தே.கட்சி கோரிக்கை

அதிகாரப் பகிர்விற்கு எதிரான கூட்டணி கட்சிகள் அரசாங்கத்தை விட்டு விலக வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

அதிகாரப் பகிர்வைத் தடுக்கும் ஜாதிக ஹெல உறுமய கட்சியின் திட்டத்திற்கு எதிர்ப்பை வெளியிடுவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஜோசப் மைக்கல் பெரேரா தெரிவித்துள்ளார்.

சிறுபான்மை மக்களின் உரிமைகளை உறுதிப்படுத்துவதாகவும் அதிகாரப் பகிர்வை மேற்கொள்வதாகவும் அரசாங்கம் ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவையில் வாக்குறுதி அளித்திருந்தது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அரசியல் சாசனத்தில் மாற்றங்களை ஏற்படுத்த மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் அவசியம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். ஜாதிக ஹெல உறுமயவின் உத்தேச சட்ட மூலம் குறித்த அரசாங்கத்தின் நிலைப்பாடு வெளிப்படுத்தப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். (2)

## ரஷ்ய உலங்குவானூர்திகள் கொழும்பை வந்தடைந்தன

ரஷ்யாவில் இருந்து ஆறு எம்.ஐ. 171ரக உலங்கு வானூர்திகள் கடந்த வாரம் கொழும்பை வந்தடைந்துள்ளன.

இரண்டு இராட்சத அன்ரனோவ்-124 விமானங்களில் இந்த உலங்கு வானூர்திகள் கட்டுநாயக்க சர்வதேசவிமானநிலையத்துக்குகொண்டு வரப்பட்டுள்ளன.

2010 ஆம் ஆண்டில் இலங்கைக்கு ரஷ்யா வழங்கிய 350 மில்லியன் டொலர் கடனுதவியில் இருந்து 14 ஹெலிகொப்டர்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

இவற்றில் ஆறு உலங்குவானூர்திகளே தற்போது கொழும்புக்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

இரண்டு ஏ.என்-124 இராட்சத விமானங்களும் தலா 3 உலங்கு வானூர்திகளை ஏற்றி வந்தன.

இவற்றில் இரண்டு உலங்கு வானூர்திகள் எம்.ஐ-171 ஈ விஜபி ரகத்தைச் சேர்ந்தவையாகும்.



செய்மதி தொலைத்தொடர்பு சாதனங்கள் பொருத்தப்பட்ட எட்டு பயணிகள் மற்றும் விமானிகளை ஏற்றிச் செல்லும் திறன் கொண்ட இவை, இலங்கை ஜனாதிபதியின் பயணத்துக்கென ஒதுக்கப்பட்டுள்ளன.

ஏனைய நான்கு உலங்குவானூர்திகளும் எம்.ஐ 171-எஸ்.எச் ரகத்தைச் சேர்ந்தவை. இவை இலங்கை விமானப்படைக்கு வழங்கப்படவுள்ளன.

மேலும் எட்டு எம்.ஐ.171 துருப்புக்காவி உலங்குவானூர்திகள் விரைவில் கொழும்புக்கு வரப்படவுள்ளன.

இந்த உலங்கு வானூர்திகளை ஒருங்கிணைப்பதற்காக ரஷ்யாவில் இருந்து பொறியியலாளர்களும் தொழில்நுட்பவியலாளர்களும் கொழும்பு வந்துள்ளனர்.

இவர்கள் ஹெலிகொப்டர்களைப் பொருத்தி சோதனைகளை மேற்கொண்ட பின்னர் அவற்றை இலங்கை விமானப் படையினரிடம் முறைப்படி ஒப்படைக்கவுள்ளனர். (2)

## குண்டை வெடிக்க செய்து சிப்பாய் தற்கொலை

வான்படைச் சிப்பாய் ஒருவர் குண்டை வெடிக்கச் செய்து தற்கொலை செய்து கொண்டுள்ளார். அனுராதபுர வான் படை முகாமில் நேற்று அதிகாலை இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

முகாமில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த குண்டு ஒன்றை வெடிக்கச் செய்தே அவர் உயிரிழந்துள்ளார்.

21 ஆம் படையணியைச் சேர்ந்த எஸ்.டி எஸ் சிகுராதிபதி (வயது 31) என்ற படைச் சிப்பாயே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டவராவார். எக் காரணத்திற்காக இவர் தற்கொலை செய்து கொண்டார் என்பது பற்றிய விபரங்கள் வெளியிடப்படவில்லை.

சம்பவம் தொடர்பான விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (2)

## கடும்போக்குவாதிகள் எவரையும் அரசாங்கம் ஆதரிப்பதில்லை

இலங்கையில் சிறுபான்மை மக்களுக்கு எதிராக கடும்போக்குவாதம் கடைப்பிடிக்கப்படமாட்டாது என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாகொல்லகம பகுதியில் இடம் பெற்ற பௌத்த நிகழ்வொன்றில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

பொதுபலசேனா அமைப்பை அரசாங்கம் ஆதரிப்பதாக எதிர்க் கட்சிகள் குற்றம் சுமத்துகின்றன. ஆனால், கடும்போக்குவாதிகள் எவரையும் அரசாங்கம் ஆதரிப்பதில்லை.

பௌத்த பிக்குகளும் சிங்களவர்களும் கடும் போக்குவாதிகள் அல்லர் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, 1987 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 2 ஆம் திகதி விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களால் 31 பௌத்த பிக்குகள் கொலை செய்யப்பட்டிருந்தமையையும் அவர் சுட்டிக் காட்டினார்.

இவ்வாறான அசம்பாவிதங்கள் எதிர்வரும் காலங்களில் நாட்டில் நடைபெறாது என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். (2)

## வட மாகாண சபையை நிறுவுவதன் மூலம் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாது

### சஜித் எம்.பி. தெரிவிப்பு

13 ஆவது திருத்தச் சட்டம் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வாக அமையாது என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

வடமாகாண சபைத் தேர்தலில் யார் வெற்றியீட்டினாலும் பிரதேசங்களின், மக்களின் வாழ்க்கையில் மாற்றம் ஏற்படாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

> “ நாட்டில் ஏனைய மாகாண மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகள் வடக்கு மக்களுக்கும் வழங்கப்பட வேண்டும்.

நாட்டில் ஏனைய மாகாண மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகள் வடக்கு மக்களுக்கும் வழங்கப்பட வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

எனவே, வடக்கில் தேர்தலை நடத்துவதை எதிர்க்கவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



எனினும் வடமாகாண சபையை நிறுவுவதன் மூலம் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாது என அவர் தெரிவித்துள்ளார். மாகாண சபை முறைமையானது மக்களின் வரிப் பணத்தை விரயமாக்கும் வகையில் அமைந்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

மக்களுக்கு நன்மை ஏற்படுத்தக் கூடிய ஓர் முறைமையொன்று உருவாக்கப்பட வேண்டியது அவசியமானது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2)

## ஈரானியக் கப்பல்களில் இருந்து இரகசியமாக எண்ணெய் கொள்வனவு?

### ரவி கருணாநாயக்க எம்.பி. எச்சரிக்கை

அமெரிக்காவின் பொருளாதாரத் தடைகளை மீறி ஈரானிடமிருந்து அரசாங்கம் இரகசியமாக எண்ணெய் கொள்வனவு செய்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையை கடந்து செல்லும் ஈரானிய கப்பல்களிலிருந்து இவ்வாறு எண்ணெய் கொள்வனவு செய்யப்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

இதனைப் பாரிய குற்றச் செயலாக கருதப்பட வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

இலங்கையைக் கடந்து செல்லும் ஈரானிய கப்பல்களிலிருந்து எண்ணெய் கொள்வனவு செய்தமையை நிரூபிக்க செய்மதி காட்சி ஆதாரங்கள் இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

கட்சி என்ற ரீதியில் இந்த ஆதாரங்களை வெளியிடப் போவதில்லை எனவும் இந்த நடவடிக்கையினால் பாரிய பின் விளைவுகள் ஏற்படும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

சர்வதேச சந்தையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட தரப்புக்களிடமிருந்து அரசாங்கம் எரிபொருள் கொள்வனவு செய்வதில்லை எனவும் கறுப்புப் பட்டியலிடப்பட்ட நிறுவனங்களிடமிருந்தே இலங்கை அரசாங்கம் எரிபொருள் கொள்வனவு செய்வதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.



இதேவேளை, ஈரானிடமிருந்து எரிபொருள் கொள்வனவு செய்வதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை என பெற்றோலிய வள அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா தெரிவித்துள்ளார்.

செய்மதி ஆதாரம் குறித்த குற்றச்சாட்டு ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (2)

## மாணவர்கள் மீது தாக்குதல்; ஜே.வி.பி. கொதிப்பு

உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க, சப்ரகமுவ பல்கலைக்கழகத்தை சித்திரவதைக்கூடமாக மாற்றியுள்ளதாக ஜே.வி.பியின் மத்திய செயற்குழு உறுப்பினர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

பல்கலைக்கழகங்களைத் தனியார்மயப்படுத்த வேண்டும் என்ற நோக்கில் அமைச்சர் செயற்பட்டு வருகின்றார்.

பல்கலைக்கழக மாணவர்களின் சாதாரண போராட்டத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. கல்விக்காக ஒதுக்கப்படும் பணம் குறைக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மாணவர்களை அடக்குமுறைக்கு உட்படுத்தும் முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது என அவர் குற்றம்சுமத்தியுள்ளார். (அ-2)

## சப்ரகமுவ மாணவர்கள் 45 பேர் இடைநிறுத்தம்

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் நிர்வாக குழுவினரால் 45 மாணவர்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.


கடந்த வார இறுதியில் இடம் பெற்ற ஆர்ப்பாட்டத்தை அடுத்தே குறித்த மாணவர்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவர்கள் ஆரம்பித்திருந்த உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்ற இடத்தின் மீது பொலிஸார் கண்ணீர் புகைக்குண்டு தாக்குதல் நடத்தியதை அடுத்து மாணவர்கள் பொலிஸார் மீது கற்களை வீசி தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதனையடுத்து மாணவர்கள் சிலர் கைது செய்யப்பட்டதோடு பொலிஸாரும் சில மாணவர்களும் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு பல்கலைக்கழகத்தின் நிர்வாக குழுவினரால் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலில் 45 மாணவர்களை இடைநிறுத்தம் செய்வதாக தீர்மானிக்கப்பட்டது. (அ-2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





முல்லைத்தீவு மாவட்ட சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கான புதிய நியமனம் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் முல் லைத்தீவு கரைதுரைப்பற்று பிரதேச செய லக மண்டபத்தில் இடம்பெற்றுள்ளது. இந் நிகழ்வில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார், ரிஸாத் பதியுதீன், சமுர்த்தி அதிகார சபை ஆணை யாளர் நாயகம், சமுர்த்தி உத்தியோகத்தர் கள் ஆகியோர் கலந்து கொண்டனர். இதில் புதிதாக இணைத்துக் கொள்ளப் பட்ட அனைத்து உத்தியோகத்தர்களுக் கும் தொடர்ந்து ஆறு நாட்களை கொண்ட பயிற்சி வகுப்புக்கள் இடம்பெற்று வரு கின்றமை குறிப்பிடத்தக்கது. (படங்கள்: றெப்பானா செய்தியாளர்)

## மாகாணமட்ட தமிழ்த்தின போட்டி முடிபுகள்

(மல்லாவி)

அகில இலங்கைத் தமிழ்த்தினப் போட்டியின் வடமாகாணக் கல்வித் திணைக்களகப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற மாகாணமட்டபோட்டியில் வெற்றியீட்டிய முல்லை. கல்வி வலய பாடசாலை மாணவர்களின் விபரங்களை முல்லை. வலயக்கல்விப் பணிப்பாளர் மாணிக்கவாசகர் ராஜகுமார் வெளியிட்டுள்ளார். இப் போட்டியில் முதலிடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு,

**பேச்சு பிரிவு–IV**

நா.எழில் (மு/ புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி) இர்ண்டாம் இடம்

**ஆக்கம்–எழுத்து பிரிவு–I**

ர.பவித்திரன் (மு/ஸ்ரீசுப்பிரமணிய வித்தி இரண்டாம் இடம்.

**கட்டுரை வரைதல்–III**

தி.ரஞ்சித் (மு/புதுக்குடியிருப்பு ம.க) மூன்றாம் இடம்

**கட்டுரை வரைதல், இலக்கியம் நயத்தல் பிரிவு–IV**

ம.டனோஜா (மு/ புதுக்குடியிருப்பு ம.க) மூன்றாம் இடம்

**இலக்கணப்போட்டிபிரிவு–V**

யோ.யோகதர்சினி (மு/புதுக்குடியிருப்புமக) இரண்டாம்இடம்

**குறுநாடகஆக்கம்பிரிவு–V**

ஜே.ஜமில்ஸ்ரா (மு/இரணைப்பாலை ம.வி) மூன்றாம் இடம்

**கவிதை ஆக்கம்பிரிவு–IV**

சூ.ஜெயக்கிருஸ்ணா (மு/விசுவமடும.வி) மூன்றாம் இடம்

**கவிதை ஆக்கம் பிரிவு–V**

ம. கீர்த்தனா (மு/ வித்தியானந்தக் கல்லூரி) மூன்றாம் இடம்

**வாசிப்பு பிரிவு–I**

இ.கேதாரணி (மு/உடையார்கட்டுஅ.த.க.பா) மூன்றாம் இடம்

**ஆக்கத்திறன் வெளிப்பாடு பிரிவு– I**

ம.கஜந் தன் (மு/ஸ்ரீசுப்பிரமணிய வித்தி) மூன்றாம் இடம்

**தனி இசை பிரிவு–III**

த.கிசோபனா (மு/கலைமகள் வித்தி) மூன்றாம் இடம்

**தனி இசை பிரிவு–V**

பா. காந்தரூபன் (மு/செம்மலை ம.வி) இரண்டாம் இடம்

**நடனம்–தனி பிரிவு–II**

ம.தர்சிகா (மு/ வித்தியானந்தாக் கல்லூரி) மூன்றாம் இடம்

**பாவோதல் பிரிவு–II**

ஆ. கஜனா (மு/வற்றாளை ம.வி) மூன்றாம் இடம்

**நடனம்–தனி பிரிவு–III**

பு.நிதர்சிகா (மு/வித்தியானந்த கல்லூரி) மூன்றாம் இடம்

**இசை குழு பிரிவு–I**

(மு/கலைமகள் வித்தி) மூன்றாம் இடம்

**நாடகம் திறந்த போட்டி**

மு/புதுக்குடியிருப்பு ம.க இரண்டாம் இடம்

**முஸ்லிம் நிகழ்ச்சி திறந்த போட்டி**

மு/ தண்ணீரூற்று முஸ்லிம் வித்தி மூன்றாம் இடம்


**வில்லுப்பாட்டு திறந்த போட்டி**

மு/ கலை மகள் வித்தி இரண்டாம் இடம்

**நாட்டார் பாடல் திறந்த போட்டி**

மு/வற்றாப்பளை ம.வி. முதலாம் இடம்

**சிந்து நடைக்கூத்து**




(காத்தவராஜன்)

மு/புதுக்குடியிருப்புமத்திய கல்லூரி மூன்றாம் இடம்

**வடமோடிக்கூத்து (இராவணேஸ்வரன்)**

மு/ புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மூன்றாம் இடம்

**கோவலன் கூத்து (முல்லைக் கோடி)**

(மு/ வித்தியானந்தா கல்லூரி முதலாம்இடம்(அ–3–15)

### துணுக்காய் வலயத்தில்

## ஒன்பது பாடசாலைகளுக்கு ஆசிரியர்கள் நியமனம்

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்தின் கீழ் உள்ள 10 ஆரம்பக் கல்வி பாடசாலைகளில் அதிபர் மட்டும் கடமையாற்றுவதாக அப்பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களின் பெற்றோரும் சமூக ஆர்வலர்களும் ஊடகங்கள் வாயிலாக சுட்டிக்காட்டியதை அடுத்து அப்பாடசாலைகளுக்கு துணுக்காய் கல்விப் பணிப்பாளர்திருமதி எல்.மாலினிவெணிற்றன் உடனடியாக ஆசி ரியர்களைநியமித்துஉதவியுள்ளார்.

இது தொடர்பில் தெரிய வருவது, துணுக்காய் கல்வி வலயத்தின் கீழ் உள்ள மு/அம்பலபெருமாள் அ.த.க. பாடசாலை, மு/ ஆலங்குளம் அ.த.க.ப்பா, மு/புத்துவெட்டுவான் அ.த.க.பாடசாலை, மு/ஒதியமலைஅ.த.க.பாடசாலை, மு/அலைபோட்டகல்லு அ.த.க.பா., மு/புலுமச்சி நாதகுளம் அ.த. க.பாடசாலை, மு/மூன்றுமுறிப்பு அ.த.க.பாடசாலை, மு/அம்பாள்புரம் அ.த.க. பாடசாலை, மு/ஆரோக்கியபுரம் அ.த.க.பாடசாலை ஆகிய 10 பாடசாலைகளிலும் அதிபர் மட்டுமேகடமையாற்றியநிலையில் தற்போது மு/ஆரோக்கியபுரம் அ.த.க.பாடசாலையை தவிர ஏனைய 9 பாடசாலைகளில் 5 பாடசாலைகளுக்கு நிரந்தர ஆசிரியர்களும் 4 பாடசாலைகளுக்கு தொண்டர் ஆசிரியர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் துணுக்காய் கல்வி வலயத்தின் கீழ் உள்ள மாந்தை கிழக்கு கல்வி கோட்டத்தின் கீழ் உள்ள பாடசாலைகளில் 100 வீதமான ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் மு/நெட்டாங்கண்டல் அ.த.க.பாடசாலைக்கு மட்டும் பொருளியல், புவியியல்ஆகிய பாடங்களுக்கு ஆசிரியர் வெற்றிடம் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவைளை, துணுக்காய் கல்விக் கோட்டத்தில் ஒருசில பாடசாலைகளில் கணித பாடம்தவிர்ந்தஏனைய பாடங்களுக்கு 100 வீதமான ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ–3–15)

## அதிபர், ஆசிரியர்களுக்கான நிலுவைப் பணம் வழங்கப்பட்டது

(மல்லாவி)

முல்லைத்தீவு கல்வி வலயத்தின் கீழ் உள்ள பாடசாலைகளில் கடமையாற்றும் அதிபர், ஆசிரியர்கள் 298 பேருக்கு விசேட சம்பளப்பட்டியல் மூலம் கொடுக்கப்பட வேண்டிய சம்பள நிலுவைப் பணமான 23 மில்லியன் ரூபா கடந்த மேமாதம் 30 ஆம் திகதி வழங்கப்பட்டுள்ளதாக முல்லை.வலயக் கல்விப் பணிப்பாளர் மாணிக்கவாசகர் ராஜகுமார் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், வன்னியில் இடம்பெற்ற போர் நடவடிக்கையின் போது மிகவும் பாதிக்கப்பட்ட கல்வி வலயமாக முல்லை. கல்வி வலயம் உள்ளது.

இங்கு கடமையாற்றும் பல அதிபர், ஆசிரியர்களுக்கு அவர்களது பதவி உயர்வின்போதும் மற்றும் வருடாந்த சம்பள அதிகரிப்பின் போதும் வழங்கப்பட வேண்டிய நிலுவைப்பணம் வழங்கப்படாதிருந்தது.

அண்மையில் வடக்கு மாகாண கல்வித்திணைக்களத்தின் ஊடாக சம்பள நிலுவை வழங்குவதற்காக கிடைத்த நிதியில் இருந்து 298 அதிபர், ஆசிரியர்களுக்கு 23 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

ஆகக் கூடிய சம்பள நிலுவையாக 7 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவையும் ஆகக் குறைந்த தொகையாக ஒரு இலட்சத்து 40 ஆயிரம் ரூபாவையும் அதிபர், ஆசிரியர்கள் பெற்றுக் கொண்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (அ–3–15)

## சுயவிபரக்கோவைகளை பூரணப்படுத்தும் விசேட திட்டம்

(மல்லாவி)

முல்லை. கல்வி வலயத்தின் கீழுள்ள பாடசாலைகளில் கடமையாற்றும் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் கல்விசாரா பணியாளர்கள் ஆகியோரின் சுயவிபரக் கோவைகள் விசேட வேலைத்திட்டத்தின் மூலம் பூரணப்படுத்தும் நடவடிக்கை நடைபெற்று வருவதாக முல்லை. மாவட்ட வலயக் கல்விப் பணிப்பாளர் மாணிக்கவாசகர் ராஜகுமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில், முல்லை. வலயத்தில் போர் நடவடிக்கைகள் காரணமாக அனைத்து ஆவணங்களும் அழிந்துள்ள நிலையில் இங்கு கடமையாற்றும் ஆயிரத்து 7 அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் கல்விசாரா பணியாளர்களின் சுயவிபரக் கோவைகளைப் பூரணப்படுத்தும் நடவடிக்கைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

இதன்படி800 பேரின் சுயவிபரக் கோவைகள் பூரணப்படுத்தப்பட்டுள்ளன.

அத்துடன் 645 பேருக்கு பதவி உயர்வுகளும் வழங்கப்படவுள்ளதுடன் இவர்களுக் கான சம்பள நிலுவைகளும் வழங் கப்பட்டுக்கொண்டிருப்பதாக அவர் மேலும்தெரிவித்துள்ளார்.(அ–3–15)

## பூநகரி பிரதேசத்தில் 365 பேருக்கு இந்திய வீடுகள்

(பூநகரி)

பூநகரி பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த நல்லூர் கிராம சேவகர் பிரிவில் 6 கிராமங்களைச் சேர்ந்த 365 பயனாளிகளுக்கு இந்திய வீடமைப்புத் திட்டம் வழங்கப்பட்டு வீடமைப்புப் பணிகள் ஆரம்பமாகியுள்ளன.

கடந்த முதலாம் திகதி பூநகரி பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் கே.எஸ். வசந்தகுமார் தலைமையில் பயனாளிகளுடனான கலந்துரையாடலும் வீட்டுத்திட்டத்திற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடலும் இடம்பெற்றன.

பயனாளி பெயரில் வங்கிக் கணக்கு ஆரம்பிக்கப்பட்டு வீட்டுத் திட்டத்திற்குரிய பணம் வைப்பில் இடப்படவுள்ளது.

ஒவ்வொரு வீடும் 5 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாநிதி உதவியுடன் (எஸ்.டி.சி) சுவிஸ் அபிவிருத்தி நிறுவனத்தின் அனுசரணையுடன் ஒவ்வொரு பயனாளிகளின் ஒழுங்குபடுத்தலில் இத்திட்டம் செயற்படுத்தப்படும் என்று இதனுடன் தொடர்புடைய அலுவலர் ஒருவர் தெரிவித்தார்.

ஒவ்வொருபடிமுறைவேலைகளும் செய்யப்படும் இடத்து அதற்குரிய கொடுப்பனவை பெற்றுக்கொள்ள முடியும். இச் சந்திப்பில் பிரதேச செயலக திட்டமிடல் உதவிப் பணிபாளர், சுவிஸ் அபிவிருத்தி நிறுவன அலுவலர்கள், கிராம சேவையாளர் உட்பட்ட பலர் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினர்.

சகல வீடுகளையும் அமைக்கும் பணி இவ்வாரத்தில் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ–3–84)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருத்துவ உலகம்
Health Care — உங்கள் நலம் உங்கள் கைகளில்



# பள்ளிக்குச் செல்லும் கண்ணே... உன் கண்கள் நலமா?

ஒரு மனிதன் நடைமுறை வாழ்க்கைக்குத் தேவையான 75% செய்திகளை தனது கண்கள் மூலமாகவே தெரிந்து கொள்கிறான். மேலும் பள்ளிக்குச் செல்கின்ற ஒவ்வொரு குழந்தையும் கற்றல் எனும் தொடர் நிகழ்வை 80% கண்கள் மூலமாகவே செயற்படத்துகிறது. எனவே, பாடசாலை செல்லும் குழந்தைகளின் கண் நலம் குறித்த விழிப்புணர்வு தேவைப்படுவது காலத்தின் கட்டாயம் ஆகும்.பொதுவாக குழந்தைகள் மூன்று வயதில் பாடசலைக் கற்றலை ஆரம்பித்தவுடன் அவர்கள் ஒரு பொருள் தங்களது கண்களுக்கு எவ்வாறு தெரிகிறதோ அப்படியே தான் மற்றவர்களுக்கும் தெரிகிறது என்றும் அவைதான் பொதுவான நல்ல பார்வை என்றும் நினைத்துக் கொள்வார்கள். மேலும் ஒரு குழந்தை பாடசாலையில் வெற்றிகரமான மாணவனாக திகழ்வதில் அவரது கண்பார்வை முக்கிய பங்கு வகிக்கிறது. சுமார் 25% குழந்தைகளுக்கு கண் பார்வை சார்ந்த பிரச்சினைகள் இருப்பதாக ஓர் ஆய்வில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

பாடசாலை செல்லும் குழந்தைகள் விளையாட்டிலும் அதிக ஆர்வம் காட்டுகின்றனர்.ஆக விளை



யாட்டிலும் கண் பார்வை முக்கியமான இடம் வகிக்கிறது. கண்களில் பார்வைக் குறைபாடு இருக்குமேயானால் அவர்கள் விளையாட்டு மற்றும் வேடிக்கைகளில் கலந்து கொண்டு கிடைக்கும் மகிழ்ச்சியை இழந்து விடுகிறார்கள்.

கண் மருத்துவத்துறை வல்லுநர்கள் பாடசாலைக் குழந்தைகளின் கண் நலம் குறித்து அதிகம் குறிப்பிடுவது பார்வைத் திறன் குறைபாடு (Rrefractive Errors) ஆகும்.குறிப்பாக குறும்பார்வை (Myopia) நீள்பார்வை (Hypermetropia)மற்றும் தெளிவற்ற பார்வை (Astigmatism)ஆகும்.

பாடசாலைப்பிள்ளைகளின் கண் நலம் குறித்த விழிப்புணர்வை மேம்படுத்தி உரிய சேவைகளை வழங்குவதில் பெற்றோர்களும் ஆசிரியர்களும் முக்கிய பங்கு வகிக்கிறார்கள். குழந்தைகளின் பார்வைக் குறைபாட்டினை பின்வரும் அறிகுறிகள் மூலமாக அடையாளம் காணலாம்.

- அடிக்கடி தொலைக்காட்சிப் பெட்டிக்கு அருகே அமர்ந்து பார்த்தல் மற்றும் புத்தகங்களை கண்களுக்கருகே வைத்துப் படிப்பது
- படித்துக்கொண்டிருக்கும்பொழுது படித்த இடத்தை தவறவிட்டு மீண்டும் தேடுவது
- படிக்கும் பொழுது படிக்கும் வார்த்தைகளை ஆட்காட்டி விரலினால் தொடுவது
- மாறுகண்
- சரியாக பார்ப்பதற்காக தலையை ஒரு பக்கம் சாய்த்துப்பார்ப்பது
- கண் களை அடிக்கடி அழுத்தி தடவி விட்டுக் கொள்வது
- வெளிச்சத்தைப் பார்க்கும் போது அசௌகரியமாக உணர்வது
- அதிகமாக கண்ணீர் வெளியேறுவது
- ஒரு கண்ணை மூடிக் கொண்டு ஒரு கண்ணால் பார்ப்பது, தொலைக் காட்சியைப் பார்ப்பது மற்றும் பொதுவாக பார்ப்பது
- அருகிலிருந்து செய்யக் கூடிய செயல்களை குறிப்பாக படித்தல், வீட்டுப்பாடம் எழுதுதல் போன்றவற்றை செய்யாமல் தவிர்ப்பது
- தொலைதூரப் பார்வையைப் பயன்படுத்தி விளையாடுதல் மற்றும் வேடிக்கைகளில் கலந்து கொள்ளாமல் ஒதுங்கி இருத்தல்
- அடிக்கடி தலைவலிப்பதாகவும் கண்கள் களைப்பாக இருப்பதாகவும் சொல்வது
- கணனியில் படிப்பது மற்றும் வேலை செய்வது கண்களுக்கு சிரமமாக இருப்பதாக சொல்வது
- வழக்கத்திற்கு மாறாக குறைவான மதிப்பெண்கள் பெறுவது

மேற்குறிப்பிட்ட அறிகுறிகள் ஒரு பாடசாலை செல்லும் குழந்தையிடம் இருக்குமேயானால் அந்தக்குழந்தைக்குகிட்டப்பார்வை, தூரப்பார்வை அல்லது தெளிவற்ற பார்வை போன்ற ஏதாவது ஒரு குறைபாடு இருக்கலாம். அந்தக் குழந்தையின் உடனடித்தேவைமுறையான கண்பரிசோதனையாகும்.


பரிசோதனை மூலம் கண்ணாடி அணிந்தோ, சீர் வில்லை அணிந்தோ குறைபாட்டினை சரி செய்து கொள்ளலாம்.

பொதுவாகவே சத்துள்ள ஆகாரங்கள் நம் குழந்தைகளின் உடல் நலத்திற்குத் தேவை. நம் குழந்தைகளுக்கு மாற்று உணவு கொடுக்க ஆரம்பிக்கும் போது அவர்களுக்குத் தேவையான ஆகாரம் சரிவிகித அளவில் கிடைக்கிறதா என்று கவனிக்க வேண்டும். கண் நலத்தைப் பொறுத்த மட்டில் குழந்தைகள் மட்டுமல்லாது அனைவருக்கும் தேவையான போஷாக்குகள் விற்றமின் ஏ, பி மற்றும் சி போன்றவற்றில் தேவையான அளவு உள்ளன. விற்றமின் ஏ இது விழித்திரையில் ஏற்படும் இராசயன மாற்றத்திற்கு அவசியம். விற்றமின் ஏ பற்றாக்குறையினால் மாலைக் கண் நோய் (Night blindness) ஜெராப்தால்மியா (Xerophtalmia) போன்ற நோய்கள் வரலாம்.

**விற்றமின் ஏ-நிறைந்த உணவுகள்**

- கீரை வகைகள்
- கரட்
- பால்
- வெண்ணெய்
- முட்டை
- மீன்

சிதறல் பார்வை




**விற்றமின் பி**

இது பார்வை நரம்பின் (optic nerve) முறையான இயக்கத்திற்கு தேவை.

**விற்றமின் பி –நிறைந்த உணவுகள்**

அரிசி, கோதுமை, பீன்ஸ், பால், வெண்ணெய் , முட்டை , முளைகட்டிய தானியங்கள்.

**விற்றமின் –சி**

கண்ணில் உள்ள இரத்தக்குழாய்களின் ஆரோக்கியத்துக்கு விற்றமின் சி தேவை. விற்றமின் சி பற்றாக்குறையினால் கண்களில் இரத்தக்கசிவு, கண்களின் காயம் குணமடைய தாமதமாதல் போன்றவை வரலாம்.

**விற்றமின் சி நிறைந்த உணவுகள்**

தக்காளி , தோடம்பழம் ,எலுமிச்சை, கொய்யா, நெல்லிக்காய், முட்டைக்கோஸ், உருளைக்கிழங்கு என்பனவாகும்.

ஆக நமது குழந்தைகளின் உணவுப்பழக்கமும் அவர்களது கண் நலத்தை நிர்ணயிக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

**கற்றலில் குறைபாடு (learning difficulties)**

கற்றலில் குறைபாடு என்பது பாடசாலை செல்லும் பிள்ளைகளின் மற்றுமொரு முக்கிய பிரச்சினையாகும்.பொதுவாக குழந்தைகளுக்கு ஒரு வயது முதல் ஏழு வயது வரை இந்தக்குறைபாடு ஓரளவு இருக்கும். என்றாலும் சிலருக்கு மேலும் சில வருடங்கள் நீடிக்கலாம் .இது தனிநபர் நடத்தை சார்ந்த விடயமாக தெரிந்தாலும் இந்தக் குறைபாட்டின் பின்னணியில் பார்வைக்கு முக்கியத்துவம் இருக்கிறது . சில நேரங்களில் பார்வைத் திறன் குறைபாடு பல குழந்தைகளுக்கு கற்றலில்பிரச்சினையைஏற்படுத்துகிறது.

இந்நிலையில் குழந்தைகளுக்கு கண் பரிசோதனைக்கு பரிந்துரைத்து உரியசிகிச்சையை மேற்கொள்ளலாம்.

உங்கள் குழந்தை அடிக்கடி எழுத்துக்களை மாற்றியோ அல்லது தலைகீழாகவோ எழுதுவது மற்றும் படிப்பது. சில நேரங்களில் மட்டும் மிகவும் மோசமான கையெழுத்தை வெளிப்படுத்துவது, வாசிப்பதில் குறைபாடு மற்றும் வாசிப்பதில் வெறுப்பை ஏற்படுத்துவது எழுதும் போதும் கணக்கிடும் போதும் தொடர்ந்து தவறு செய்வது, இட வலமாக அல்லது வலது புறம் எழுத வேண்டிய எழுத்துகள் மற்றும் எண்களை இடது புறமாக பயன்படுத்துவது, சொல்ல வேண்டிய செய்திகளை சரியாக எழுத முடியாமல் தவிப்பது. பலரோடு சேர்ந்திருக்கும் பொழுது பொருத்தமற்ற செயல்களை அடிக்கடி செய்வது, பிறர் உதவியை எதிர் பார்த்து காத்திருப்பது போன்ற பழக்க வழக்கம் இருக்குமேயானால் முதலில் ஒரு கண் மருத்துவரிடம் காண்பித்து பார்வைக் குறைபாடு இருக்குமேயானால் அதனை சரி செய்வதும் அல்லது ஒரு குழந்தை மருத்துவரிடமோ அல்லது அவர் பரிந்துரைக்கும் வல்லுநரிடமோ ஆலோசனை செய்வதும் மிகவும் அவசியமாகும்.

பார்வைத்திறனிலும் வேறுபாடு தொடர்கிறது.எனவே, கண்ணாடி மற்றும் சீர் வில்லை அணிபவர்கள் வருடத்திற்கொருமுறை கண்டிப்பாக கண்பரிசோதனை செய்து கொண்டு பார்வைத்திறனில் வேறுபாடு இருக்கும் பட்சத்தில் கண்ணியலாளர்கள் மற்றும் கண் மருத்துவர்கள் பரிந்துரைக்கும் கண்ணாடியையோ சீர்வில்லையையோ கண்டிப்பாக மாற்றிக் கொள்ள வேண்டும். ஏனெனில் பார்வைத்திறனில் மாறுபாடு இருக்கும்பட்சத்தில் பழைய கண்ணாடி அல்லது சீர் வில்லை தொடர்ந்து அணிவது தற்போதைய பார்வைத்திறனுக்கு பொருத்தமில்லாத கண்ணாடியை அணிவதாகும். இது கண்களுக்கு மேலும் இடையூறாக இருக்கும்.

கற்றலைப்பாதிக்கும் பார்வைக் குறைபாடு

படிக்கும் பொழுது குறிப்பாக கணித பாடங்களில் மேலும் பெருக்கல் மற்றும் வகுத்தல் போன்றவற்றை கையாளும் போது அவற்றைப்புரிந்து கொள்வதற்கு குழந்தைகளுக்கு தாமதமோ வெறுப்போ ஏற்படலாம். அதற்கு குழந்தைகளின் பார்வைத்திறன் குறைபாடு காரணமாக இருக்கலாம். சில நேரங்களில் இத்தகைய பிரச்சினை உள்ள குழந்தைகளுக்கு கண்ணாடி அணிந்த பின்னர் இந்த குறை நிவர்த்தியாகலாம். ஆனாலும் கற்றலில் குறைபாடு என்பதை உறுதி செய்வதற்கு சில பரிசோதனைகள் குறிப்பாக எழுதுவது, பேசுவது, படிப்பது, எளிய கணக்குகளைப் பயிற்சி செய்வது மற்றும் சிறிய பிரச்சினைகளைத்தீர்வு காணும் முறையில் சில பரிசோதனைக்களை செய்வதும் நடைமுறையில் உள்ளது.

கற்றலில் குறைபாடுள்ள குழந்தைகளுக்கு பார்வைத் திறன் சரியாக இருந்தாலும் இதுபோன்ற பரிசோதனைகள் மூலமே ஒரு தீர்மானத்துக்கு வர முடியும். ஆனாலும் பார்வை எனும் புலன் மூளையின் செயல் அடிப்படையில் நடைபெறக்கூடிய ஒன்று. கற்றல் என்பதும் மூளையின் செயல் அடிப்படையில் நடைபெறக் கூடிய ஒன்று. அந்த வகையில் பார்வைத்திறன் மட்டுமல்லாது கண்ணின் அமைப்பு, கண் இயங்கும் விதம் போன்றவையும் ஒரு தனிநபரின் கற்றல் திறமையை நிர்ணயிக்கிறது என்பதும் உண்மையாகும்.

பொதுவாக கல்வி கற்பவர்களுக்கு கற்றல் எனும் செயற்பாட்டில் கண்களுக்கு முக்கிய பங்கு இருக்கிறது. அதன் மூலமே மூளையின் திறனும் அறிவுத் திறனும் மேம்படுகிறது. இதற்கு பார்வையின் 3 முக்கியமான காரணிகள் சிறப்பாக அமைந்தால் மட்டுமே கற்றலின் மேம்பாடு என்பது சாத்தியமாகிறது .அவை

1.கண்கள் அமைந்திருக்கும் விதம்
2.கண்கள் செயற்படும் விதம்
3.பார்வை மற்றும் புலன் என்பனவாகும்.

# பஹ்ரேனில் தூதரகம் திறந்து வைப்பு

பஹ்ரேனின் மனாமா நகரில் இலங்கைக்கான தூதரகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.மத்திய கிழக்கு நாடுகளுடன் இலங்கை நெருங்கிய உறவுகளைப் பேணும் வகையில் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகளின் ஒரு கட்டமாகவே நேற்று முன்தினம் இந்த தூதரகம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

பிரதி வெளிவிவகார அமைச்சர் நியோமல் பெரேரா, பஹ்ரேனின் வெளிவிவகார அமைச்சர் ஜஹானிம் பின் பஹ்தி புனைன் ஆகியோர் இந்த புதிய அலுவலகத்தை சம்பிரதாயபூர்வமாக திறந்து வைத்தனர்.

இரு நாடுகளுக்கிடையிலும் இருந்து வரும் நட்புறவு மேலும் வலுவடையுமென பிரதி அமைச்சர் நியோமல் பெரேரா இந்தத் தூதரகத்தைத் திறந்து வைத்தபோது தெரிவித்தார். இலங்கையைச் சேர்ந்த பெரும் எண்ணிக்கையான பணியாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் பஹ்ரேனில் பணியாற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# ஹோமாகம நீதவானுக்கு விளக்கமறியல் நீடிப்பு

ஹோமாகம மாவட்ட நீதவான் சுனில் அபேசிங்கவை 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதம நீதவான் கிஹான் பிலபிட்டிய நேற்று உத்தர விட்டுள்ளார்.

மூன்று இலட்சம் ரூபாவை இலஞ்சமாக பெற்றுக் கொள்வதற்கு முயன்றவேளை, இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு அதிகாரிகளால் இவர் கடந்த 30 ஆம் திகதி கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# வீரகத்தி விநாயகர் மஹோற்சவம்

நீராவியடி ஸ்ரீஜெய நீராவி வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத் திருவிழா எதிர்வரும் 12 ஆம் திகதி புதன்கிழமை காலை 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து பன்னிரண்டு நாட்கள் நடைபெறும் திருவிழாவில் எதிர்வரும் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 2.30 மணிக்கு புதிய தேர் வெள்ளோட்டமும் மாலை 6 மணிக்கு சப்பறத் திருவிழாவும் நடைபெறவுள்ளது. மஹோற்சவத்தின் மறுநாள் சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தமும் மாலை 5 மணியளவில் கொடியிறக்கமும் இடம்பெறும் என ஆலய பொறுப்பாளர் வை.இரகுநாத முதலியார் அறிவித்துள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்கொலைப்படை தாக்குதலில் பாடசாலை சிறார்கள் 9 பேர் பலி!



(காபூல்)

ஆப்கானிஸ்தானில் தற்கொலைப்படை தாக்குதலில் பாடசாலைக் குழந்தைகள் 9 பேர் பரிதாபமாக பலியாகினர். 15 குழந்தைகள் காயமடைந்தனர்.


ஆப்கானிஸ்தானில் உள்ள சாம்கானி மாவட்ட சந்தை அருகே அமெரிக்க இராணுவ வீரர்கள் நேற்றைய தினம் வாகனத்தில் சென்று கொண்டிருந்தனர்.

அவர்களைக் குறிவைத்து மோட்டார் சைக்கிளில் பயணித்த தற்கொலைப்படை தீவிரவாதி தனது முதுகில் கட்டியிருந்த வெடிகுண்டை வெடிக்கச் செய்தார்.

அமெரிக்க வீரர்களைக் குறிவைத்து நடத்தப்பட்ட குறித்த தாக்குதலின்போது அருகில் உள்ள பாடசாலையிலிருந்து வெளியே வந்த சிறார்கள் 9 பேர் உயிரிழந்தனர். இதில் ஒரு பொலிஸாரும் உயிரிழந்தார்.

மேலும் 15 சிறார்கள் காயமடைந்தனர். இந்த தாக்குதலில் அமெரிக்க படையினர் எவரேனும் இறந்தார்களா என்பது குறித்து தகவல்எதுவும் தெரியவில்லை.(அ-2)

# கோழி அறுவைக் கூடத்தில் தீ; 55 தொழிலாளர்கள் பலி!



(பீஜிங்)

சீனாவில் கோழி அறுவைக் கூடத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் 55 தொழிலாளர்கள் உயிரிழந்தனர்.

இப்பரிதாப சம்பவம் நேற்று அதிகாலையில் இடம்பெற்றுள்ளது.

சீனாவில் ஜிலின் மாகாணத்தில் டெகு என்ற இடத்தில் கோழி அறுவைக் கூடம் அமைந்துள்ளது. இங்கு கோழிகளை வெட்டி இறைச்சியாக ஏற்றுமதி செய்கின்றனர். இந்த அறுவைக் கூடத்தில் 300 இற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர்.


இந்நிலையில் நேற்று அதிகாலை திடீரென தீப்பிடித்தது. அதைத் தொடர்ந்து அங்கு அபாய சங்கு ஒலிக்கப்பட்டது. இதனால் அதிர்ச்சி அடைந்த தொழிலாளர்கள் தப்பிக்க வெளியே ஓடியுள்ளார்கள். ஆனால், வெளிப்புற கதவு பூட்டப்பட்டிருந்தமையால் தீயில் சிக்கி 55 பேர் மாண்டனர்.

இதற்கிடையே கதவை உடைத்துக் கொண்டு 100 பேர் தப்பினர். மற்றவர்கள் அறுவை கூடத்துக்குள் சிக்கிக் கொண்டனர். அவர்களின் கதி என்ன என்று தெரியவில்லை. மேலும் இந்த தீ விபத்துக்கான காரணம் தெரியவில்லை. சீனாவில் இதுபோன்ற தீ விபத்துக்கள் அடிக்கடி நடந்து வருகின்றன.

கடந்த 2008 ஆம் ஆண்டு ஷென்சென் நகரில் இரவு விடுதியில் ஏற்பட்ட தீ விபத்தில் 44 பேர் பலியாகினர். 2000ஆம் ஆண்டில் லியூயாங் நகரில் உள்ள ஒரு வணிக வளாகத்தில் நடந்த தீ விபத்தில் 309 பேர் உயிரிழந்தனர். இதற்கு போதிய பாதுகாப்பு ஏற்பாடுகள் இல்லாமையே காரணமாக கருதப்படுகிறது. (அ-2)

# தெலுங்கானா பிரச்சினைக்கு இம்மாத இறுதிக்குள் தீர்வு காணப்படும்

## சுகாதார அமைச்சர் குலாம் நபி



(ஐதராபாத்)

தெலுங்கானா பிரச்னைக்கு இந்த மாத இறுதிக்குள் தீர்வு காணப்படும் என மத்திய சுகாதார அமைச்சர் குலாம் நபி ஆசாத் தெரிவித்துள்ளார்.

தெலுங்கானா தனி மாநில பிரச்சினையில் மத்திய அரசு முடிவு எடுக்க முடியாமல் திணறி வருகிறது. தெலுங்கானா விவகாரத்தில் ஆந்திர மாநிலத்தை சேர்ந்த அரசியல் கட்சிகளிடையே கருத்தொற்றுமை இல்லை.

ஆளும் கட்சியான காங்கிரஸும் முக்கிய எதிர்க் கட்சியான தெலுங்கு தேசமும் தெலுங்கானாவுக்கு தடைக் கற்களாக உள்ளன.

இதன் காரணமாக இந்த இரண்டு கட்சியை சேர்ந்த எம்.பிக்கள், எம்.எல்.ஏக்கள் ஒவ்வொருவராக தெலுங்கானா ராஷ்ட்ரிய சமிதி கட்சியில் இணைந்து வருகிறார்கள். நேற்று முன்தினம் காங்கிரஸ் கட்சியை சேர்ந்த 2 எம்.பிக்கள் தெலுங்கானாவில் அதிகாரபூர்வமாக இணைந்தனர்.

இதுகுறித்து அவர் டில்லியில் செய்தியாளர்களுக்கு பேட்டி அளிக்கையில்,

தெலுங்கானா விடயத்தில் இம்மாத இறுதிக்குள் காங்கிரஸ் முடிவு எடுக்கும். அதுவரை தெலுங்கானா பகுதியை சேர்ந்த காங்கிரஸார் பொறுமை காக்க வேண்டும்.

ஒரு சிலர் சுயநலத்துக்காக கட்சி தாவுகின்றனர். இது துரதிர்ஷ்டவசமானது. தெலுங்கானாவுக்காக அவர்கள் காங்கிரஸிலிருந்து விலகவில்லை. சுயலாபத்துக்காகவே அவர்கள் விலகியுள்ளனர். நடைபெறவுள்ள தேர்தலில் தங்களுக்கும் தங்கள் வாரிசுகளுக்கும் எம்.பி, எம்.எல்.ஏ பதவிகளை பெறவே அவர்கள் கட்சி மாறுகின்றனர். அரசியலை வியாபாரமாக்கும் இவர்கள் அரசியலுக்கு இலாயக்கற்றவர்கள். இவ்வாறு ஆசாத் கூறினார். (அ-2)

# ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடமாட்டேன்



(இஸ்லாமாபாத்)

ஜனாதிபதி தேர்தலில் மீண்டும் போட்டியிடமாட்டேன் என்று தற்போதைய பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரி திட்டவட்டமாக கூறியுள்ளார்.

பாகிஸ்தானில் கடந்த மாதம் 11ஆம் திகதி நாடாளுமன்ற தேர்தல் நடைபெற்றது. ஆளும் கட்சியாக இருந்த பாகிஸ்தான் மக்கள் கட்சி தேர்தலில் படுதோல்வி அடைந்தது.

முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப்பின் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (நவாஸ்) கட்சி அமோக வெற்றி பெற்றது.


அவர்நேற்று முன்தினம்தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியில் கூறுகையில்,

நாடாளுமன்ற தேர்தலில் எனது தலைமையிலான பாகிஸ்தான் மக்கள் கட்சி தோல்வி அடைந்துவிட்டது. எனவே, அடுத்த ஜனாதிபதி தேர்தலில் மீண்டும் போட்டியிடமாட்டேன். ஆனால், கட்சியினர் விரும்பினால், தலைவர் பதவியில் தொடர்ந்து நீடிப்பேன் என்றார்.

ஜனாதிபதி சர்தாரியின் பதவிக்காலம் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முடிவடைகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# கடாபியின் சொத்துக்கள் தென்னாபிரிக்காவில்

## ஒப்படைக்க கோருகிறது லிபியா



லிபியாவின் முன்னாள் தலைவர் முஹமர் கடாபியின் ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான சொத்துக்கள் தென்னாபிரிக்காவில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடாபியின் வைரங்கள், தங்கம், பணம் ஆகியவற்றை மீளப் பெற்றுக்கொள்ள உதவி புரியுமாறு லிபியா தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்து வருகின்றது.

இந்நிலையில் தென்னாபிரிக்காவிலுள்ள நான்கு வங்கிகள் மற்றும் பாதுகாப்பு நிறுவனங்களில் இந்தச் சொத்துக்கள் உள்ளதாக லிபிய விசாரணையாளர்கள் கூறியுள்ளனர்.

கடாபியின் வெளிநாட்டுச் சொத்துக்கள் சுமார் 80 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியானவையாக இருக்கலாம் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

2011ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் இடம்பெற்ற லிபிய புரட்சியின் போது சிறை பிடிக்கப்பட்ட முஹமர் கடாபி, பின்னர் கொலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# அமெரிக்காவை தாக்குவது கடினமான காரியமல்ல

## அல்கொய்தா சவால்



அமெரிக்காவை தாக்குவது கடினமான காரியமல்ல என அல்கொய்தா தீவிரவாத இயக்கத் தலைவர் காசிம் அல்-ரிமி அமெரிக்காவிற்கு சவால் விடுத்துள்ளார்.

ஏமன் நாட்டில் இயங்கி வரும் அரேபிய தீபகற்பத்தின் அல்கொய்தா தீவிரவாத இயக்கத் தலைவர் அமெரிக்காவுக்கு சவால் விடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டது. ஒலிநாடாவில் இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

அதில் அவர் கூறியிருக்கும் விடயங்கள் வருமாறு,

சமீபத்தில் பொஸ்டன் நகரில் நிகழ்ந்த குண்டுவெடிப்பு மற்றும் அமெரிக்காவின் வெள்ளை மாளிகைக்கு அனுப்பப்பட்ட விஷம் தடவிய கடிதங்கள் ஆகியவற்றை வைத்தே அமெரிக்காவில் உள்ள பாதுகாப்பு குளறுபடிகளை தெரிந்து கொள்ளலாம்.

அமெரிக்காவின் பாதுகாப்பு அவர்களின் கையில் இல்லை என்பதை புரிந்து கொள்ளலாம். அமெரிக்கா மீது தொடுக்கப்பட்ட இதுபோன்ற தாக்குதல்களை நிறுத்திவிட முடியாது.

பொஸ்டனில் வைக்கப்பட்டது போன்ற வெடிகுண்டுகளை தயாரிக்க அனைவராலும் முடியும்.

இவ்வகைத் தாக்குதலை தொடர்ந்து நடத்துவதன் மூலம் அமெரிக்கர்களின் தூக்கத்தை கெடுப்போம் என அவர் சூளுரைத்துள்ளார். (அ-2)

# ரஷ்ய தென்புறக் கடற்பரப்பில் நீர்மூழ்கிக் கப்பல்கள் ரோந்து

தென்புறக் கடற்பகுதிகளில் ரோந்து செல்வதற்கு அணுசக்தி நீர்மூழ்கி கப்பல்களை ஈடுபடுத்த ரஷ்யா திட்டமிட்டுள்ளது.

சோவியத் ரஷ்யா சிதைந்து 20 வருடங்கள் கழிந்த நிலையில் தற்போது மீண்டும் தன்னுடைய அதிகார பலத்திற்கு புத்துயிர் கொடுக்கும் விதமாகவே இத் திட்டத்தை ரஷ்யா அமுல்படுத்தியுள்ளது.

இத்தகவலை ரஷ்ய நாட்டின் செய்தி நிறுவனம் கடந்த சனிக்கிழமை அன்று வெளியிட்டுள்ளது.

மத்திய தரைக் கடல் பகுதியில் நிரந்தரமாக ஒரு கப்பற் படையை நிறுவவேண்டும் என்று ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் கடந்த மார்ச் மாதம் தெரிவித்திருந்தார்.

அதனைத் தொடர்ந்து 16 அணுசக்தி ஏவுகணைகளைத் தாங்கிச் செல்லும் போரெய் நீர்மூழ்கிக் கப்பல்களை ரோந்துப் பணிக்கு அனுப்ப ரஷ்யா முடிவு செய்துள்ளது.

நீர்மூழ்கிக் கப்பல்கள் மீண்டும் ரோந்துப்பணியில் ஈடுபடுவது வடதுருவப் பகுதிகளில் மட்டுமல்லாது தென்பகுதிகளிலும் குற்றங்கள் குறைய உதவும் என்று இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்ததாக பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன.

இந்தக் கப்பல்கள் படிப்படியாக கடற் பகுதிகளில் நிலைநிறுத்தப்படும்.



மொத்தம் 8 போரெய் கப்பல்களும் எதிர்வரும் 2020ஆம் ஆண்டு பணியில் ஈடுபடுத்தப்படும் யூரி டோல்கோருக்கி என்ற கப்பல் இந்த வருடம்தான் கப்பற்படையில் இடம் பெற்றுள்ளது.

தற்போது நாட்டின் ஆயுத பலத்தை மேம்படுத்தும் எண்ணத்தில் புடின் இருக்கின்றார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய விஷயங்களைப் போலவே சிறிய விஷயங்களையும் கவனிக்கக் கூடிய மனமே உண்மையும் உரமும் பொருந்தி மனமாகும். – டாக்டர் ஜான்ஸன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# புலிகளின் சொத்துக்கள் யாருக்குச் சொந்தம்?

தருமர் கூடியுள்ள சபையில் ஒரு வழக்கு வருகிறது.

காணி ஒன்றைக் கொள்வனவு செய்த ஒருவர் அதனைப் பண்படுத்தும் போது நிலத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த தங்கப்புதையல் ஒன்றை கண்டெடுக்கின்றார்.

கண்டெடுத்த தங்கப்புதையல் நிலத்தை விற்றவருக்கே சொந்தம் என்று கருதி அதனை அவரிடம் எடுத்துச் செல்கின்றார்.

ஆனால், அதனைப் பெற்றுக்கொள்வதற்கு அந்த ஆள் மறுப்புத் தெரிவித்துவிட்டார்.

நான் எனது காணியை விற்பனை செய்த போதே, அதில் இருக்கக் கூடிய அனைத்தையும் விற்றுவிட்டேன். ஆகையால் புதையல் காணியை விற்ற எனக்கல்ல. அஃது காணியை கொள்வனவு செய்த தங்களுக்கே சொந்தம் என்று கூறிவிட்டார்.

இவ் விவகாரமே தருமர் வீற்றிருக்கும் சபைக்கு வருகிறது. வழக்கை விசாரித்த தருமருக்கு மட்டற்ற மகிழ்ச்சி. இதுவன்றோ நீதி. இதுவன்றோ தருமம் என்று வியந்துரைத்த தருமர் இருவரையும் பார்த்து நாளைய தினம் வாருங்கள் தீர்ப்புச் சொல்கிறேன் என்று அனுப்பி வைத்தார்.

மறுநாள் தருமர் சபை கூடுகிறது. புதையல் விவகாரத்துடன் தொடர்புபட்ட இருவரும் வந்திருந்தார்கள்.

ஆனால், அவர்களின் வாதம் இப்போது வேறுபட்டிருந்தது. புதையலைக் கண்டெடுத்தவர் அது தனக்கே உரியதென்றார்.

காணியை விற்றவரோ புதையல் தன்னுடையது என்று வாதிட்டார். இருவரின் வாதத்தையும் கேட்ட தருமர் திகைத்துப்போனார்.

இஃது என்ன ஆச்சரியம் ! நேற்றையதினம் தங்கப் புதையலை பெற்றுக்கொள்ள மறுத்தவர்கள் இன்று அதனைக் கொடுக்க மறுக்கின்றார்கள்.

ஒருநாள் இடைவெளியில் என்ன நடந்தாயிற்று? என்று தருமர் தலையை பிய்த்துக் கொள்ள,

சபையில் இருந்த, பாண்டவர்களில் சோதிடம் தெரிந்த நகுலன், அண்ணா இன்று கலியுகம் பிறந்துவிட்டது என்றான்?

கலியுகத்தின் பிறப்பு எத்தன்மையது என்பதை புரிந்து கொண்ட துபாவரயுக புருஷர்கள் பூலோகவாழ்வை முடிவுறுத்தி பயணிக்கின்றனர்.

காலம் கலியுகம். அதர்மத்தின் தாண்டவம் உச்சமடையும் காலம். ஆயினும் கீதோ உபதேசத்தின் பிரகாரம் தருமத்தைக் காக்கவும் அதர்மத்தை அழிக்கவும் அவ்வப்போது அவதாரம் எடுக்கும் பரம்பொருள் கலியுகத்தில் காலம் கடத்துவது எதற்கானது என்று தெரியவில்லை.

எதுவாயினும் விடுதலைப்புலிகளின் 120 கோடி ரூபாய் பெறுமதியான சொத்துக்கள் என்பது வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்கு சேர வேண்டும் என்பது அறத்தின் பாற்பட்ட தீர்ப்பு.

புலிகளின் சொத்துக்களை அரசுடைமையாக்குவது என்பதற்கப்பால், குறிப்பிட்ட சொத்து வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்குரியது என்பதை அங்கீகரித்துக்கொண்டு அதனை குறிப்பிட்ட மாகாணங்களின் அபிவிருத்திக்கு, வீடமைப்பிற்கு பயன்படுத்துவதே அரச நீதியாகும்.

கலியுகத்தில் இது நடக்குமா? என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

# மட்டக்களப்பில் ஆட்சேர்ப்புத்திட்டம் ஆட்சேபித்து ஆர்ப்பாட்டம்

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணசபையின் உள்ளூராட்சி மன்றங்களில் கடமையாற்றும் ஊழியருக்கான ஆட்சேர்ப்புத்திட்டம் சரியாக தயாரிக்க வலியுறுத்தியும் இதுவரை தயாரிக்கப்படாததை கண்டித்தும் வடக்கு கிழக்கு மாகாண அரசாங்க உத்தியோகத்தர் சங்கத்தினால் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

இங்கு ஆட்சேர்ப்புத் திட்டம் தயாரிப்பதற்கு ஏன் இவ்வளவு தாமதம், பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் எமது விடயத்தில் ஏன் இந்தப்பாராமுகம்?

நீண்டகால அடிப்படையில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குங்கள்.

நகரத்தில் சுத்தம் சுகாதாரம் பேணும் எமக்கு இனி வேதனம் இல்லையா? ஆட்சேர்ப்புத்திட்டத்தில் 2006க்கு முன்னர் நியமனம் பெற்றவர்களுக்கு வயது கல்வித் தகைமையில் சலுகை அடிப்படையில் வழங்க வேண்டும்.

ஆட்சேர்ப்புத்திட்டம் எப்போது? பதவியுயர்வு எப்போது? சம்பள உயர்ச்சி எப்போது? ஆட்சேர்ப்புத்திட்டம் தயாரிக்கும் போது வடக்குக் கிழக்கு மாகாண அரசாங்க உத்தியோகத்தர் சங்கத்தின் கருத்துக்களும்பெறப்பட்டு அவைபரிசீலிக்கப்பட்டு உள்வாங்கப்படல் வேண்டும்.

நீண்டகால அடிப்படையில் கடமையாற்றும் ஊழியர்கள் வெற்றிடத்திற்கு அமைவாக சேவை மூப்பு அடிப்படையில் நிரந்தரம் செய்யப்படல் வேண்டும் போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட சுலோகங்களையும் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டோர் தாங்கியிருந்தனர்.

இதன்போது மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் பொன்.செல்வராசா மற்றும் மாகாண சபை உறுப்பினர்களான இந்திரகுமார் பிரசன்னா, இ.துரைராஜசிங்கம், இரா.துரைரட்ணம் ஆகியோர் கலந்துகொண்டு பிரச்சினைகளை கேட்டறிந்தனர்.

அத்துடன் ஆர்ப்பாட்டம் தொடர்பான மகஜர் ஒன்றும் பிராந்திய உள்ளூராட்சி உதவியாணையாளருக்கு வழங்கப்பட்டது. (எ-11)

# எரிகாயத்துடன் கிணற்றிலிருந்து யுவதியின் சடலம் மீட்பு!

(யாழ்ப்பாணம்)

உடலில் தீக்காயங்களுடன் இளம் பெண் ஒருவரின் சடலம் கிணற்றுக்குள்ளிருந்து சுன்னாகம் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது.

இந்தச்சம்பவம் நேற்று அதிகாலை உடுவில் பெரிய மதவடி சுன்னாகம் என்னும் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

சடலமாக மீட்கப்பட்டவர் அப்பகுதியைச் சேர்ந்த சர்வேஸ்வரன் பிருந்தா (வயது 26) என்ற யுவதியே ஆவார்.

இவரது சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டு பின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

குறித்த யுவதியின் மரணம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (எ-6)

# தொண்டராசிரியர்களுக்கு நியமனம் கிடைப்பது எப்போது?

(மல்லாவி)

யுத்த காலத்தில் சிறப்பு சேவையாற்றிய தொண்டர் ஆசிரியர்களாலேதான் தற்போதைய சமாதான சூழலிலும் வன்னி பாடசாலைகளில் ஏற்பட்டுள்ள ஆசிரியர் வெற்றிடத்தினை நிவர்த்தி செய்ய முடிகிறது என மாணவர்களது பெற்றோர்கள் தொண்டராசிரியர்களைப் பாராட்டியுள்ளனர்.

இது தொடர்பில் தெரியவருவது, வன்னியில் நடைபெற்ற யுத்தத்தின் போது பிற மாவட்டங்களிலிருந்து வன்னி பாடசாலைக்கு நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் சிலர் அங்கு சேவையாற்ற மறுத்த நிலையிலும் மாறாக நியமனத்தை ஏற்று வருகை தந்தவர்கள் 2006 ஆம் ஆண்டு ஏ-9 பாதை மூடப்பட்ட போது வீடுகளுக்குச் சென்று மீண்டும் திரும்பாத நிலையில் வன்னி மாணவர்களின் நிலை கேள்விக்குறியான போதும் அவர்களுக்கு நேசக்கரம் நீட்டி வேதனம் எதுவுமின்றி கல்வியைப் போதித்தவர்கள் தான் இத்தொண்டர் ஆசிரியர்கள். இவர்களின் இந்த சேவையின் மூலம் யாழ்ப்பாணம் உட்பட பல மாவட்டங்களிலும் வைத்தியர்கள், பொறியியலாளர்கள், ஆசிரியர்கள் என பல தரப்பட்ட தொழில் புரிபவர்கள் உருவாகியுள்ளனர்.

ஆனால் இத்தகைய தியாகிகளான இவர்களுக்கோ இன்று வரை நிரந்த நியமனம் வழங்கப்படாதுள்ளது. அரசியல்வாதிகளாலும் மற்றும் கல்வி அதிகாரிகளினாலும் வாக்குறுதிகள் மட் டும் கிரமமாக வழங்கப்பட்டிருக்கின்றன.

இந்நிலையில் பலர் விரக்தி நிலைக்கு சென்று தற்கொலை முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளனர். இத்தகைய நிலையிலும் கூட தமது பிள்ளைகளின் கல்வி நிலை பாதிக்கப்படக் கூடாது என்ற மனப் பான்மையில் சேவையாற்றும் தொண்டர் ஆசிரியர்கள் துணுக்காய், முல்லை, கிளிநொச்சி, மன்னார், மடு, வவுனியா வடக்கு ஆகிய கல்வி வலயங்களில் தற்போது இடம்பெறும் ஆசிரியர் வெற்றிடத்தை தமது சேவையால் நிரப்புகின்றனர்.

பொருளாதார ரீதியிலும் உள ரீதியிலும் பல துன்பங்களைச் சுமந்து சேவை செய்யும் தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கினால் அவர்கள் தமது பிரதேங்களிலேயே தங்கி நின்று சேவையாற்றுவர்.

இதனால் மாணவர்களின் கல்வி வளர்ச்சியடையும் என பெற்றோர் தமது கருத்துக்களையும் முன் வைத்துள்ளனர். (அ-15)

## மீண்டும் மஞ்சள் மழை

திருகோணமலை நகர்ப்புறப் பகுதியில் மஞ்சள் மழை பெய்துள்ளதை பொது மக்கள் அவதானித்துள்ளனர்.

இந்த மஞ்சள் மழை நேற்று முன் தினம் நண்பகல் வேளையில் 5 நிமிடங்கள் பெய்துள்ளது.

மசூதி வீதி, புதிய சோனகத் தெரு வீதிகளில் குன்றும் குழியுமாக உள்ள இடங்களில் இந்த மழைநீர் மஞ்சளாக தேங்கி நின்றதை மக்கள் கண்டுள்ளனர். அதே நேரம் உள்துறை முகவீதிகளிலும் மஞ்சள் மழை பெய்துள்ளது. (அ-2)

## தமிழ்த்தின வலயமட்ட போட்டி முடிவுகள்

(மன்னார்)

மன்னார் வெள்ளாங்குளம் மூன்றாம் பிட்டி அ.த.க. பாடசாலை மாணவர்களது தமிழ்த்தினப் போட்டியின் வலய மட்ட முடிவுகளை அதிபர் எஸ்.அமலனன் குமார் அனுப்பி வைத்துள்ளார்.

அவை வருமாறு, கு.மிதுனன்
கதைகூறல் பிரிவு-I இரண்டாம் இடம்
அ.நிலாமதி பிரிவு-II
பாவோதல் முதலாமிடம்
அ.ஒளிசன் அன்ரனி பிரிவு- II
பேச்சு முதலாம் இடம்
அ.லக்ஷினி பிரிவு- III
பேச்சு இரண்டாம் இடம்,
சமூக நாடகம் திறந்த போட்டி முதலாம் இடம். (அ)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## சாந்தமான மனம் வேண்டும்



✦ மனிதன் வலிமை பெறவேண்டுமானால் உண்மை மிக்கவனாக வாழவேண்டும்.

✦ ஆயிரம் முறை தோல்வியடைந்தாலும் மீண்டும் ஒருமுறை இலட்சியத்தை அடையமுயற்சி செய்யுங்கள்.

✦ பலவீனத்திற்குப் பரிகாரம் பலவீனத்தைச் சிந்திப்பது அல்ல. மாறாக வலிமையைக் குறித்துச் சிந்திப்பதுதான்.

✦ கீதை படிப்பதைவிட காற்பந்தின் மூலம் நீங்கள் சொர்க்கத்திற்கு அருகில் இருப்பீர்கள். அதனால் உடல் வலிமை மிக்கவராக ஆகுங்கள்.

✦ உலகில் யார் வேண்டுமானாலும் சொல்லட்டும். உங்கள் இலட்சியத்தை நோக்கி உறுதியுடன் செயற்படுங்கள்.

✦ தன்னைப் பற்றி மட்டுமே நினைத்துக்கொண்டிருக்கும் சுயநலமே உலகில் மிகப்பெரிய பாவம்.

✦ சாந்தமான மன்நிலை கொண்டவன் நல்ல பணிகளில் ஈடுபட்டு நன்மையைத் தேடிக்கொள்கிறான்.

✦ மனிதர்கள், விலங்குகளைவிட ஒழுக்கமானவர்களாக இல்லை. சமூகப் பொது அபிப்பிராயம் தான் நம்மை ஒழுக்கமுள்ளவர்களாக வைத்திருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழலின் உறைவிடமாகிறதா

## இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை

### அம்பலமாகியது அடுத்த சர்ச்சை

பணத்திலே துள்ளி விளையாடும் இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை (பி.சி.சி.ஐ) ஊழலின் உறைவிடமாக மாறுகிறதா என்ற கேள்வி கிரிக்கெட உலகை ஆட்டிப் படைக்க ஆரமபித்துள்ளது.

ஐ.பி.எல் சூதாட்டத்தில் ஆரம்பித்த சர்ச்சை கிரிக்கெட் வீரர்கள் கைது, திரையுலக நட்சத்திரங்கள் சூதாட்டத்துடன் தொடர்பு, கிரிக்கெட் அணி நிர்வாகிகளும் சூதாட்டத்தில், பி.சி.சி.ஐ. நிர்வாகிகள் திடீர் இராஜினாமா என தினம் தினம் ஒவ்வொரு செய்திகள்வெளிவந்து கொண்டிருக்க தற்போது இன்னுமோர் சர்ச்சை இந்தியக் கிரிக்கெட் சபைக்கு பேரிடியை ஏற்படுத்தியுள்ளது.

2010 இலங்கை - இந்திய தொடரின் போது இந்திய அணியின் முன்னணி வீரர் ஒருவர்(சென்னை அணிக்காகவும் விளையாடுபவர்), சூதாட்ட தரகர் அனுப்பிய பெண்ணுடன் ஹொட்டல் அறையில் உல்லாசமாக இருந்ததாகவும் இது தொடர்பான புகாரை, இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் (பி.சி.சி.ஐ), நெருக்கடி காரணமாக இலங்கை கிரிக்கெட் சபை வாபஸ் பெற்றது என, பஞ்சாப் கிரிக்கெட் சங்க தலைவர் ஐ.எஸ்.பிந்த்ரா அதிர்ச்சி தகவலை வெளியிட்டுள்ளார்.

கடந்த 2010இல் இந்திய அணி, இலங்கை வந்து போட்டிகளில் பங்கேற்றது. அப்போது மூடி மறைக்கப்பட்ட சில சம்பவங்கள் குறித்து பஞ்சாப் கிரிக்கெட் சங்க தலைவர் ஐ.எஸ்., பிந்த்ரா தனது இணையத் தளத்தில் எழுதிய கட்டுரையில் கூறியிருப்பதாவது:

விடுதலைப் புலிகள் அச்சுறுத்தல் காரணமாக, 2010இல் நடைபெற்ற கிரிக்கெட் தொடரின்போது இந்திய அணிக்கான பாதுகாப்பை இலங்கை இராணுவத்தின் ஓய்வுபெற்ற தளபதி ஒருவர் கவனித்தார். இவர், பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்தார். இந்திய வீரர்கள் தங்கிய ஹொட்டலின் பெரும்பாலான இடங்களில் இரகசிய 'சிசிடிவி' கமராக்களை பொருத்த உத்தரவிட்டார்.

ஒருநாள் இரவு நேரத்தில், இந்திய அணியுடன்பயணம் செய்த அதிகாரி, ஒரு பெண்ணை அழைத்துக்கொண்டு இந்திய வீரர் ஒருவரின் அறைக்கு சென்றார். இந்த முன்னணி வீரர் கடந்த ஆறு ஆண்டுகளாக ஐ.பி.எல். போட்டிகளில் சென்னை அணிக்காக விளையாடியவர். போட்டிக்கு முந்தைய நாள் இரவு முழுவதும் இந்த வீரருடன் பொழுதை அப்பெண் கழித்ததாக கமராவில் பதிவு செய்யப்பட்ட காட்சிகள் உறுதிசெய்தன.

சர்வதேச கிரிக்கெட் சபையால் (ஐ.சி.சி.,) சந்தேகிக்கப்படும் சூதாட்ட தரகர்களின் பட்டியலில் இடம்பெற்றுள்ள ஒருவர் தான் இந்த பெண்ணை அனுப்பியதாக கூறப்படுகிறது. எனவே, இந்த சம்பவம் பாதுகாப்பு மற்றும் ஐ.சி.சி., ஊழல் தடுப்பு விதிமுறைகளை மீறியது.

இது தொடர்பாக படைத் தளபதி அளித்த அறிக்கையின்படி, இலங்கை கிரிக்கெட் சபைபோதிய ஆதாரங்களுடன் எழுத்துபூர்வமான புகாரை அப்போதைய இந்திய அணியின் முகாமையாளர் மற்றும் ஐ.சி.சி. ஊழல் தடுப்பு மையத்தின் அதிகாரிக்கு அளித்துள்ளது. பின் இந்திய கிரிக்கெட் சபையின் (பி.சி.சி.ஐ.,) அதிகாரி ஒருவர் கொடுத்த நெருக்கடிக்கு பணிந்து, இப்புகாரை வாபஸ் பெற்றுள்ளது.

தற்போதைய சூதாட்ட பிரச்சினையில் ஏற்கனவே சென்னை அணியின் 'கௌரவ' உறுப்பினர் குருநாத் மெய்யப்பனை ஐ.சி.சி., எச்சரித்ததாக கூறுகிறது. இது பி.சி.சி.ஐ.,க்கும் தெரிந்திருக்கும். பி.சி.சி.ஐ., யை சேர்ந்த எந்த அதிகாரிகளுக்கு தகவல் தரப்பட்டது. இதனை அவர்கள் எப்படி கையாண்டனர் என்பதை ஐ.சி.சி., தெரிவிக்க வேண்டும். ஐ.சி.சி.யிடம் இருந்து தகவல் கிடைத்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால், பி.சி.சி.ஐ., மிகப் பெரும் தவறு செய்திருக்கிறது என்று தான் அர்த்தம். இதனை ஐ.சி.சி., தெளிவுபடுத்த வேண்டும்.

பி.சி.சி.ஐ., தலைவராக சீனிவாசன் பொறுப்பேற்றதில் இருந்து, இந்தியா சிமெண்ட்ஸ நிறுவனத்தை சேர்ந்த ஊழியர் ஒருவர் இந்திய அணியுடன் உள்ளூர் மற்றும் வெளிநாடுகளுக்கு செல்வது வழக்கமாக உள்ளது. இவர் அணிக்கு வெளியில் இருப்பவர் என்பதால் ஐ.சி.சி., நடத்தை விதிகள் பொருந்தாது. பி.சி.சி.ஐ., கண்காணிப்புக்கும் உட்படமாட்டார். இவருக்கு இந்திய அணியின் உத்திகள், வீரர்களின் தனிப்பட்ட அறைகளில் நடைபெறும் விடயங்கள் உட்பட அனைத்தும் இரகசியமாக தெரியும். தனியார் நிறுவனத்தை சேர்ந்த ஒருவர் இந்திய அணியுடன் சேர்ந்திருப்பது சர்ச்சைக்குரியது. பல்வேறு சந்தேகங்களை அளிக்கக்கூடியது.

தற்போதைய மோசமான நிலையில் இருந்து இந்திய கிரிக்கெட்டை தூய்மையாக்கி, ரசிகர்கள் மத்தியில் மீண்டும் நம்பகத்தன்மையை ஏற்படுத்த வேண்டும். தனிப்பட்ட நபரை காட்டிலும் கிரிக்கெட் விளையாட்டுதான் எப்போதும் முக்கியமானது.


இவ்வாறு பிந்த்ரா தனது கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

**யார் அந்த மூன்று பேர்?**

ஐ.பி.எல் தொடரில் சென்னை அணிக்காக கடந்த ஆறு ஆண்டுகளாக இந்திய அணியின் தலைவர் தோனி, சுரேஷ் ரெய்னா, பத்ரிநாத் ஆகியோர் விளையாடியுள்ளனர்.

### குப்டிலின் அனல் பறந்த ஆட்டத்தால்

## பொசுங்கியது இங்கிலாந்து



இங்கிலாந்து அணிக்கெதிரான சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் தொடரை 2-0 என்ற கணக்கில் நியூசிலாந்து அணி கைப்பற்றியுள்ளது.

சௌத் அம்டனில் நடைபெற்ற இந்த தொடரின் இரண்டாவது போட்டியில் மார்ட்டின் குப்டிலின் சாதனையான சதத்தின் உதவியுடன் நியூசிலாந்து அணி 86 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றது.

போட்டியில், முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து 359 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

அதிரடியாகத் துடுப்பெடுத்தாடிய மார்ட்டின் குப்டில் 155 பந்துகளில் 189 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றதுடன், நியூசிலாந்தின் சர்வதேச ஒருநாள் போட்டி வரலாற்றில் இன்னிங்ஸ் ஒன்றில் அதிகூடிய ஓட்டங்களைப் பெற்ற வீரர் என்ற சாதனையையும் நிலை நாட்டினார்.

இங்கிலாந்து அணி சார்பாக ஜேம்ஸ் அண்டசன் 2 விக்கெட்டுக்களையும், கிரஹம் சுவோன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

360 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கை நோக்கி பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 44.1 ஓவரில் 273 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்து தோல்வியடைந்தது.

இங்கிலாந்து அணி சார்பாக ஜெனதன் ட்ரொட் 109 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றதுடன், அலிஸ்டெயார் குக் 34 ஓட்டங்களைப் பெற்றார்.

நியூசிலாந்து அணி சார்பாக மிச்சேல் மெக் க்ளனகன் 3 விக்கெட்டுக்களையும் கேன் வில்லியம்ஸ்சன் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

போட்டியின் சிறப்பாட்டக்காரராக நியூசிலாந்து அணியின் மார்ட்டின் குப்டில் தெரிவு செய்யப்பட்டார்.

## இலங்கை தோல்வி

மினி உலகக் கிண்ணப் போட்டிகளுக்கான பயிற்சிப் போட்டியில் இலங்கை அணியை இந்திய அணி தோற்கடித்துள்ளது.

பர்மிங்காமில் இடம்பெற்ற இப்போட்டி யில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

பயிற்சிப் போட்டி என்பதால் 15 வீரர்கள் ஓர் அணியில் அனுமதிக்கப்பட்டதோடு, யாராவது 11 வீரர்கள் மாத்திரம் துடுப்பாட்டத்திலும் 11 வீரர்கள் பந்துவீச்சிலும் ஈடுபட அனுமதிக்கப்பட்டனர்.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 50 ஓவர்களின் முடிவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 333 ஓட்டங்களைக் குவித்தது.

அதிரடியாக ஆடிய இலங்கையின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் 26 ஓவர்களில் 160 ஓட்டங்களைக் குவித்தனர். அதிரடியாக ஆடிய குஷால் ஜனித் பெரேரா, திலகரட்ண டில்ஷான் இருவரும் ஆட்டமிழக்காமல் ஓய்வுபெற்று, ஏனைய வீரர்களுக்கு வாய்ப்பினை வழங்கினர்.

துடுப்பாட்டத்தில் திலகரட்ண டில்ஷான் 78 பந்துகளில் 84 ஓட்டங்களையும், குஷால் ஜனித் பெரேரா 94 பந்துகளில் 82 ஓட்டங்களையும் பெற்று ஓய்வுபெற்றனர்.

டினேஷ் சந்திமால் 48 பந்துகளில் 46 ஓட்டங்களையும், குமார் சங்கக்கார 32 பந்துகளில் 45 ஓட்டங்களையும் மஹேல ஜெயவர்தன 31 பந்துகளில் 30 ஓட்டங்களையும் திஸர பெரேரா 16 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 26 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இந்திய அணி சார்பாக புவனேஷ்வர் குமார், இஷாந்த் சர்மா, அமித் மிஷ்ரா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.


334 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 49 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

முதலாவது விக்கெட்டை 5 ஓட்டங்களுக்கு இழந்த அவ்வணி, ஒரு கட்டத்தில் 4 விக்கெட்டுக்களை இழந்து 110 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோதிலும், 5ஆவது விக்கெட்டுக்காக டினேஷ் கார்த்திக், விராத் கோலி இருவரும் சிறப்பாக ஆடி 186 ஓட்டங்களைக் குவித்திருந்தனர்.

துடுப்பாட்டத்தில் இந்திய அணி சார்பாக விராத் கோலி 120 பந்துகளில் 144 ஓட்டங்களையும் டினேஷ் கார்த்திக் 81 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 106 ஓட்டங்களையும் சுரேஷ் ரெய்னா 31 பந்துகளில் 34 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இலங்கை அணி சார்பாக ஷமிண்ட எரங்க 2 விக்கெட்டுக்களையும் திஸர பெரேரா, சச்சித்திர சேனநாயக்க இருவரும் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றனர். மற்றுமொரு பயிற்சிப் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணியை அவுஸ்திரேலிய அணி 4 விக்கெட்டுக்களால் வெற்றி கொண்டிருந்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் 256 ஓட்டங்களைப் பெற, ஷேன் வொற்சனின் அதிரடி 135 ஓட்டங்களின் துணையோடு அவுஸ்திரேலியா 38.5 ஓவர்களிலேயே வெற்றி இலக்கை அடைந்திருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரெஞ்சு ஓபன் டென்னிஸ்; கால் இறுதியில் பெடரர்



கிராண்ட்சிலாம் போட்டிகளில் ஒன்றான பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் போட்டி பாரிஸ் நகரில் நடைபெற்று வருகிறது.

ஆண்கள் ஒற்றையர் பிரிவில் உலகின் இரண்டாம் நிலை வீரரும், 2009-ம் ஆண்டு சம்பியனுமான ரோஜர் பெடரர் (சுவிட்சர் லாந்து) 4-வது சுற்றில் பிரான்சை சேர்ந்த ஜைல்ஸ் சிமோனை எதிர்கொண்டார்.

15-ம் நிலை வீரரான சிமோன் பெடரருக்கு கடும் சவாலாக இருந்தார். முதல் செட்டை எளிதில் வென்ற பெடரர் அடுத்தடுத்து 2 செட்களை இழந்ததால் நெருக்கடிக்கு ஆளானார். அனுபவத்துடன் விளையாடி 4-வது செட்டையும், 5-வது செட்டையும் வென்றார். பெடரர் 6-1, 4-6, 2-6, 6-2, 6-3 என்ற செட் கணக்கில் போராடி வென்று கால் இறுதிக்கு தகுதி பெற்றார்.

பிரான்ஸ் வீரரும், தரவரிசையில் 6-வது இடத்தில் இருப்பவருமான சோங்கா 4-வது சுற்றில் 6-3, 6-3, 6-3 என்ற நேர்செட் கணக்கில் செர்பிய வீரர் விக்டரை வென்று கால் இறுதிக்கு முன்னேறினார். பெடரர்-சோங்கா கால் இறுதியில் மோதுகிறார். 11-ம் நிலை வீரரான அல்மாக்ரோ (ஸ்பெயின்) 4-வது சுற்றில் அதிர்ச்சிகரமாகத் தோற்றார்.

ராபர்ட்டோ 6-7 (5-7), 3-6, 6-4, 6-4, 6-4 என்ற கணக்கில் அல்மாக்ரோவை வீழ்த்தினார். ஸ்பெயினை சேர்ந்த ராபர்ட்டோ கால் இறுதியில் சக நாட்டைச் சேர்ந்த பெரரை சந்திக்கிறார். 4-ம் நிலை வீராங்கனையான ரட்வன்ஸ்கா (போலந்து) 6-2, 6-4 என்ற நேர் செட் கணக்கில் அனா இவாகோவிக்கை (செர்பியா) வீழ்த்தி கால்இறுதிக்கு முன்னேறினார்.



இளைஞர் தேசிய மட்ட கனிஷ்ட மெய்வல்லுனர் போட்டிகள் அண்மையில் கொழும்பு தியகம மகிந்த ராஜபக்ஷ விளையாட்டரங்கில் இடம் பெற்றது. இந் நிகழ்வில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி மாணவி ஜெ.அனித்தா 18வயது கோலூன்றி பாய்தலில் 2.90m உயரம் பாய்ந்து தங்கப் பதக்கத்தினையும், அதே கல்லூரி மாணவன் உ.கயுசாந் 16வயதுப் பிரிவினருக்கான தட்டெறிதலில் 39.50 மீற்றர் தூரம் எறிந்து மூன்றாம் இடத்தினையும் பெற்றுக் கொண்டார். இவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் பாடசாலை இடம் பெற்றது. அவர்களையும் பாடசாலை சமூகத்தினரையும் படத்தில் காணலாம். (23)

## சீனாவில் தீ...

வாயுக் கசிவு காரணமா அல்லது மின் கசிவு காரணமா என்பது இன்னும் தெளிவாக வில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

சிக்குண்டவர்களை மீட்கும்பணி தொடர்ந்து நடந்துவருகிறது. சம்பவ இடத்திலிருந்து சுமார் ஒரு கிலோமீட்டர் சுற்று வட்டாரத்தில் வாழும் மக்கள் வாழ்விடங்களை விட்டு வெளியேற்றப்பட்டுள்ளனர் என்றும் அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)

## மனித உரிமை...

இலங்கையில் எதிர்வரும் நவம்பர் மாதம் இடம்பெறவுள்ள பொதுநலவாய அரசியல் தலைவர்களின் உச்சி மாநாடு தொடர்பில் இவர் அரச தலைவர்களுடன் கலந்துரையாடவுள்ளார்.

அத்துடன், இலங்கையின் மனித உரிமை நிலைவரங்கள் மற்றும் நல்லிணக்க முயற்சிகள் தொடர்பிலும் இவர் இலங்கையின் அரச தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நியூஸிலாந்துக்கும் இலங்கைக்கும் இடையிலான வர்த்தக உறவுகள் தொடர்பிலும் இச் சந்திப்புக்களில் கவனம் செலுத்தப்படவுள்ளது.

இருநாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்காகவே நியூஸிலாந்து வெளிவிவகார அமைச்சர் இலங்கைக்கு விஜயம் செய்வதாக இலங்கையின் வெளிவிவகாரச் செயலாளர் கருணாதிலக்க அமுனுகம தெரிவித்துள்ளார். (எ-11)

## பாரதிய ஜனதா...

யாழ்ப்பாணத்திற்கு நாளை புதன்கிழமை வருகை தரும் இந்தக் குழுவினர் இந்திய வீட்டுத் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டிருக்கும் வீடுகளைக் சென்று பார்வையிடவுள்ளதோடு பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி மற்றும் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் உள்ளிட்டவர்களையும் சந்தித்து கலந்துரை யாடவுள்ளனர். (எ-6)

## அரசின் அறிவிப்...

போல் 13 ஆவது திருத்தத்தை இல்லாதொழிக்க ஹெல உறுமய மற்றும் தேசிய சுதந்திர முன்னணி ஆகியன பாடுபடுகின்றன.

இதேவேளை, அரசாங்கத்தில் உள்ள இன்னும் சிலர் 13 ஆவது திருத்தத்தை இரத்துச் செய்யாது வடக்குத் தேர்தலை நடத்துமாறும் கூறுகின்றனர்.

இந்நிலையில் அரசாங்கம்தான் வெளிநாடுகளுக்குச் சென்று பல உறுதிமொழிகளை வழங்குகின்றது. அரசுக்குத்தான் வடக்குத் தேர்தல் முக்கியமாகவுள்ளது. எனவே வடக்குத் தேர்தல் குறித்து அரசாங்கம் உறுதியான தகவல் வெளியிட்டதன் பின்னர் அது குறித்து ஐக்கிய தேசியக் கட்சி தனது நிலைப்பாட்டை அறிவிக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (எ-11)

## போர் வீரர்...

குடியேற்றுவதற்காக சுமார் ஆயிரம் வீடுகள் சீனா நாட்டின் உதவியுடன் அமைக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

எனினும் இவ்விடயம் தொடர்பில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்திற்கோ, முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்திற்கோ எவ்விதமான தகவல்களும் கிடைக்கப்பெறவில்லை எனவும் குறிப்பிடப்படுகின்றது.

ஆனால் 2012ம் ஆண்டின் ஆரம்பத்தில் குறித்த பகுதியிலுள்ள வனவளத்துறைக்குச் சொந்தமான நிலத்தை தமக்கு வழங்குமாறு இராணுவம் கேட்டிருந்தது.

அதற்குச் சட்டரீதியான அனுமதி எதுவும் வழங்கப்படாத நிலையில் குறித்த வீடுகள் கட்டப்பட்டு முடிக்கப்பட்டுமுள்ளது.

மேலும் இந்தப் பகுதிக்குள் அனுமதியில்லாமல் யாரும் நுழைய கூடாதெனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதனோடு காப்பெற் வீதிகளும் இப்பகுதியில் துரிதமாக அமைக்கப்பட்டுவருவதாக தெரியவருகின்றது. (எ-11)

## வெலிக்கடையிலிருந்து...

மேற்கொள்ளப்படுவதாக அமைச்சர் சந்திர சிறி கஜதீர கூறியுள்ளார்.

முதற்கட்டமாக இடவசதியுள்ள சிறைச்சாலைகளுக்கு படிப்படியாக கைதிகள் அனுப்பிவைக்கப்படுகின்றனர்.

களுத்துறை, காலி, வட்டரெக்க ஆகிய சிறைச்சாலைகளுக்கு தற்போது வெலிக்கடையில் இருந்து கைதிகள் மாற்றப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

வெலிக்கடை சிறைச்சாலையிலுள்ள அனைத்துப் பெண் கைதிகளையும் கண்டி போகம்பரை சிறைச்சாலைக்கு மாற்றத் தீர்மானித்துள்ளதாகவும் அமைச்சர் மேலும் கூறியுள்ளார்.

இலங்கையில் சிறைச்சாலைகளில் இடம்பெறும் அனைத்து மோசடிகளையும் முறியடிப்பதற்காக சிறைச்சாலை புலனாய்வுத் துறையை வலுப்படுத்துவதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

தொடர்ந்தும் சிறைச்சாலைகளில் இடம் பெறும் முறைகேடுகள் மற்றும் கடத்தல்களை கவனத்தில் கொண்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த சில வாரங்களில் வெலிக்கடை, போகம்பரை மற்றும் கொழும்பு மகசின் சிறைச்சாலைகளில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளின்போது போதைப் பொருள் துகள்கள், கைத்தொலைபேசிகள் மற்றும் தொலைபேசி அட்டைகள் என்பன மீட்கப்பட்டுள்ளன.

இதன்போது, மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப விசாரணைகளில்போது சிறைச்சாலைகளில் பலவிதமான மோசடிகள் இடம்பெறுவதாக தெரியவந்துள்ளது.

குறிப்பாக இவ்வாறான மோசடி நடவடிக்கைகளின்போது சிறைச்சாலை அதிகாரிகள் தொடர்புபட்டுள்ளமை அம்பலமாகியுள்ளது.

இதுதவிர, சிறைச்சாலைகளில் இருந்து நீதிமன்றங்களுக்கு அழைத்துச் செல்லப்படும் கைதிகள் ஊடாக போதைப்பொருட்களும், சட்டவிரோத பொருட்களும் கடத்தப்படுவதாக தெரியவந்துள்ளது.

எனினும், இந்த விசாரணைகளை முன்னெடுக்கும் தருணங்களில் சிறைச்சாலை புலனாய்வுத்துறையில் காணப்படும் பலவீனம் பெரும் இடையூறாக இருப்பதாக சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு சுட்டிக் காட்டியுள்ளது.

இதன்படி, துரிதமாக சிறைச்சாலைகள் புலனாய்வுத்துறை வலுப்படுத்துவது குறித்து அந்த அமைச்சு கவனம் செலுத்தி வருகின்றது. (எ-11)

## சொந்த ஊரில்...

கிராமத்தில் உள்ள பிள்ளையார் ஆலயத்திற்கு எடுத்துச் சென்று அந்த ஆலயத்தில் வழிபாடுகள் செய்து கொண்டு வந்து புதிய கோவிலில் பிரதிஷ்டை செய்ய வேண்டும் என்ற ஊர் மக்களின் விருப்பத்தையடுத்தே, அதியுயர் பாதுகாப்பு வலயத்தின் உள்ளே உள்ள கேப்பாப்பிலவு பிள்ளையார் ஆலயத்திற்குச் சென்று வருவதற்கான அனுமதி இராணுவத்தினரால் வழங்கப்பட்டதாக கேப்பாப்பிலவு மாதிரி கிராமத்தின் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் கூறினார்.

இத்னையடுத்து உழவு இயந்திரங்கள் உள்ளிட்ட வாகனங்களில் ஊர் மக்கள் புதிய பிள்ளையார் சிலையை அங்கு எடுத்துச் சென்று பொங்கலிட்டு வழிபாடுகள் செய்து, பின்னர் கொண்டு வந்து மாதிரி கிராம கோவிலில் பிரதிஷ்டை செய்திருப்பதாகவும் அவர் கூறினார்.

பூர்வீக ஊர் கோவிலில் மக்கள் அழுது அரற்றி வழிபட்டதைக் கண்ட இராணுவ அதிகாரிகள் அந்த மக்கள் மாதம் ஒரு தடவை வெள்ளிக்கிழமைகளில் அங்கு சென்று வழிபடுவதற்கான அனுமதியை வழங்குவதாக உறுதியளித்திருப்பதாகவும் பரமேஸ்வரன் தெரிவித்தார்.

இதேவேளை, கடந்த 2008 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்ததையடுத்து முதற் தடவையாக ஞாயிறன்று தமது ஊருக்குள் தாங்கள் சென்றதாகவும் எனினும் ஊரில் வீடுகளையோ காணிகளையோ பார்வையிடுவதற்கு அனுமதி வழங்கப்படவில்லை என்றும் மாதர் அபிவிருத்திச் சங்கத் தலைவி சந்திர லீலா கூறினார்.

ஊரில் கல்வீடுகள் அப்படியே இருப்பதாகவும் சில வீடுகள் மேலும் செப்பனிடப் பட்டிருப்பதாகவும், ஆனால் மண் வீடுகள் அழிக்கப்பட்டிருப்பதாகவும் வான் பயிர்கள் எவ்விதமான சேதமுமின்றி இருப்பதாகவும் சந்திரலீலா குறிப்பிட்டார்.(எ-11)


# மரண அறிவித்தல்



## M.S.விஸ்வலிங்கம்

**(ஓய்வுபெற்ற பாதுகாப்பு உத்தியோகத்தர்**
**யாழ்.பல்கலைக் கழகம்,**
**விஸ்வா திருமண சேவை - கோண்டாவில்.)**

M.S.விஸ்வலிங்கம் 03.06.2013 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் திருமதி வி.யோகேஸ்வரி -ஆசிரியர் (நெசவு) தொழில் துறை திணைக்களம் கந்தர்மடம்- அவர்களின் அன்புக் கணவரும், அனந்தன்( பாதுகாப்பு உத்தியோகத்தர்- யாழ். பல்கலைக்கழகம்), அகிலன் (பழைய மாணவன் - கொக்குவில் இந்துக் கல்லூரி- 2008 A/L, கலை), திருமதி ஜஸ்ரின் ஜோய் நளாயினி (ஜேர்மன்), திருமதி ஜேந்திரன் ராஜினி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும்.

சென் [illegible]யர் வீதி,
கோண்டாவில் கிழக்கு.

(2927)

தகவல்: குடும்பத்தினர்
0784952798, 0215680498


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## மாந்திரீக ஜோதிடம்

அன்பானவர்களே!
உங்களுக்கு ஏற்பட்டுள்ள தீராத வியாதி, கஷ்ரங்கள், கணவன் மனைவி பிரச்சினை தீர, கல்வி முன்னேற்றம் பெற ஒருமுறை அழையுங்கள். இரகசியம் பாதுகாக்கப்படும்.
தொடர்புகளுக்கு : 0778592885 (288)

## கடத்தல்...

அகதிகள் உட்பட 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக சென்னை மாநகர பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடத்தப்பட்ட வர்த்தகப் பிரமுகர் தவராஜா வும் அவரது மனைவி சலஜாவும் சென்னை பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளனர்.

தவராஜாவும் அவர் மனைவியும் கடந்த மே 29ஆம் திகதி கொழும்பிலிருந்து சென்னை விமான நிலையம் வந்தடைந்த போது, அவர்கள் தங்கவிருந்த நட்சத்திர ஹோட்டலிலிருந்து வருவதாகக் கூறி இருவர் அவர்களை சந்தித்து காரில் அழைத்துச் சென்றிருக்கின்றனர்.

செல்லும்வழியில் வேறிருவர் வாகனத்தில் ஏறிக்கொண்டபோது, தம்பதியருக்குச் சந்தேகம் வந்திருக்கிறது. அப்போது அவர்கள் முன்பதிவு செய்திருந்த ஹோட்டல் நிர்வாகத்தினர் தொடர்புகொண்டு ஏன் அவர்கள் அனுப்பிய காரைப் பயன்படுத்த வில்லை எனக்கேட்டபோதுதான், தாங்கள் கடத் தப்படுவதை அவர்கள் உணர்ந்துள்ளனர்.

ஆனால் அவர்களால் ஏதும் செய்ய இயல வில்லை. அவர்கள் புதுச்சேரி அருகே உள்ள மந்தாரக்குப்பத்தில் அடைத்துவைக்கப் பட்டனர்.

அதே நேரம் இலண்டனில் உள்ள அவர் களது மகளிடம்யாரோ ஒருவர் தொலைபேசியில தொடர்புகொண்டு, 5 லட்சம் பவுண்ட்ஸ் (இந்திய மதிப்பில் 3 கோடி ரூபாய்) அனுப்பி வைக்கா விட்டால் அவரது பெற்றோர் கொல்லப் படுவர் என மிரட்டி யிருக்கிறார்.

தொடர்ந்து கடத்தல்காரர்கள் அப்பெண்ணிடம் பேச, எங்கிருந்து அவ்வழைப்பு வருகிறது என்பதைக் கண்காணித்த பிரிட்டிஷ் பொலிஸார் மந்தாரக்குப்பம் வீட்டைக் கண்டறிந்ததாகவும், ஆனால் பெரிதாக மோதல் எதுவுமில்லாமல் தவராஜா தம்பதியினர் நேற்று முன் தினம் ஞாயிற்றுக் கிழமை மீட்கப்பட்டனர்.

நேற்று திங்கள் செய்தியாளர்களைச் சந்தித்த தவராஜா வும்அவரது மனைவி யும் தாங்கள் துன் புறுத்தப்பட வில்லை யென்றும் ஆனால் தொடர்ந்து பயமுறுத் தப்பட்டதாகவும் கூறியுள்ளனர்.(எ-11)

## மட்டு-இந்து...

இன்று காலை 10 மணியளவில் ஜனாதிபதிக்கான மகஜரை சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியத்தின் பிரதிநிதிகள் யாழ்ப்பாண அரச அதிபரிடம் கையளிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ந)

## SUCCESS INSTITUTE

K.K.S. Road, Kondavil.
[உப்புமடச்சந்தி பிள்ளையார் கோவில் அருகில்]

A/L 2014, 2015

**கலை, வர்த்தக கணித, உயிரியல் வகுப்புக்கள்.**

யாழ்–கொழும்பு பிரபல ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த வழிகாட்டலில் புதியதோர் உதயம். (2924)

**ஆரம்பம்-05.06.2013 புதன்கிழமை மாலை 4.00மணி**

## Personal & Group Classes — Jaffna-Vavuniya

2D-Drawing 3D-Modeling
**Auto CAD**

Lecturer By:K.N.Mugunthan(D.A)
Cert.in Auto CAD 2D-Drawing
Dept.of Civil Engineering
University of Peratheniya
Cert.in Auto CAD 2010
University of Colombo

0775116320
071 8617972

Cert.in Advanced 3D-Modelling in Auto CAD
Dept.of Mech.Engineering
University of Moratuwa
Cert.in 2D & 3D-Modelling in Auto CAD
Open University of Sri-Lanka
(அ-3502)

## வேலைவாய்ப்பு

புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள HELADIV MULTI NATIONAL கம்பனிக்கு வேலையாட்கள் தேவை.

- தகுந்த பயிற்சி வழங்கப்பட்டு உள்வாங்கப்படுவர்.
- அனுபவம் அவசியமில்லை
- வெளிமாவட்டங்களில் இருந்தும் விண்ணப்பிக்கலாம்
- பயிற்சியின் போது கவர்ச்சிகரமாக சம்பளம் பெறலாம்
- மேலும் பல சலுகைகள் வழங்கப்படும்
- ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்
- தங்குமிடம் ஒழுங்கு செய்து வழங்கப்படும்
- வயதெல்லை 18 குறைந்தது

தொடர்புக்கு: 077 8330074, 0774301972 (2926)

## விரைவில் நடைபெறவுள்ள SLEAS போட்டிப் பரீட்சைக்கான வழிகாட்டல்-2013

அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க கல்வி நிர்வாக சேவை தரம் III போட்டிப் பரீட்சைக்கான வழிகாட்டல் செயலமர்வுகள் 22.06.2013 ஆரம்பமாகின்றன.

**வளவாளர்கள்:**

- பேராசிரியர் மா.சின்னத்தம்பி
- கலாநிதி த.கலாமணி
- திரு.அ.குமாரவேல்
- திரு.பா.தனபாலன்,
- திரு.மா.மகாலிங்கசிவம்
- திரு.த.தவசேகர்

*விசேட கலந்தாய்வுகள்
*சமர்ப்பிப்புக்கள்
*மாதிரிப்பயிற்சிகள்
*கடந்த கால பரீட்சை வினாத்தாள் பின்னூட்டல்கள்
*பரீட்சை தொடர்பான முன்னூட்டல்கள்

பங்கு பெற விரும்புவோர் பின்வரும் தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொண்டு முற்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்.

**திரு.பா.தனபாலன் (பணிப்பாளர்)**
ஆசிரிய வாண்மை விருத்தி நிறுவகம்
528, பலாலி வீதி, திருநெல்வேலி.
T.P: 0779360607 (2921)

## Vacancyes


Job! Job! Jop!...0778602777, 0777981471, 0775566226, 0217200867 நீங்கள் O/L பயின்றவரா? இவ்விலக்கங்களுக்கு அழைத்து உங்கள் பதிவுகளை உடன் பதிவு செய்க! நாடு முழுவதும் 40 பேருக்கு முன்னுரிமை . நிர்வாக அதிகாரி, செயல்திட்ட அதிகாரி, அலுவலக உதவியாளர், மேற்பார்வையாளர் அனுபவம் இல்லையா? தங்குமிட வசதியுடன் பயிற்சி வழங்கப்படும்.

☑ பயிற்சிக்காலம்:- 12,000/=, 15,000/=
☑ பின் குறைந்தது:- 45,000/=


No.70, 4th Cross Street, Jaffna. (அ-3503)

union assurance
Trust in your tomorrow, today.

04.06.2013 இன்று கொழும்பு BMICH (Srimavo bandaranayake Hall) இல் நடைபெறும்யூனியன் அஸ்யூரன்ஸ் PLC யின் வருடாந்த விருது வழங்கும் விழாவில் பருத்தித்துறைப் பிராந்தியத்தில் இருந்து வெற்றியீட்டி விருதினைப் பெற்றுக்கொள்வோர்.


M.Ravishankar
(Agency Development Officer)


V.Thuvaragan
(Insurance Advisor)


B.Piremkumar
(Insurance Advisor)


D.Venthiny
(Insurance Advisor)

**வாழ்த்துவோர்:** வட வலய முகாமையாளரும், பருத்தித்துறை பிராந்திய உத்தியோகத்தர்களும்

# மரண அறிவித்தல்

## திருமதி கனகசிவநாயகம் பரமேஸ்வரி

தண்ணீர்த்தாழ்வு, கட்டுவன் தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும் கலட்டி லேன் கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகசிவநாயகம் பரமேஸ்வரி நேற்று (03.06.2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் செல்லையா செல்லம்மாவின் அன்பு மகளும், கனகசிவநாயகத்தின் அன்பு மனைவியும், பவிதா (பிரான்ஸ்), பாமினி (Dr.Thellippalai/CMO), தாரணி (லண்டன்), கஜேந்திரன் (கஜன்-ஆசிரியர் பௌதிகவியல்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவபாதசுந்தரம், சிவபாக்கியம், சிவமணி, சிவமலர் ஆகியோரின் அன்புச் சகோதரியும், ப.கேசவன் (பிரான்ஸ்), இ.வசந்தராஜ் (இணுவில்), சி.சியாம்சுதன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும், கேதாரன், தனாதனன், சியாதினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.06.2013) செவ்வாய்க்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கலட்டி லேன்,கோண்டாவில். தகவல்: குடும்பத்தினர் (2923)

## தகவல் தொழில்நுட்ப மாணவர்களிற்கு புலமைப்பரிசில்

இலங்கை இளைஞர்களின் தகவல் தொழில்நுட்ப இயலள்வை மேம்படுத்தும் நோக்குடன் இலங்கை அரசின் ICTA அமைப்பானது தகவல் தொழில்நுட்ப மாணவர்களிற்கு புலமைப்பரிசில்களை வழங்கவுள்ளது. Industrial Certifications கற்கைகளை மேற்கொள்ளும் மாணவர்களிற்கே மேற்படி புலமைப்பரிசில்கள் வழங்கப்படுகின்றன. 2010 ஆம் ஆண்டு யாழ் MCS IT Campus இல் பயின்ற 129 மாணவர்கள் மேற்படி புலமைப்பரிசிலை பெற்றுள்ளனர். மேலதிக விபரங்களை இல 324 பலாலி வீதி பரமேஸ்வராச்சந்தியில் அமைந்துள்ள MCS நிறுவனத்தில் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி: 77861877. (அ-3505)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.06.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.